
# பெண்

தொகுதி : 19 இலக்கம் : 02




"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்"

# பெண்

தொகுதி : 19 இலக்கம் : 02

## 2014

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மட்டக்களப்பு.

# பெண்

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை**
*இல. 55, லேடி மன்னிங் டிறைவ்,*
*மட்டக்களப்பு.*

*தொலைபேசி இல.: 065-2223297*

**Fax No.: 065-2224657** **e-mail : suriyaw@slt.lk**

**THE WOMAN - A Journal Published by**
**Suriya Women's Development Centre,**
**No.55, Lady Manning Drive,**
**Batticaloa, Sri Lanka.**

| | | |
|---|---|---|
| ஆசிரியை | :- | கலாநிதி நதிரா மரியசந்தனம் |
| முன், பின் அட்டை ஓவியம் | :- | ரமேஷ் பிரகாஷ் |
| கணினி வடிவமைப்பு | :- | த. சங்கர் |
| அச்சகம் | :- | வணசிங்கா அச்சகம், |
| | | 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு. |
| விலை | :- | 100/= |

## வாசகர்களுடன்...

பெண் சஞ்சிகையின் இவ்வருடத்திற்கான மற்றுமொரு இதழை உங்கள் முன் கொண்டு வருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

பெண்களுக்கான மாற்றுக்கருத்தியலை மனதிற்கொண்டதான சஞ்சிகையொன்றைத் தொடர்ந்து வெளியிடுவதென்பது பல்வேறு சவால்கள் நிறைந்த பணியாகும். ஏனெனில் ஏனைய இதழ் வெளியீட்டனுபவத்திலிருந்து இது வேறுபட்டதாகும். எனினும் இப்பணியில் நாம் உறுதியாகவே இருக்கின்றோம்.

பெண்ணிய அரசியல் குறித்த கருத்தாடல்கள் இன்று மிக வேகமாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. கோட்பாடு, செயல்வாதம் ஆகிய இரு தளங்களிலும் இன்று பெண்ணிய அரசியல் முக்கியத்துவம் பெறுகின்றது. இக்கருத்தியல் சார்ந்த பெண்களும் ஆண்களும் இவ்விவாதங்களில் ஈடுபட்டு வருகின்றனர். எவ்வாறெனினும் பெண்கள் எழுதுவதென்பது மிக அரிதாகவே உள்ளது. பெண்களை எழுத்துத் தளத்திற்குக் கொண்டு வருவதும் பெண்ணெழுத்தாளர்களை ஊக்குவிப்பதும் பெண்கள் சார்ந்த செயல்வாதத்தில் ஈடுபடும் நிறுவனத்தினர் என்ற வகையில் எமது நோக்கமாகும். ஆதலால் பெண்களது ஆக்கங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றோம். இவ்விதழிலும் "பெண்" புதிய இளம் பெண்ணெழுத் தாளர்கள் பலரை இனங்காட்டியுள்ளாள். இது எமது வெற்றியாகும். பெண்ணிய நோக்கிலான கருத்துக்களைப் பரவலாக்குவதும் அவை பற்றிய விவாதங்களை உருவாக்குவதும் "பெண்"ணின் நோக்கமாதலால் அக்கருத்தியல் சார்ந்த ஆண்களது ஆக்கங்களையும் பிரசுரிக்கின்றோம்.

உங்களிடமிருந்து காத்திரமான விவாதங்களையும் விமர்சனங்களையும் எதிர்பார்க் கின்றோம். அவை எழுத்துத்துறையில் பெண்களை மேலும் ஊக்குவிப்பதாக அமையட்டும்.


-ஆசிரியர்-

## உள்ளே....


- பெண்கள் எதிர்நோக்கும்....
- போதும்
- இரண்டாம் உலகம்
- பூமாதேவி
- இருபதாம் நூற்றாண்டின்...
- கனவு காணும் காலம்
- பெண்ணியச் செயற்பாட்டாளர்...
- இந்து சமயத்தில்...
- எம் தாயே
- மட்டக்களப்பு படுவான்கரை..
- சிறுவர் துஷ்பிரயோகம்
- ஈழத்து பெண் எழுத்தாளர்...
- சிறை
- பழ மொழிகளில் பெண்கள்...
- உங்களுக்கு தெரியாது
- வாசிப்பும் பெண்களும்
- பூங்காவில் குழந்தை
- காட்டு வளம் நாட்டின்...
- கிறிஸ்மஸ் பரிசு
- குடும்ப சுகாதாரக்கல்வி...

# பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் சவால்களும்

ச. அருணாளினி



"பொதுப் போக்குவரத்துச் சாதனங்களில், பொது இடங்களில், வீட்டில் எனப் பல்வேறு இடங்களிலும் பெண்களுக்கு வன்முறைகள் இடம்பெறுகின்றன. அதிகரித்த கடன் சுமையும் பொருளாதாரப் பிரச்சினைகளும் வெளிநாட்டு வேலைவாய்ப்பும் அதிகரித்த தொலை பேசிப்பாவனையும் பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைவதை பதிவுசெய்யப்பட்ட சம்பவங்கள் காட்டுகின்றன."

பொதுவாக பால்நிலை அடிப்படையிலான வேறுபாட்டினால் பெண்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். பால்நிலைப் பாகுபாட்டின் அடிப்படை ஆணுக்கும் பெண்ணுக்கும் சமூகத்தினாலும் கலாசாரத்தினாலும் வழங்கப்படும் வெவ்வேறுபட்ட குணாம்சங்கள், பாத்திரங்கள், நடத்தைகள் என்பனவாகும். இவை உயிரியல் வேறுபாட்டுடன் தொடர்பற்றவை. இவை சமூகத்தினால் கட்டமைக்கப்பட்டவை. கலாசாரங்களினூடாக ஆண், பெண் இரு பாலாருக்கும் வழங்கப்பட்ட சமூக அங்கீகாரமாகும். இவ்வேறு பாடானது இடத்திற்கிடம், காலத்திற்குக் காலம் தேவைக்கேற்ப மாறுபடும். சமூகத்தில் குழந்தை சமூகமயமாக்கலின் ஊடாக பால் நிலை வேறுபாடுகளுக்கான அடிப்படைகள் கற்பிக்கப்பட்டு வருவதனால் பால்நிலைப் பாகுபாடு மாறாநிலை அதிகாரத்தினூடாக வலுப்படுத்தப்படுகின்றது. பால்நிலை வேறுபாட்டின் மூலம் மொத்த சனத்தொகையில் அதிகமாகப் பாதிக்கப்படுவோர் பெண்களும் சிறுவர்களுமாவர்.

கடந்தகால யுத்தச் சூழ்நிலைகள் மற்றும் அனர்த்த நிலைமைகள் காரணமாகப் பெண்களும் சிறுவர்களும் அதிகமான அளவில் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இவர்கள் உடல், உள, சமூக ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இவற்றுள் பாலியல் துஷ்பிரயோகங்கள் (Sexual abuse), வீட்டு வன்முறைகள் (Domestic Violence) என்பன அடங்கும்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வீட்டு வன்முறைகள், பாலியல் துஸ்பிரயோகம், இளவயதுத் திருமணம், இளவயதுக் கர்ப்பம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முதலான வன்முறைகள் - துஸ்பிரயோகங்களுக்கு அதிகம் உட்பட்டுள்ளனர். பொதுப் போக்குவரத்துச் சாதனங்களில், பொது இடங்களில், வீட்டில் எனப் பல்வேறு இடங்களிலும் பெண்களுக்கு வன்முறைகள் இடம்பெறுகின்றன. அதிகரித்த கடன் சுமையும் பொருளாதாரப் பிரச்சினைகளும் வெளிநாட்டு வேலைவாய்ப்பும் அதிகரித்த தொலைபேசிப் பாவனையும் பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைவதை பதிவுசெய்யப்பட்ட சம்பவங்கள் காட்டுகின்றன.

பெண்கள் அமைப்புக்கள் ஊடாகவும் நட்பு இல்லத்தின் ஊடாகவும் காப்பகத்தின் மூலமும் அரச நிறுவனங்கள், பிரதேச செயலகங்கள் என்பன ஊடாகவும் பல்வேறு பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டு நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவங்களுள் தேவைநாடும் மகளிர் அமைப்புக்கு பதிவு செய்யப்பட்ட சம்பவங்கள் 390 ஆகும். இவர்களுக்குக் குடும்ப உளவள ஆலோசனை, தனிப்பட்ட ஆலோசனை, சட்ட உதவிகள், பாதுகாப்பு இல்லத்திற்கு அனுப்புதல் போன்ற சேவைகள் ஆற்றப்பட்டு வருகின்றன.

எமது பிரதேசத்தில் பெரும்பாலும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட பெண்களில் பலர் திருமணத்திற்கு முன்னர் கர்ப்பம் தரிப்பதன் காரணமாக அவர்களின் தற்கொலை முயற்சியினைக் குறைப்பதற்காக பெண்கள் காப்பகத்தில் அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள் ஊடாக அனுமதிக்கப்படுகின்றனர். பொதுவாக சமூகத்தின் விழுமியங்கள், பால்நிலை சார்ந்த உளப்பாங்கு என்பன காரணமாக பல்வேறு சம்பவங்கள் காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்றது. 2004 ஆம் ஆண்டில் இருந்து 2014 நவம்பர் மாதம் வரை 564 சம்பவங்கள் காப்பகத்தில் பராமரிக்கப்படுகின்றன. கடந்த வருடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற பெண்கள் மீதான வன்முறைச் சம்பவங்களின் விபரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| பாலியல் துஷ்பிரயோகம் | 79 |
| வீட்டு வன்முறை | 45 |
| சிறுவர் துஷ்பிரயோகம் | 20 |
| உளவள ஆற்றுப்படுத்தல் | 03 |
| தற்கொலைக்கான முயற்சி | 02 |

அந்தவகையில் மொத்தம் 139 சம்பவங்கள் பெண்கள் காப்பகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. காப்பகத்திற்கு வந்த சம்பவங்களில் 20 வயது தொடக்கம் 40 வயதிற்கு இடைப்பட்டவர்களே கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்குக் காப்பகத்தின் ஊடாக தற்காலிக தங்குமிட வசதிகள், வைத்திய வசதிகள், உளவள ஆலோசனைகள் என்பன வழங்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றனர். இவ்வாறு இளவயதினர் பாதிப்பிற்கு உள்ளாவதற்கு பால்நிலை ரீதியான அசமத்துவ நிலை, வறுமை, தங்கி வாழ்தல் போன்றன காரணங்களாக அமைவதுடன் உலகமயமாக்கலும் தகவல் தொழில்நுட்பமும் அடிப்படைத் தளமாக அமைகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் ஒக்டோபர் மாதம் வரை பதிவு செய்யப்பட்ட பெண்கள் மீதான பாலியல் வன்முறைச் சம்பவங்கள் பற்றிய விபரங்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| பாலியல் வன்முறை வகைகள் | மட்டக்களப்பில் பதியப்பட்ட சம்பவங்கள் (பெண்கள் அமைப்புகளுக்கு) | அம்பாறை மாவட்டத்தில் | வவுனியா மாவட்டத்தில் | மன்னார் மாவட்டத்தில் | முல்லைத் தீவு மாவட்டத்தில் | கிளிநொச்சி மாவட்டத்தில் | யாழ்ப்பாண மாவட்டத்தில் |
|---|---|---|---|---|---|---|---|
| பாலியல் துஷ்பிரயோகம் | 22 | | 06 | 16 | 02 | | |
| பாலியல் வன்முறையும் கொலையும் | | | | | | | 03 |
| பாலியல் வல்லுறவு முயற்சி | 06 | 03 | | 03 | | 01 | |
| பாலியல் வல்லுறவு | 02 | 04 | 16 | 05 | 04 | | 03 |
| சிறுமிகள் மீதான பாலியல் வல்லுறவு | 06 | | 24 | | | 08 | 22 |
| சிறுமிகள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் | 01 | 12 | | 25 | 04 | | 16 |
| பதியப்பட்ட மொத்தச் சம்பவம் | 37 | 19 | 46 | 49 | 10 | 09 | 44 |

கடந்த காலப்பகுதிகளில் யுத்த, அனர்த்த நிலைமைகளின்போது இவ்வாறான பிரச்சினைகள் அதிகமாக ஏற்பட்டிருந்தாலும் தற்போதைய சூழ்நிலைகளில் சமூகக் கட்டுப்பாட்டிற்குள் இருந்து சமூகக் கட்டமைப்பு சீர்குலையுமளவிற்கு வன்முறையும் பாலியல் துஷ்பிரயோகமும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. எது சரியானது எனத் தேர்வு செய்யாமல் பின்பற்றுகின்ற நிலைமையும் சமய ஒழுக்க விழுமியங்களில் இருந்து விடுபட்ட நிலைமையும் குடும்ப வன்முறைகளுக்கு அடித்தளமாக அமைகின்றன. அத்துடன் கணவன், மனைவி, பிள்ளைகளுக்கிடையிலான குடும்ப உறவின் சீரற்ற தன்மையும் காணப்படுகின்றது. பொருளாதாரத் தேவையும் அவர்களுக்கிடையிலான உறவு வகிபங்கில் ஏற்பட்ட மாற்றமும் இதற்குக் காரணமாக அமைகின்றன. கூட்டுக் குடும்ப அமைப்பில் இருந்து மாறி தனிக்குடும்ப அமைப்பில் இயந்திர மயமான வாழ்க்கை, அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை, புரிந்துணர்வு இன்மை, குடும்பச் செயற்பாடுகள் திட்டமிடலுக்கான நேரம் ஒதுக்கப்படாமை குறிப்பாக குழந்தைகளின் நலன், கல்வி, சுகாதாரம், உளநலம் சார்ந்த விடயங்களைக் கலந்தாலோசிக்காமை இதன் காரணமாக குழப்ப நிலைமைகள் குடும்பத்தில் உருவாகின்றன. விட்டுக்கொடுப்பின்மை, சந்தேகம், மன அழுத்தம், கோபம், அதிகரித்த வேலைப்பழு இவை போன்ற காரணங்கள் பிரச்சினைகளுக்கு அடிப்படையாக அமைகின்றன. பெரும்பாலான சம்பவங்களை ஆராய்கின்றபோது காதலிக்கும்போது இருந்த விட்டுக்கொடுப்பு திருமணத்தின் பின் தொலைந்து விடுகின்றது. இதன் விளைவு விவாகரத்திலும் தற்கொலை முயற்சிகளிலுமே முடிவடைகின்றன.

எமது சமூகக் கட்டமைப்பில் ஆணுக்கென்றும் பெண்ணுக்கென்றும் வேலை பாகுபாடாகவே கொடுக்கப்படுகின்றது. வீட்டு வேலைகள் முழுவதும் பெண்ணுக்குரியதாகப் பொறுப்பாக்கப்பட்டுள்ளது. இதனாலேயே பல குடும்பங்கள் சீரழிந்து

போயுள்ளது. கணவன் மனைவிக்கிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இதன் விளைவு பிரிவாகின்ற நிலையில் அவர்களது குழந்தைகளின் வாழ்வு கேள்விக்குறியாகின்றது. இதிலிருந்து விடுதலையடைய பெண்களின் தலையில் சுமத்தப்பட்ட வேலைகள் பகிரப்படுகின்ற போது பல நன்மைகள் எம்மை அறியாமலேயே கிடைக்கும். இதனூடாக பால்நிலை சமத்துவம் ஏற்படும். வீட்டில் பெண்களுக்கு ஓய்வு கிடைக்கும். இருவரும் சேர்ந்து செயற்படுவதால் நேரம் மிகுதியாகும். அன்பும் நெருக்கமும் விட்டுக் கொடுப்பும் தோன்றும். இதன்மூலம் உறவுகள் கட்டமைக்கப்படும். பிரச்சினைகள் இன்றி குழந்தைகள் சிறந்த முறையில் பராமரிக்கப் படுவர். மனம் விட்டுப் பேசி குடும்பத்தை ஆற்றுப்படுத்தும் ஆற்றல் தானாகவே ஏற்படும். குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் முன்மாதிரியாக அமையும்.

எனவே பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் இருந்து விடுதலை பெறுவதாயின் அனைவரது உளப்பாங்கிலும் மாற்றம் ஏற்பட வேண்டும். உளப்பாங்கில் மாற்றம் ஏற்பட வேண்டுமாயின் இளம் தலைமுறையினரிடையே பால்நிலை சமூகமயமாக்கல் ஊடாக பல்வேறு நிலைமைகளிலும் உணர்வுபூர்வமானதாக மாற்றம் ஏற்பட வேண்டும். அப்போதே நல்லதொரு சமுதாயம் உருவாகும். ஆண், பெண் என்ற வேறுபாடின்றி பெண்ணும் சிந்திக்கக் கூடியவள், செயலாற்றக் கூடியவள், வெவ்வேறுபட்ட திறமைகளை உடையவள், உணர்வுகளை உடையவள் என்ற எண்ணப்பாங்கும் ஆணைப் போன்று பெண்ணும் ஒரு உயிரி என்ற எண்ணமும் வளர வேண்டும். அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவிற்கு ஈடுகொடுக்கக் கூடியவாறு இருவரும் வேலைத்தளங்களில் வேலை செய்வதுடன் வீட்டுப் பொறுப்பு, கல்வி, பிள்ளை வளர்ப்பு போன்றவற்றிலும் இணைந்தால் நிறைவாக வாழமுடியும். ஆண்களை முதன்மைப்படுத்தி சமூகம் கட்டமைத்துள்ள மனப்பாங்கினை மாற்ற வேண்டும். இதன்மூலம் உடலியல், உளவியல் ரீதியான பாதிப்பில் இருந்து விடுதலை பெறலாம்.

# போதும்



உதடுகள் பேசவில்லை
உள்ளம் உலர்ந்துவிட்டது.
துயர் நிறைந்தநெஞ்சங்கள்
கவலைகளைப் பகிர்ந்துகொள்கிறது
கண்களால் மட்டுமே.

வல்லரசுகளின் வாலில் தொங்கிய
கண்மூடித்தனமானநம்பிக்கை
விவேகத்தை விற்றகொடுமைஅது......

எத்தனைவருடங்கள்
சுமந்துதிரிந்தது
சிலுவையல்ல கிரீடம்
கண்ணாடிக் கிரீடம்

இன்று நொறுங்கிய
ஒவ்வொருகண்ணாடித் துண்டுக்குள்ளும்
தெரிவது சிதையுண்டஎம் உடல்களும்
ஊனமாக்கப்பட்டதமிழ் இனமும்.

ஒருகாலைப் பொழுதுடன்
மூதாட்டியான
பலப் பலதாய்மார்கள்.

இழந்தபிள்ளைக்கு
சிறுமெழுகுதானும்
ஏற்றமுடியாமல்,

...........................

விற்பனையாகின்றன
தேசியக்கொடிகள்.

**-விஜயலக்ஷ்மி**

-சிறுகதை-

"டரிங் டரிங்" தொலைப்பேசி அழைப்பு மணி அனைவருக்கும் ஆவலை ஊட்டியது. வார்டன் "மாலா உன்னுடைய தாய் கூப்பிடுகிறார்" என அவளது நண்பியிடம் ரிசீவரை கொடுத்தார். ஆம், அன்று செவ்வாய்கிழமை தீபாவளி பண்டிகை. அன்றைய தினம் நிவேதா ஹாஸ்டலில் அனைத்து மாணவியர்களுக்கும் தத்தமது தாய்மார்களிடமிருந்து தொலைப்பேசி அழைப்புகள் வரும். அதற்காக அனைத்து மாணவிகளும் உற்சாகத்துடன் காத்திருந்தனர் அவளை தவிர;.

அவள் ஒரு ஓரமாய் 'ஹாஸ்டலின் மொட்டை மாடியில் வானத்தை வெறித்து நோக்கினாள். அன்றைய வானம் வெறுமென மேகமுகில்களால் மூடியிருந்தது அவள் வாழ்வைப் போலவே.



# இரண்டாம் உலகம்

ஷப்னாஸ் தஸ்லீம்

அழகிய மழலையாக பூமியில் உதித்தாள். அவளது அழுகுரல் கூட இனிமையாக இருந்ததால் அவளுக்கு மதுர யாழினி என பெயரிட்டனர். அவள் பிறந்த வேளையோ என்னவோ அவளது தாய் சுவர்க்கம் சென்றுவிட்டார். இதனால் அவளது தந்தை சுந்தரம் தன் மனைவி உயிரை பறிக்க வந்த காலன் என இவளை தூற்றி ஒரு அநாதை ஆசிரம தொட்டிலில் யாருக்கும் தெரியாமல் போட்டுவிட்டு அவர் வேறு பெண்ணுடன் அவரது வாழ்க்கையை ஆரம்பித்தார்.

சிறு வயதிலேயே ஆசிரமத்தில் வளர்ந்த இவள் தாயின் அன்பும் தந்தையின் அரவணைப்பும் இல்லாததால் தன் கவலைகளை யாரிடம் பகிர முடியாமல் தன் மனதினுள் புதைத்தாள். யாழினி படிப்பிலும் பாட்டுப்படிப்பதிலும் அவள் தாயைப் போலவே கெட்டிக்காரி. ஆகையால் தனது முயற்சிகளையும் கவனத்தையும் படிப்பில் மட்டும் செலுத்தி தன் கவலைகளை மறக்க முயற்சித்தாள்.

அன்றைய நாள் அவளுக்குப் பதினோராம் தர சாதாரண பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின. யாழினி குருணாகலை மாவட்ட ரீதியில் சிறப்பாக சித்தியடைந்திருந்தாள். அவளது பெறுபேறு அனைவருக்கும் மகிழ்ச்சியைத்

தந்தாலும் அவளுக்கு அது கவலையை தந்தது. ஏனெனின் அவள் ஆசிரமத்தை விட்டு நண்பர்களை மட்டுமல்லாது சிவகாமி டீச்சரையும் விட்டு விலக வேண்டியிருந்தது. சிவகாமி டீச்சர் இவளிடம் மிகுந்த அன்புடனும் பாசத்துடனும் இருப்பார். இவளது வாழ்க்கைக்கு தேவையான நிறைய அறிவுரைகளை வழங்குவார்.

யாழினியின் சிறப்பான பெறுபேறுகளால் அவளுக்கு கொழும்பிலுள்ள பெரிய பாடசாலை ஒன்றில் புலமைப்பரிசில்களுடன் உயர்தரம் கற்க வாய்ப்பு கிடைத்தது. அவளுக்கு அதில் ஆனந்தம் தான். ஏனெனில் அவளது வாழ்வில் அது அவளது வெற்றிக்கான முதற்படியாக இருந்தது. ஆனால் அவளுக்கு ஆசிரமத்தை தனது உலகமாக்கி வாழ்ந்தாள். அதை நிரந்தர மாக பிரியும் நிலை ஏற்பட்டதென மனம் நொந்தாள். சிவகாமி டீச்சரின் அறிவுரைக்கு இணங்க ஆசிரம வாழ்வை துறந்து ஸ்டல் வாழ்வை ஏற்றாள்.

அங்கு அந்தச் சூழல் அவளுக்கு முற்றிலும் வேறாக இருந்தது. ஆசிரமத்தில் அன்புடனும் கனிவுடனும் நடக்கும் ஆசிரிய மற்றும் சக தோழிகளுக்கு மத்தியில் வளர்ந்த யாழினிக்கு கண்டிப்பும் தண்டனையும் கடுகடுப்பான வார்ட னின் முகமும், சுயநலம் கொண்ட மாணவிக ளுக்கு மத்தியில் அவள் போராடினாள். அவளுக்கு மீண்டும் அவளது வாழ்வு காரிருளில் மூழ்கியதாக எண்ணினாள். சில தினங்கள் கழிந்தன.

ஒருநாள் காலை அனைவரும் படுக்கை விட்டு எழும்பும் நேரத்தில் இவளும் எழுந்தாள். அப்போது அங்கு வந்த இவளது வார்டன் "இன்னும் நீ எழுந்திருக்கவில்லையா? சீக்கிரம் எழுந்து சுத்தம் செய் இங்கே" என்று கடுகடுத்து விட்டு சென்றார். இந்த மேடம் ஏன் எப்பவுமே கடுகடுத்த முகத்துடனே இருக்காங்க. என் சிவகாமி டீச்சர் எவ்வளவு அன்பா இருப்பாங்க. சிவகாமி டீச்சர் ;. கண்களின் வெளியே நீர் எட்டிப் பார்க்க முயற்சித்தது. அவ்வேளை யாரோ அவளை தட்டியது போல் இருந்தது. திரும்பிப் பார்த்தாள் அழகான மஞ்சல் நிறத்தையுடைய மேனியை கொண்ட ஒருத்தி புன்னகைத்து கொண்டு இருந்தாள். அவள் பெயர் ரதியாம்.

**அப்போது கண்களிலிருந்து**

**நீர் எட்டிப்பார்த்தது.**

**ஆனால் அது அதுவரை**

**அவளுக்குண்டான**

**வேதனைக் கண்ணீர் அல்ல...**

**இரண்டாம் உலகத் தில்**

**இன்னொரு தாயை பெற்ற**

**களிப்புடன் வந்த கண்ணீர்...**

புதிதாக அந்த சிறைக்கு வந்தவளாம். அவள் நிறத்தை போலவே அவளது குணமும் யாழினியை வெகுவாக ஈர்த்தது. இருவரும் இணைபிரியா நண்பர்களாயினர்.

ஓருநாள் ரதியின் தாயார் அவளை பார்க்க அங்கு வந்தார். ரதி தனது நண்பி யாழினியை தன் அம்மாவிடம் அறிமுகம் செய்தாள். அவளது தாய் ரதியை போலவே அன்பிலும் அழகிலும் சிறந்தவர். யாழினியை அழைத்து "உன் அப்பா அம்மா எங்கே இருக்குறாங்க?" என்றார். யாழினியோ "எனக்கு உலகமே என்னுடைய ஆசிரமம் தான்" என்றாள். ரதியின் அம்மா ஏதோ புரிந்தவராய் இவளை பார்த்து ஆறுதல் கூறிவிட்டு அங்கிருந்து சென்றார். தீபாவளி பண்டிகை வந்தது. அனைவரும் புது ஆடைகள் அணிந்து தன் தாயின் தொலைபேசி அழைப்பு மணிக்காக காத்திருந்தனர். இவளோ தன்னிடமிருந்த ஆடை களிலேயே புதிதாக தென்படுகின்ற ஒன்றை அணிந்து கொண்டு மொட்டை மாடியில் யாருக் கும் தெரியாமல் இருந்தாள். அவள் யோசித்தாள் அவளுக்கு மட்டும் அம்மா இருந்திருந்தால்; அந்த ஏக்கம் அவள் கண்களிலிருந்து நீராக வெளிப்பட்டது. அவளை தட்டி சுயநினைவுக்கு திருப்பினாள் ரதி.

"என்ன யாழினி இது பழைய ஆடை உடுத்திருக்குற நான் எவ்வளவு நேரமா உன்ன தேடுறன் இந்த பார்சலை தாரத்துக்கு"

"என்ன இது ரதி?"

"திறந்து பாரு அம்மா அனுப்பினாங்க உனக்கு" திறந்தாள். அழகிய ஊதா வண்ணத்திலான புத்தம் புதிய ஆடை ஒன்று இருந்தது. கண்ணீர் மல்க ரதியைப் பார்த்தாள். ரதி அதை புரிந்தவளாய் சீக்கிரம் போ. இது போட்டுக்கிட்டு கீழே வா என்று கூறி சிரித்துக் கொண்டு சென்றாள். இவள் உடனே அவ் ஆடையை போட்டு கண்ணாடி முன் நின்று தன் விம்பத்தை ரசித்தாள். இதுவரை அவள் கண்டிராத தோற்றம் அது. மதுரயாழினியின் உண்மையான அழகு இருந்ததை அவள் கண்டாள்.

"யாழினி உன்னோட அம்மா பேசுறாங்க" வார்டனின் கடுகடுத்த குரல். அம்மாவா? கீழே ஓடினாள். ரிசீவரை காதில் வைத்தாள். "தீபாவளி வாழ்த்துக்கள்" ரதியின் தாய். ரதியை நோக்கி னாள். புன்னகையுடன் பேசு என சைகை காட்டி னாள் ரதி. பேசிவிட்டு வைத்தாள். அப்போது கண்களிலிருந்து நீர் எட்டிப்பார்த்தது. ஆனால் அது அதுவரை அவளுக்குண்டான வேதனைக் கண்ணீர் அல்ல............ இரண்டாம் உலகத் தில் இன்னொரு தாயை பெற்ற களிப்புடன் வந்த கண்ணீர்...........

---

# பூமாதேவி

மணல்வெளியில் காற்றின் தீற்றலென
அம்மாவின் அடிவயிற்றுக் கோடுகள்
குஞ்சு நண்டின் தடங்களைத் தரித்த
மேல் வயிறு
பூஞ்சை ரோமங்களை
வருடியபடியே கேட்கிறாள்
அம்மா எப்படி நீ
பெத்து உயிர் பிழைச்ச




இது என்ன அதிசயம்
இந்த உலகத்தையே
உன் பாட்டிக்குப்
பாட்டியேதான் பெத்தாள்

கோழி முட்டை இடுவதைப் போல
பாட்டி உலகை இடுவதை
நினைத்தபடியே
உறங்கிவிடுகிறாள் சிறுமி

கனவில்
பனிப் புயலும்
அலைச் சீற்றமும்
அருவியின் குதூகலமும்
கானகக் கொண்டாட்டமும்
எரிமலையின் பெருவெடிப்புமாகிறாள்.

- மாலதி மைத்ரி




**பேராசிரியர்.செ.யோகராசா**

நவீன தமிழ்க்கவிதை வளர்ச்சியில் ஏறத்தாழ எண்பதுகள் தொடக்கம் ஈழத்துக் கவிஞைகள் முக்கியம் பெற்று வந்திருப்பது இன்று வரலாறாகிவிட்ட விடயமாகும். இரண்டாயிரம் ஆண்டுக்காலமாக சொல்லப்படாத சேதிகளை முதன்முதலாக வெளிப்படுத்தியோர் ஒரு புறத் திலும் புலம்பெயர்ந்த 'மறுபாதிகள்' இன்னொரு புறத்திலும் 'பெயரிடாத நட்சத்திரங்க' ளான போராளிகள் மற்றொரு புறத்திலுமாக அவ்வரலாற்றை உருவாக்கி வந்துள்ளமை அனைவருமறிந்த தொன்று. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தஸாப்தங்களிலும் மூன்று கவிஞைகள் மூன்று வேறு தளத்திநின்று தனித்துவமான தடங்களைப் பதித்திருப்பது பலருமறியாத தொன்று. இம்மூவரு ளொருவர் திருமதி.கோ.ந.மீனாட்சியம்மாள் மற்றொருவர் ஞானாம்பிகை. இன்னொருவர் ஆ.சு.வித்தியாவல்லியம்மாள்!

மேற்குறிப்பிட்டோருளொருவரான மீனாட்சியம்மாள் மலையகத்தைச் சேர்ந்தவர். மலையகத்தில் வாழ்ந்த இந்தியத் தொழிலாளர் கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தும் நோக்கில் பாடல்கள் இயற்றியவர். இத்தகைய பாடல்கள் கொண்ட தொகுப்பு 'இந்தியத் தொழிலாளர்களது இலங்கைவாழ்க்கையின் நிலைமை' (1940) என்ற பெயரில் வெளிவந்துள்ளது. தொகுப்பின் முகவு ரையில் அவர் பின்வருமாறு குறிப்பிடுவது கவனத்திற்குரியது:

"இலங்கைவாழ் இந்தியர்களின் நிலைமை வரவர மிகவும் மோசமாகிக் கொண்டே வருகின்றது. இலங்கைவாழ் இந்தியமக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்கள் உரிமை களை நிலைநாட்டுவதற்காக தீவிரமுடன் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. இந்திய மக்களுக்கு எதிர்காலத்தில் வரவிருக்கும் ஆபத்தை உணர்த்தி அவர்களிடையே அதிலும் முக்கியமாக இந்தியத் தோட்டத் தொழிலாளர்களிடையே பிரசாரம் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். அத்தகைய பிரகாரம் பாட்டுக்கள் மூலமாகச் செய்யப்படின்

அதிகம் பயனளிக்கும். இதை முன்னிட்டே இன்று இலங்கை வாழ் இந்தியர் களின் நிலைமையைப் பாட்டுக்கள் மூலமாகச் செய்யப்படின் அதிகம் பயனளிக்கும். இதை முன்னிட்டே இன்று இலங்கை வாழ் இந்தியர் களின் நிலைமையைப் பாட்டுக்கள் மூலம் எடுத்துக்கூற முன்வந்துள்ளேன். இந்தியர்களை தூக்கத்தில் ஆழ்ந்துவிடாது தங்களது உரிமை களை நிலைநாட்டுவதற்கு தீவிரமாகப் போராடும் படி அவர்களை இப்பாட்டுக்கள் தட்டியெழுப்ப வேண்டுமென்பதே எனது அவா"

மத்தியதர வர்க்கத்தினரை மனங்கொண்டு தேசிய ஒற்றுமை பற்றியும் சமூகக் குறைபாடுகள் பற்றியும் பாடப்பட்டு வந்த சூழலில் மலையகத்தில் வாழ்ந்த இந்தியத் தொழிலாளர் பற்றியும் அவர்கள் மத்தியில் போராட்ட உணர்ச்சியை ஏற்படுத்துவது பற்றியும் பாட முற்பட்ட மீனாட்சியம்மாளின் குரல் முற்றிலும் புதியதே. இன்னும் நுணுக்கமாக நோக்கினால் அது சமூக, அரசியல் நோக்கிலான முதல் எதிர்ப்புக்குரலாகும். தொகுப்பிலுள்ள மூன்றாவது பாடலுக்கு மேலுள்ள உபதலைப்பு "இலங்கையர்கள் இந்தியர்களை இந்தியாவிற்கு விரட்ட வேண்டுமென்று சொன்னதற்காக எதிர்த்துப் பாடிய பாடல்கள்" என்றிருப்பதும் கவனத்திற் குரியது. எடுத்துக்காட்டாக, பின்வரும் பாடற் பகுதி அமைகின்றது:

சிங்கள மந்திரிகள் கூற்று மிக
சீருகெட்ட தென்று சாற்று
சங்கடமே நேருமென தோற்று திந்திய
சமூகம் நெருப்பாய் வரும் காற்று
நன்றிகெட்டு பேசும் மந்திரிமாரே — உங்கள்
நியாயமென்ன சொல்லுவீரே
இன்றியமையாதவொரு போரே செய்ய
இடமுண்டாக்குகிறீர் நீரே

எதிர்ப்பு நிலையில் சாத்வீகப் போராட்டத்திற்காக, தொழிலாளரிடம் அழைப்புவிடுக்கப்படுகின்றது:

**அனுபல்லவி**

தொழிலாளர் ஒன்று கூடுங்கள் இந்த நிமிஷமே
துணிந்து வழியைத் தேடுங்கள்

**சரணம்**

சிங்கள மந்திரிகள் செய்திடும் சூழ்ச்சி
சேதியிதல்லாமல் வேறில்லை காட்சி
பொங்கவே தொழிலாளர் ஒற்றுமை மாட்சி
பொலிவு கொண்டாலவர் அடைகுவர் தாட்சி
(தொழி)

பண்டிதரிடமிருந்து பாமரரிடம் கவிதை யைக் கொண்டுசென்ற பாரதி, அவர்களுக்காக இசைப்பாடல்களையும் மெட்டுக்களிலமைந்த பாடல்களையும் உருவாக்கினான். மீனாட்சியம் மாளின் பாடல்களும் அவ்வாறமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. மேலுள்ள பாடல்கள் இசைப் பாடல்களாகவிருப்பது கண்கூடு. அவ்வாறமைந்த பாடல்கள் பொதுமக்களுக்குப் பரிச்சயமான மெட்டுக்களிலமைந்திருந்தன. உ-ம் :

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி" என்ற மெட்டு
"ஆடு பாம்பே" என்ற மெட்டு
"தங்கக் குடமெடுத்து" என்றமெட்டு
"கல்லார்க்கும் கற்றவர்க்கும்" என்ற மெட்டு
கும்மி மெட்டு

மேற்குறிப்பிட்ட மீனாட்சியம்மாள் அறியப் பட்டளவிற்கு கவிஞை ஞானாம்பிகை அறியப் படவில்லை. மயிலிட்டி வாசியான ஞானம்பிகையின் பாடல்கள் இன்னொரு வழியில் செல்பவை. அவரது பாடல்கள் 'மேலைத்தேய மதுபான வேடிக்கைக்கும்மி' என்ற பிரசுரமாக வெளிவந்து ள்ளது. அதில் வெளிவந்த ஆண்டு குறிப்பிடப்பட வில்லை. இருபத்தைந்தளவிலே (1925) அவை அது வெளிவந்திருக்க வாய்ப்புள்ளது. (இப்பிரசுரத்திலிடம் பெற்றுள்ள பாடலொன்றிலே கூறப்படும் சம்பவ மொன்றிலே ஆண்டு பற்றிய குறிப்பொன்றுள்ளது)

நூலின் தலைப்பிலே மதுபானம் என்றிருப்பினும் கவிஞை முக்கியத்துவம் கொடுத்த பொருள் வேறொன்று அது முற்றிலும் புதியபொருள். சமகாலத்து போலியான தேசோபகாரிகளை இனங்காட்டுவதில் - கண்டிப்பதில் - நையாண்டி செய்வதிலேயே கவிஞையின் கவனம் குவிந்து ள்ளது. சமகால சமூகத் தேவைகளை அதிகளவு பாடிய பாவலர் துரையப்பாபிள்ளை உட்பட, உதிரி

யான கவிதைகள் பாடிய எவருமே இப்பொருள் பற்றிப் பேசினாரல்லர். கவிஞை, நூலின் விஞ்ஞா பனத்தில் பின்வருமாறு கூறியிருப்பது இவ்வேளை கவனத்திற்குரியது:

"......நாமிங்கே கண்டிப்பது, தற்போது இக்குடிவகைப் பதார்த்தங்களை ஊரை விட் டோட்டிவிடவேண்டுமென்னும் தேசோபகாரிகள் தேசபக்தர்கள், தேச நன்மைக்காகப் பாடுபடு கின்றவர்கள், என்று வெளிப்பட்டுக் கங்கணங்கட்டி நிற்பவரையே. இவர்கள் ஸ்ரீமான் காந்தி, திலகர், சரோஜினி தேவியாகிய மகாத்மாக்கள் போல, உடல் பொருள் ஆவி மூன்றையும் உலகத்துக் காய் ஒப்புக்கொடுத்து நன்மை செய்யச் சித்தங் கொண்டவர்களல்லவே. தம்மைச் சனங்கள் தேச நன்மைக்காய் பாடுபடும் மகாத்துமாக்க ளென்று நம்ப வேண்டுமென்ற அவாவினால் வேறு வேஷமிட்டு நடிப்பவரே. இவர் நேரத்துக்குத்தக்க படி வேஷம் போடுவர் ஆடுவர். ஆதலின், கெட்ட குடிவகையை ஊராற்றுரத்துவதிலும் இவரன்னாரை ஊராயரு வருத்து தள்ளிவிடுவதே உசித மென்று நாம் துணிந்து சொல்லுகின்றோம். குடிவகைப் பதர்த்தங்களுக்கு நாம் பயப்பட வேண்டியதில்லை. இவர்களுக்கே நாமெல்லோரும் பயப்பட வேண்டியிருக்கிறது..."

மேற்கோள் சற்று நீண்டதாயினும் கவிஞை யின் பொருட் புதுமை எத்தகைய தென்பதையும் ஒப்பீட்டுப் பார்வையையும் ஆக்ரோஷ உணர்ச்சியையும் மனத்துணிவையும் அங்கதப் பாங்கையும் அது வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

கவிஞை எழுதியுள்ள 123 பாடல்கள் கொண்ட முற்குறிப்பிட்ட பிரசுரத்திலே 57 பாடல்கள் தேசோபகாரிகள் பற்றியவை என்பது வியப்பிற்கும் சிந்திப்பதற்குமுரிய விடயமாகின்றது. ஏனெனில், போலித் தேசோபகாரிகள் அந்தளவிற்கு அதிக எண்ணிக்கையினராக இருந்துள்ளரென்பதை நாம் அறிதற்கான வாய்ப்புகள் இன்றுவரை அரிதாகவே இருந்துள்ளது. கவிஞை அவ்விடயத் திற்கு முதன்மையளித்திருப்பதனூடாகவே போலித்தேசோபகாரிகள் பலர் அன்றைய கால கட்டத்தில் தலைதூக்கியிருந்தரென்பது புலப்படு கின்றது. ஆக, முக்கியமான இவ்விடயம் பற்றி கவிஞை எழுதியுள்ள பாடல்கள் சிலவற்றை இங்கு எடுத்தாள்வது பயன்மிக்கது. அவை பின்வருமாற மைகின்றன:

சாதுசன் யாசியென வேஷ மிட்டூரில்
தன்கா ரியத்தை முடிப்ப ரிவர்களைத்
தேசோப காரிக ளென்றுஞ் சொலலாமோ
சிந்தித்து நீரிதைப் பாருமடி

ஊரிற் தமக்கு மதிப்பொன் றுண்டாக்கு
முபாயத்தைக் கொண்டு பலவேஷம் போட்டிவர்
ஆரினும் மேலவர் தேசோப காரிக
ளாமென ஆடிறார் பாருமடி

தேசநன் மைக்கென்று சல்லியும் வேண்டுவார்
தேசோப காரிகள் என்று முழங்குவார்
பேசுவ தன்றித் தம்மைச் சதமொன்றும்
பிரிய விடாரிவர் பாருமடி

.................................

இப்படிப் பட்டவ ராலுல கத்துக்
கிருக்குங் கெடுதிக் களவிலை யாதலால்
இப்படிப் பட்டோரை யூரைவிட்டோட்டினால்
எல்லார்க்கும் நன்மையே பாருமடி
மட்டுக்களப்பு வயித்திய லிங்கனை
மக்களைப் போலவ ரைத்தே சோபகாரச்
சிட்டரென்றாலும் தரும்பொரு ளால் நன்மை
செய்கிற ரல்லவோ பாருமடி

.................................

வாக்கு மனங் காயமொத்து நயஞ்செய்
மனுஷரே தேசோப காரியல் லால் வேஷம்
போட்டு நடிப்பவர் தேசோப காரரா
பிரபல்ல வம்பரே பாருமடி"

போலித் தேசோபகாரிகளென்பவர் பற்றிப் பேசிய பின்னர் மதுபானத்தால் ஏற்படும் தீமைகள் பற்றி கவிஞை குறிப்பிடுவார் அதன் பின்னர் யூரி மார்பற்றிப் பேசுகின்றார். ஆங்கிலரது ஆட்சியில் நீதிமன்றம் முக்கியம் பெற்ற சூழலில் யூரிமாரும்

முக்கியம்பெற்றிருப்பது வியப்பிற்குரியதன்று. யூரி மாராக வைக்கத் தகாதவர் யாவரென்பது பற்றிக் கவிஞை அலசுகின்றார். இதுபற்றியும் பாவலர் துரையப்பாபிள்ளை முதலானோர் பேசவில்லை.

தொடர்ந்து, பாரம்பரிய உடை, உணவு முறைகளிலேற்பட்ட மாற்றங்கள் குறித்து விரிவாக விளக்குகின்றார் கவிஞை. ஏனைய கவிஞர்கள் சுருக்கமாகவே அவை பற்றிக் குறிப்பிட்டிருந்த னர். இறுதியாகப் பின்வருமாறு முடிக்கின்றார்:

பொய்வேட மிட்டுல கத்தரை யேய்க்கும்
புரட்டரைப் பற்றிச் சொலவந்தே னன்றி நான்
நல்ல மனுஷரிருந்தாலவரை
நனைக்க வரவில்லைப் பாருமடி

பன்றியிற் சோனகர் கொண்ட பகையுமென்
பாலிதைப் பாடினே னென்று பிரபுக்கள்
கொண்ட பகையுஞ் சரியிதற் காய்மனம்
கொஞ்சமும் நானஞ்சேன் பாருமடி

இன்னும் நான் சொல்ல வனேகமிருக்கு
திரண்டாம் பாகத்தில் விபரமாய் நானதைத்
திண்மையாய்ச் சொல்லுவே னென்னிலேகோபம்
சிறிதும் வேண்டாமென்று செப்புமடி

வாழி

கோ வாழி யங்கவர் நீதிநெறிவாழி
கோதின் மறையவரினம் வாழி பொய்த்
தேசோபகாரிகள் பொள்ளலைக் காட்டிடுந்
தெய்வப் புலவர் கணம் வாழி

மேலைத் தேய மதுபானம் வாழியதை
விற்குஞ் சாய்ப்புப் பெரியோர் வாழி
சீலக் குருவடி வாழியிக் கும்மி
செகத்தி லனு தினமும் வாழி.

மேற்குறிப்பிட்ட கவிஞைகளிருவரிடமிருந் தும் முற்றிலும் வித்தியாசமான தடத்தில் செல் கின்றார். திருநெல்வேலி ஆ.சு. வித்தியாவல்லியம் மாள். இவர் இயற்றி வெளியிட்ட பிரசுரம்: 'ஸ்ரீமான் சேனாதிராசா கொலை விசித்திரக்கவிகள் (முதலாம் பாகம்)'

மேலுள்ள தலைப்பினைத் தொடர்ந்து பின்வரும் குறிப்பு இடம்பெறுகின்றது:

"இது முன்னர் வெளிவந்த புத்தகங்களி லும் பார்க்கச் சரித்திரம் தொடர்பாக வீரம், சோகம், தாபம் முதலிய சகல விபரங்களும் அடங்கிய வெண்பா, விருத்தம், கலித்துறை, கும்மி சிந்து முதலிய நூதனமெட்டுக்களாற் பார்ப்போர் மனதைப் பிரமிக்கச் செய்யத்தக்க விதமாகவியற்றியது. தாசி நடனம், பணவாஞ்சை, அன்னியர் நேசம், கூடா நட்பு முதலியவற்றில் வருங்கேடு...... நன்கு விளங்கும்......"

(புள்ளியிட்ட இடத்தில் எழுத்துக்கள் அழிந்துள்ளன)

சேனாதிராசா என்பவர் கோப்பாய் ஊரைச் சேர்ந்தவர் உடையார் அல்லது மணியகாரர் பரம் பரையில் வந்தவர் பரோபகாரி செல்வாக்கு மிக்கவர் தேவதாசிகளால் கோவிலிலேற்பட்ட அசம்பாவிதம் காரணமாக, திருவிழா பார்க்கச் சென்றவேளை திட்டமிட்டுக் கொலை செய்யப்படுகின்றார். வழக்கு நீதிமன்று செல்கின்றது. (தீர்ப்பு பற்றியது இரண்டாம் பாகம்' அது வெளிவந்ததா என்று தெரியவில்லை)

மேற்குறிப்பிட்ட சம்பவத்தைப் பொருளாகக் கொண்ட இப்பிரசுரம் 'விசித்திரக் கவிகள்' என்று அழைக்கப்பட்டாலும் எழுத்து இலக்கிய மரபில் நோக்கும்போது உள்ளூர்ப் பிரமுகர்களைப் பாடு கின்ற பிரபந்த இலக்கிய மரபினை (உ-ம் : கதிரைவேலன் கோவை தண்டிகைக் கனக ராயன் பள்ளு) சார்ந்ததாகவுள்ளது. என்று கூறமுடியும். எனினும், அதனைவிட, வாய்மொழி இலக்கிய மரபில் உருவாகின்ற 'கொலைச்சிந்து' பாடல் மரபுடன் பொருத்திப்பார்ப்பதே பொருத்த மானது. தமிழகத்தில் இவ்வாறான கொலைச் சிந்துகள் வாய்மொழி பாடல் மரபில் அதிகமெழுந் துள்ளன. ஈழத்தில் மலையகத்தில் ஒரு சில எழுந் திருக்கின்றன. உதாரணமாக, எஸ்.எம்.ராஜப்பா

என்பவர் பாடிய 'கட்சிப் போராட்டக்குரல்' இரண்டாம் பாகத்தில் "12 நபர்களின் படுகொலைப் பாடல்கள் அடங்கியுள்ளன". அறுபதுகளளவிலே யாழ்ப்பாணத்தில் 'கோகிலாம்பாள் கொலை வழக்கு' பிரசுரமாகின்றது!

வித்தியாவல்லியம்பாள் இயற்றிய விசித்திரக் கவிகள் எவ் இலக்கிய மரபுடன் இயைந்தாலும் பாடியவர் பெண்கவிஞர் என்ற விதத்திலே முதன் முயற்சியாகின்றது என்பதே இங்கு கவனிக்கத்தக்கது! நூலின் ஆரம்பம் கடவுளர் துதிகளுடன் இடம் பெறுகின்றது:

**விநாயக வணக்கம்**

**வெண்பா**

சீரோங்கு சேனாதிச் சீமா னுயிர் விடுத்த
பேரோங்கு காரியத்தைப் பேசவே — பாரோங்கு
மைங்கரனே போற்றி யடியிணையை யான்
தொழுதேன் சங்கையுறு செந்தமிழைத் தா

**சுப்பிரமணியர் துதி**

**கலித்துறை**

உன்னரும் வீதியிலூவித் திரிந்த வுத்தமனாம்
பன்னருஞ் சேனாபதியினுடலைப் பதைபதைக்க
அன்னியர் செய்தமையருங் கவியாற் சொல்லவாறுமுகா
என்னரும் நாவினிதாயிருந் திஃதியம் புவையே

**அவையடக்கம்**

கண்மணியாகிய சேனாதிராசன் கதைகளை யோர்
பெண்மணியாகிய பேதை கவி வழிபேசியதால்
பண்ணிசை குற்றம் பார்த்துப் பிடித்திடும் பாவலர்கள்
விண்மணியாமென விரும்பி யுரைத்து விளங்குவரே

**நூல்**

**நொண்டிச்சிந்து**

சற்சனரே சொல்லக் கேளும் - இந்த
தரணி யெலாம் புகமுங் கோவை நகரில்
சிற்பர னருளினாலே — சகல
செல்வமும் படைத்திலங்கும் நல்ல குலத்தில்

**(சற்சனரே)**

குன்றனையகுணம் படைத்தோன் - குமார
சூரியர் குலத்து தித்த குழந்தை யென்பார்
வன்றிறல் சேனாதி ராசா — என்று
வையத்தோர் சொல்லுவார்கள் ஐயா நேசர்கள்

**(சற்சனரே)**

மேற்கூறியவாறு ஆரம்பித்து சிறி கிட்டினன் என்ற பொலிஸ், கொலைக் குற்றவாளியை நீதி மன்றிலே நிறுத்துவதோடு வாழிவிருத்தத்துடன் (முதற்பாகம்) முடிவுறுகின்றது. (மேற்குறித்த பொலி ணஸின் பெயர் மேலைத்தேய மதுபான வேடிக்கைக்கும்மி' யிலும் இடம்பெறுவதால் அப்பிரசுரமும் ஏறத்தாழ 1920 — 1925 அளவில் எழுந்திருக்கலாம்)

மீனாட்சியம்மாள் வெவ்வேறு பாடல் மெட்டுக்களை பயன்படுத்தியிருப்பதுபோன்று, வித்தியாவல்லியம்மாளும் பல்வேறு பாடல் மெட்டுக் களைப் பயன்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இறுதியாக, தொகுத்து நினைவுகூர்வதாயின் மேற்கூறிய மூன்று கவிஞைகளும் வெவ்வேறு நோக்குகளும் போக்குகளும் கொண்ட பாடல் களைப் பாடியுள்ளமை புலப்படுகின்றது. தொழிலாளர் எழுச்சியை மனங்கொண்டு மீனாட்சியம்மாளும் காலனித்துவ ஆட்சி மாற்றங்களுட்பட போலித் தேசோபகாரிகள் பற்றி ஞானாம்பிகையும் உள்ளூர் பிரமுகர் கொலை பற்றி வித்தியாவல்லியம்மாளும் பாடல்கள் பாடி முன்னோடி முயற்சியிலீடுபட்டுள்ளனர். பொதுமக்களை மனங்கொண்டு இசைப் பாடல்களை மெட்டுக்களில் இயற்றியுள்ளனர். எனினும், இத்தகைய கவிஞைகள் தங்கள் பிரச்சினைகள் பற்றி பாடமுற்பட்டாரல்லர். அதற்கான காலம் எண்பது களளவிலேயே உருவாகின்றது!

# கனவு காணும் காலம்

கனவு காணு
உன்னால் முடிந்தவற்றை
செய்ய முடியுமென்று
கனவு காணு
அது நனவிலும் நடக்கும் என்று
கனவு காணு.

உனக்கு சிறுவயதில்
விமானம் காட்டிய
கண்ணான உன்
அன்னையை விமானத்தில்
ஏற்றிச் செல்ல
கனவு காணு.

அன்புக்குக் கட்டுப்பட
உன் ஆசைகளுக்கு எல்லையிட
உன் கற்பனைக்கு உயிரூட்ட
கனவு காணு
உன் கனவுகளுக்கு
நிறந்தீட்டு

சிரிப்பிற்கு நேரம் ஒதுக்க
சினத்தை மனதில் பதுக்க
கவலைகளை கலைத்துவிட
கனவு காணு.

உன் கண்ணீர்களை, மறைத்து விடவும்
மகிழ்ச்சியை மனதில் கொள்ளவும்
மரணத்தை நினைவில் கொள்ளவும்
கனவு காணு.

தாய் நாட்டை நேசிக்கவும்
தமிழ் காற்றை சுவாசிக்கவும்
சத்தியத்திற்காய் போராடவும்
நீ கனவு காணு.

உன்னை உண்மையிலேயே
புரிந்து கொண்ட அந்த
நண்பன்தான் உன்னையே
உருவாக்கினான். அப்படியிருக்க,
திரும்பிப் பார்க்க முடியாத,
தூரபாதையாய் சென்ற உன் நட்பை
உன் வாழ்நாளெல்லாம் மறக்கக்
கூடாதென்று கனவு காணு.

துணிவோடு செயற்படாத காரணத்தால்
உலகில் பல திறமைகள்
சிதறிப் போகின்றன என்பதை
மனதில் கொண்டு உன்
ஒவ்வொரு செயலையும்
துணிவோடு கொண்டு நடத்த
கனவு காணு.

சுறுசுறுப்புடன் வேலை செய்து வரும்
தேனீகளுக்கு அழுவதற்கு நேரம்
இல்லாததை போன்று நீயும்
உன் வேலைகளை
சுறுசுறுப்புடன் செய்துவர
கனவு காணு.

சிந்திப்பதனால் நிதானமாக
சிந்திப்பதற்கும்
செயற்படுவதனால் உறுதியோடு
செயற்படுவதற்கும்
விட்டுக் கொடுப்பதனால்
மன நிறைவோடு விட்டு
கொடுக்கவும்
நீ கனவு காணு.

உன் உயிர் உன்னோடு
இருக்கும் வரை வாழ்நாளை
வீணடிக்காமல் சிறப்பாக
வாழ, உன்னுடைய இளமையை
புதுமையாக களிக்க

ஆமினா கஸாலி

# பெண்ணியச் செயற்பாட்டாளர்:
## பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு

**க. ஜீவரதி,**
**கிழக்குப்பல்கலைக்கழகம்.**

ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்று வளர்ச் சியில் இலக்கிய வரலாறு, நாட்டார் வழக்காற்றி யல், சமூகவியல், மானிடவியல், பெண்நிலை வாதம், கல்வெட்டியல், வரலாறு எனப் பல துறை சார்ந்து பல இலக்கியகாரர்கள் தமது பங்களிப்பை நல்கியுள்ளனர். அந்தவகையில் 'பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு' ஈழத்தில் சிறப்புப் பெற்ற பெண் எழுத்தாளர் வரிசையில் குறிப்பிட்டுச் சொல் லக் கூடிய ஒருவராக விளங்குகின்றார். பன்முகப் பணிகளில் ஈடுபட்டு, அவற்றில் தனது ஆளுமை வீச்சையும், அறிவுப் பரப்பையும் வெளிப்படுத்திக் கொண்டிருப்பவர் பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு.

பல்கலைக்கழகங்களில் நீண்டகாலம் (1975-2013) விரிவுரையாளராகவும், தமிழ்ப் பேராசிரி யையாகவும் இருந்ததுடன், எழுத்தாளராக இருந்து சமூகம் சார்ந்த விடயங்களையும் எழுதினார். எழுத்துத் துறையில் இலக்கியம், விமர்சனம், பெண்நிலைவாதம், சமூக பண்பாட்டு ஆய்வுகள் சார்ந்து ஆழ்ந்த கருத்துள்ள பல கட்டுரைகளைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி தனது ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார். பல்வேறு துறை சார்ந்து தன்னை அடையாளப்படுத்திக்



**இவரது ஆய்வுகள் ஆழ்ந்த அறிவையும், பல்துறைப் புலமையையும், முற்போக்குச் சிந்தனையையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன. பெண்நிலை நோக்கு, அறிவாற்றல், சமூக உணர்வு என்பன ஒருங்கே இணைந்த பேராசிரியையாக அவர் விளங்குகின்றார்.**

கொண்ட வர் என்றவகையில் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பேராசிரியை மௌ.சித்திரலேகா முக்கியமானவராகக் காணப்படுகின்றார்.

தனது இலக்கிய ஆய்வுத்துறையில் ஒரு துறையை மாத்திரம் இவர் தெரிவு செய்து எழுதாமல் பெண்நிலைவாதம், பண்பாடு, மொழி பெயர்ப்பு, ஊடகத்துறை, எனப் பல்துறை சார்ந் தும் தனது ஆளுமைகளை வெளிப்படுத்தியுள்ள துடன் தற்போதும் ஆய்வு மற்றும் எழுத்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றார். மௌ.சித்திரலேகா தனது ஆய்வுகளை சோஷலிச, பெண்நிலைவாத, சமூகவியல் நோக்கில் அணுகியுள்ளார். எழுதத் தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரை சமூகச் சார்புள்ள இலக்கியங்களைப் படைத்துக் கொண்டிருக்கின்றார்.

திரு.பீ.வீ. கணபதிப்பிள்ளை- மகேஸ்வரி தம்பதியினருக்கு மகளாக 1947ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 08ஆம் திகதி (1947.02.08) சித்திர லேகா பிறந்தார். 1973ஆம் ஆண்டு மௌனகுரு அவர்களை திருமணம் செய்து கொண்டார். இவரது மகன் சித்தார்த்தன் ஆவார்.

இவர் தனது ஆரம்பப்பாடசாலைக் கல்வியை அட்டாளைச்சேனையிலும், பின்னர் மட்டக்களப்பு அரசடிப்பாடசாலையிலும், இடை நிலைக் கல்வியை வின்சன்ற் மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு அரசினர் கல்லூரி ஆகியவற்றிலும் கற்று, 1968இல் கொழும்புப் பல்கலைக்கழகத்திற் குத் தெரிவானார். பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்று "20ம் நூற்றாண்டின் ஆரம்பகால ஈழத்து நாவல்கள்" என்ற ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தார்.

பல்கலைக்கழக மாணவியாயிருந்த காலத்தில் பல சஞ்சிகைகள், பத்திரிகைகளுக்கு ஆக்கங்கள், கட்டுரைகள் எழுதியுள்ளார். கல்வியில் சிறந்து விளங்கிய சித்திரலேகா 1973ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திலிருந்து பட்டதாரியாக வெளியேறியதும் 1974, 1975ஆம் ஆண்டுகளில் இலங்கை வானொலியில் பெண் கள், சிறுவர் பிரிவு நிகழ்ச்சிகள் மற்றும் கலை நிகழ்ச்சித் தயாரிப்பாளராக இருந்தார்.

1973இல், இளந்தத்துவமாணியை (B.Phil) கொழும்பு பல்கலைக்கழகத்திலும், 1980இல், யாழ் பல்கலைக்கழகத்தில் முதுமாணி யையும் (M.A) மேற்கொண்டார். 1975-1992வரை யாழ் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகவும், 1989-1991வரை யாழ் பல்கலைக்கழக, ஆனந்த குமாரசுவாமி பெண்கள் விடுதிக்காப்பாளராகவும், 1993-2013 வரை கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளரா கவும் கடமையாற்றினார். நெதர்லாந்திலுள்ள ே'க் சமூகக் கற்கை நிறுவனத்தில் (ISS) 1988இல் (M.A in Development Studies "Women and Development"; Institute of Social Studies) "பெண்களும் அபிவிருத்தியும்" தொடர்பான ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து முதுமாணிப் பட்டத்தைப் பெற்றார். ரொக்பெல்லர் புலமைப் பரிசு பெற்று ஒரு வருட காலம், அமெரிக்காவில் நியூயோர்க்கிலுள்ள City University of NewYork,d; Hunter College, ஆராய்ச்சியாளராகப் பணியை மேற்கொண்டிருந்த காலத்திற் கூட தமிழ்ப் பெண்களின் சிறப்புகளையும் ஆற்றல்களையும் வெளிக்கொணர்வதிலேயே அவரின் சிந்தனை பதிந்து போயிருந்தது. பெண்களால் ஆக்கப்பட்ட தமிழ் நூல்களையும் பிரசுரங்களையும் கண்டுபிடித் ததன் விளைவாக அவர் வெளியிட்ட நீண்ட ஆய்வுக் கட்டுரையே "Tradition of Resistance: Women's Writing in Tamil" (எதிர்ப்பு பாரம்பரியம்: தமிழில் பெண்கள் இலக்கியம்) காலத்தின் கடமையை நிறைவேற்றிய பெரிய சாதனையாகும்.

இவர் சித்ரா, சங்கரி, ரோகினி, பர்வத குமாரி, மும்தாஜ், காஞ்சனா, சியாமளா, மல்லிகா சிவகடாட்சம், மௌ.உதயதேவி, வஜ்ரா ஆகிய புனைபெயர்களில் சமுதாய இழிவுகளையும், பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளையும் எதிர்த்து பல கவிதைகளினூடாக, தர்மாவேசத் துடன் குரல் எழுப்பினார். 'சுதந்திரன்' 'தொழி லாளி' போன்ற பத்திரிகைகளிலும் எழுதியுள்ளார். இவ்வாறாக ஏராளமான கட்டுரைகளையும், ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியதோடு நூல்

களையும் வெளியிட்டுள்ளார். பெண்நிலை வாதம் பற்றியும், சமூக இலக்கிய ஆய்வுகள் பற்றியும் தமது கட்டுரைகளில் அதிகளவில் குறிப்பிட்டுள்ளார். அவை சஞ்சிகைகள், ஆண்டு மலர்கள், பருவ இதழ்கள் என்பவற்றில் வெளிவந்துள்ளன. இவர் பல கருத்தரங்குகள், தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளிலும் தனது ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார்.

இலக்கியப் பணி மட்டுமன்றி சித்திரலேகா பல்வேறு அமைப்புகள் ஊடாகவும், கலை இலக்கிய மன்றங்கள் ஊடாகவும் பல காத்திரமான பணிகளை இன்று வரை செய்து வருகின்றார். பல்கலைக்கழகக் காலத்திலிருந்து அவரது சேவை தொடர்வதைக் காணலாம். இவரது சேவை ணகளை பெண்கள் முன்னேற்றம் தொடர்பாக மேற்கொண்ட சேவையாகவும், இலங்கையில் சமாதானம் தொடர்பாக மேற்கொண்ட சேவையாகவும் பார்க்கலாம்.

இவர் 1970களின் பிற்பகுதியிலிருந்து சுமார் 30 வருடங்களுக்கு மேலாக பல்வேறு இடங்களிலும் பெண்கள் அமைப்புகளுடன் சேர்ந்து செயற்பட்டு வருகின்றார். இவரது இத்தகைய செயற்பாடு யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாயிற்று. 1981,1982ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆசிரியைகள் சிலரும் சில மாணவிகளும் சேர்ந்து 'பெண்கள் முன்னேற்றச் சங்கம்' என்ற ஒரு அமைப்பைத் தொடங்கினர். இதனை ஆரம்பித்த முன்னோடிகளில் சித்திரலேகாவும் ஒருவராக இருந்தார். 'பெண்கள் ஆய்வு வட்டம்' என்ற ஒரு அமைப்பை இவரே தொடங்கினார். இது பெண்களின் ஆராய்ச்சி எழுத்தாற்றலை ஊக்குவிப்பதற்கான நோக்கில் உருவாக்கப்பட்டது. 1986இல் சித்திரலேகாவினால் தொகுக்கப்பட்ட 'சொல்லாத சேதிகள்' என்ற இலங்கைப் பெண்ணின் முதலாவது கவிதைத் தொகுப்பையும் இந்த அமைப்பே வெளியிட்டது. யாழ்ப்பாணத்தில் இயங்கிய 'அன்னையர் முன்னணி' என்ற அமைப்பிலும் ஸ்தாபக அங்கத்தவர்களுள் ஒருவராக சித்திரலேகா இருந்தார். இந்த அமைப்பு இராணுவத்தின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து பல ஊர்வலங்களை நடாத்தியது.

1990இல் இரண்டாவது ஈழப்போரில் வடக்கு கிழக்கிலிருந்து பெரும்பாலான மக்கள் இடம்பெயர்ந்தனர். அகதி முகாம்களில் வாழ்ந்த பெண்களதும், பிள்ளைகளதும் நலன்களையும், விசேட தேவைகளையும் கவனிப்பதற்காக 'சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்' என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இவ் அமைப்பிலும் ஆரம்ப கால அங்கத்தவராக இருந்தார். இவை தவிர தேசிய மட்டத்தில் இயங்கும் இலங்கைப் பெண்களின் அரசசார்பற்ற நிறுவனங்களின் கூட்டு (Srilanka Women N.G.O Forum) என்ற ஒரு வலையமைப்பிலும், நிர்வாகக்குழுவிலும் உள்ளார். அத்துடன் பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பின் (Women and Media Collective) ஆலோசனைக் குழுவிலும் அங்கம் வகிக்கின்றார்.

இவை தவிர 2004இல் மனிதநேய மற்றும் சமூக அறிவியல் உயர்கல்விக்கான தேசிய மையத்தின் முகாமைத்துவ இடைக்கால சபை உறுப்பினராகவும் (NCAS) (UGC), 2004இல் கிழக்குப் பல்கலைக்கழக கவுன்சில் உறுப்பினராகவும், 2007இல் இலங்கை இதழியல் கல்லூரி ஆலோசனைக்குழு உறுப்பினராகவும், 2007-2010வரை சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சில் பெண்கள் தேசியக்குழு உறுப்பினராகவும், 2004, 2005ஆம் ஆண்டுகளில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கிழக்குப் பகுதியின் பிராந்தியக் குழு உறுப்பினராகவும், 2001-2003கள் வரை கலாசார அமைச்சில் கலைக் குழுவின் இலக்கியப்பிரிவு உறுப்பினராகவும், 1999-2000வரை உத்தியோகபூர்வ மொழி ஆணைக்குழுவில் தமிழ் அருஞ்சொற் பொருள் குழுவின் உறுப்பினராகவும், 1996இல் தென் கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் ஆய்வுக்குழு உறுப்பினராகவும், 1994இல் (ITN) சுயாதீன தொலைக்காட்சியில் இயக்குநர் குழு உறுப்பினராகவும், "சங்கத்" தென்னாசியப் பெண்கள் அமைப்பின் அங்கத்தவராகவும், மோதல் மாற்றத்திற்கான உள்ளூர் முயற்சிகளை எளிதாக்கும்

குழுவின் உறுப்பினராகவும் இருந்து பெண்கள் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் இலக்கியப் பணிகளை முன்னெடுப்பதற்குக் காரணராகவும் விளங்குகின்றார். இவ்வாறாக இவரது இலக்கிய மற்றும் சமூக சேவைகள் காணப்படுகின்றன.

மௌ. சித்திரலேகா அவர்கள் பல பாராட்டுகளையும், விருதுகளையும் பெற்றவர். இலங்கையில் தமிழியல் துறையில் முதல் பெண் பேராசிரியராகவும், பெண்ணியல்வாதியாகவும், சமூக ஆய்வாளராகவும் சித்திரலேகா விளங்குகின்றார். இவர் 1991-1992வரையான காலப்பகுதியில் "எதிர்ப்புப் பாரம்பரியம்: பெண்கள் இலக்கியம்" (Tradition of Resistance: Tamil Women's) என்னும் ஆய்விற்காக "Rockefeller Fellowship" புலமைப் பரிசில் பெற்று ஒரு வருடகாலம் Hunter College, City University of New Yorkஇல் ஆராய்ச்சிப் பணியை மேற்கொண்டார்.

2003இல் "உள்நாட்டில் இடம்பெயர்ந்த பெண்கள் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் இலங்கையில் உள்ள பாலின சமத்துவத்தின் ஊக்குவிப்பு" என்ற ஆய்விற்காக "UNHCR" விருது ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதுவர் அலுவலகத்தினால் வழங்கி கௌரவிக்கப் பட்டார். 2006இல் வடகிழக்கு மாகாண- கல்வி, கலாசார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் "இலக்கிய மற்றும் கலைப் பங்களிப்பிற்கான ஆளுனர் விருதை" பெற்றார்.

கலை இலக்கிய மன்றங்கள், தமிழ் இலக்கியக் குழு போன்ற நிறுவனங்கள், பெண்களோடு தொடர்புபட்ட அமைப்புகள், நிறுவனங்களில் சேவையாற்றியவராகவும் விளங்குகின்றார். சென்ற மூன்று தசாப்த காலமாக, பெண்நிலைவாதம், பெண்களின் பிரச்சினைகள் தொடர்பாக பேச்சாலும், எழுத்தாலும் இவர் அதிகமான பணிகளைப் புரிந்துள்ளார்.

பல்கலைக்கழக மட்டத்தில் முதன் முதலாக 1995இல் சித்திரலேகா மௌனகுரு 'Women's Writings in Tamil' என்ற பாடநெறியை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மொழித்துறையில் தமிழ்ப்பாடத்தில் ஆரம்பித்து வைத்தார்.

இவர் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகவும், பேராசிரியையாகவும், பீடாதிபதியாகவும், இருந்து பொறுப்பு மிக்க பல நிர்வாகப் பணிகளைச் செய்ததுடன், சிறந்த ஆய்வாளராகவும் காணப்படுகின்றார். கற்பித்தல் பணிகளை மேற்கொண்டதுடன், இலக்கியப்பணி என்ற வரையறைக்குள் மட்டும் நில்லாது வானொலி, பெண்கள் அபிவிருத்தி நிறுவனங்கள் என்ற ரீதியிலும் இவரது பணிகள் பன்முகப்பட்டன. இவரது ஆய்வுகள் ஆழ்ந்த அறிவையும், பல்துறைப் புலமையையும், முற்போக்குச் சிந்தனையையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன. பெண்நிலை நோக்கு, அறிவாற்றல், சமூக உணர்வு என்பன ஒருங்கே இணைந்த பேராசிரியையாக அவர் விளங்குகின்றார். தமிழில் பல நூல்களையும், கட்டுரைகளையும் எழுதியதுடன் மட்டுமல்லாமல் ஆங்கில மொழியில் நூல்களையும், கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டார். இவர் பல ஆளுமைகளையும், தனித்துவங்களையும் தன்னகத்தே கொண்டவராகக் காணப்படுகின்றார். சில கௌரவங்களையும், பாராட்டுகளையும் பெற்ற இவர் ஈழத்து இலக்கிய வரலாற்றில் பேசப்படும் பேராசிரியர்களுள் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சித்திரலேகா இலக்கியத்துறை சார்ந்து ஆய்வுகளை மேற்கொண்டிருந்தாலும் இவரது ஆய்வின் மையப்பொருள் பெரும்பாலும் பெண்நிலைவாதம் சார்ந்ததாகவும், சமூக விடயங்கள் பற்றியதாகவும் அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. சித்திரலேகாவின் பெண்நிலைவாதம் தொடர்பான ஆய்வுகள் நூல், கட்டுரைவடிவில் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளன.

இதன் பின்னணியில் இவரது பெண்நிலைவாதம் தொடர்பான ஆய்வுகள் பற்றிப் பார்த்தால், பாரதியின் பெண்விடுதலை: இலக்கியம்-காலம்-கருத்து, பெண்நிலைச் சிந்தனைகள், பெண்- அனுபவம்- இலக்கியம், பெண்களின் நிலம் -மட்டக்களப்பில் மீள்குடியேற்ற

முன்னெடுப்பில் பெண்களின் காணி உரிமைகள் பற்றிய ஆய்வு, பராமரிப்பு- முறைசாராப் பொருளா தாரங்களில் பெண்களின் பங்கை அங்கீகரித்தல் என்ற நூல்களை பெண்நிலை நோக்கில் எழுதியது மட்டுமன்றி சஞ்சிகைகள், பத்திரிகை கள், ஆய்வு நூல்களில் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

சித்திரலேகா பெண்நிலை நோக்கில் மட்டுமன்றி இலக்கியத்துறை சார்ந்தும், சமூக மற்றும் பண்பாடு சார்ந்த ஆய்வுகளையும், மேற்கொண்ட தோடு இலக்கிய ஆக்கங்கள் தொடர்பான விமர்சனங்களையும், குறிப்பாக கவிதை, சிறுகதை, நாடகம் தொடர்பாக விமர்சனங்களை யும் எழுதியுள்ளார். இது இவரது பல்துறை சார்ந்த ஆளுமையையும், ஆக்க இலக்கியங்களில் அவர் கொண்ட ஈடுபாட்டையும், இலக்கியத்தை பல்வேறு கோணங்களில் அணுகும் போக்கையும் புலப்படுத்துகின்றது. மேலும் இலக்கிய ஆளுமை கள் தொடர்பான திறனாய்வுகளையும் செய்துள்ளார்.

பெண்களின் ஆக்கங்களை வெளிக்கொணர்வதில் மிகுந்த ஆர்வம் மிக்கவர் சித்திரலேகா, இதன் காரணமாக மறக்கப்பட்ட, மறைத்துவைக்கப் பட்ட பெண்களின் ஆக்க முயற்சிகளை கவிதை யாகவும், சிறுகதையாகவும் தொகுத்து பதிப்பித்த தோடு மொழிபெயர்ப்புப் பணியிலும் ஈடுபட்டுள்ளார். இதன்படி இவரது தொகுப்பு, பதிப்பு மற்றும் மொழிபெயர்ப்பு பணிகள் பற்றி நோக்கினால், கவிதைத் தொகுப்புகளாக சொல்லாத சேதிகள் (1986), சிவரமணி கவிதை (1994), கனல் (1997), உயிர்வெளி (1999), கவிதைகள் பேசட்டும் (2010) என்பவற்றையும், பாலைநண்டுகள் (2008) என்ற சிறுகதைத் தொகுப்பையும், இனத்துவமும் சமூக மாற்றமும் (1985), வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக; (2004) என்ற தனிப்பதிப்புகளையும், கைலாஸ் (1988), பேரழிவுக்குப் பெண்கள் முகம்கொடுத்தல் தென்னாசிய அனுபவங்களும் சவால்களும் (2008) ஆகிய நூற்பதிப்புகளை இணை ஆசிரியராக இருந்தும் செய்துள்ளார். மேலும் பெண் (தொகுதி-2,இல-2, தொகுதி-4,இல-1, தொகுதி-5,இல-2, தொகுதி-6, இல-2), நெய்தல் (தொகுதி-1,2), பிரவாதம் (தொகுதி-1,2,3,4), சொல் (2006, 2008, 2010, 2013, 2014) சஞ்சிகைகளை பதிப்பித்ததோடு, டாக்டர் மேரி ரட்ணம் (Translation of Mary Ratnam by Kumari Jeyawardena) (1993), இலங்கையின் இனவர்க்க முரண்பாடுகள் (Translation of Ethnic and Class Conflict in Sri Lanka) (1994) இ பெண்கள் உரிமைகளை மனித உரிமைகளாக அங்கீகரித்தல் - மனித உரிமைகள் பற்றிய ஓர் மீள்பார்வை நோக்கி; (Translation of Women's Rights as Human Rights by Charlotte Bunch) (1995), மாக்சீயமும் பெண்நிலைவாதமும் மிக முற்போக்கான ஒரு கூட்டிணைவை நோக்கி; (Translation of The Unhappy Marriage of Marxism & Feminism by Heidi Hartman) (1999) ஆகிய நூல்களையும் மொழிபெயர்த்துள்ளார்.

பல்கலைக்கழகம் சார் ஆய்வாளர்களுள் ஈழத்தைப் பொறுத்தவரையில் தமிழியல் துறையில் முதல் தமிழ்ப் பெண் பேராசிரியராக சித்திரலேகா விளங்குகின்றார். இவரது ஆய்வுகள் ஆழ்ந்த அறிவையும், பல்துறைப் புலமையையும், முற்போக்குச் சிந்தனையையும் வெளிப்படுத்து வனவாக உள்ளன. பெண்நிலை நோக்கு, அறிவாற்றல், சமூக உணர்வு என்பன ஒருங்கே இணைந்த பேராசிரியை என்ற உன்னத நிலைக்கு அவரை இட்டுச் சென்றுள்ளன. தமிழில் பெண்ணியம் சார்ந்து பல நூல்களையும் கட்டுரை களையும் எழுதியது மட்டுமல்லாமல் ஆங்கில மொழியிலும் கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார்.

இவரால் வெளியிடப்பட்ட ஆய்வு நூல்கள், அவரால் எழுதப்பட்டு நூல்கள், சஞ்சிகைகளில் வெளிவந்ததும், ஆய்வரங்குகளிற்கு சமர்ப்பிக்கப் பட்ட தமிழ், ஆங்கில கட்டுரைகளும் பெண் நிலைவாத அடிப்படையில் எழுதப்பட்டிருப்ப தனை காணலாம். இவர் இலக்கியம் தொடர்பாக ஆய்வினை மேற்கொண்டிருந்தாலும் அவற்றின் உட்சரடாகவும், மையப் பொருளாகவும் பெண் நிலைவாதம் விளங்குவதை இவரது கட்டுரைகளில் காணலாம்.



உறவும், பெண்கள் அமைப்புகளில் இவரது பங்களிப்பும், செயற்பாடுகளும் பின்னணியாக இருந்தது எனக் கூறலாம்.

அதே போன்று சித்திரலேகாவின் மாக்சிச சிந்தனைகளுக்கு, கைலாசபதியின் வழிகாட்டல்களும், எம்.ஏ.நு:.மான் போன்ற இலக்கிய வட்ட அறிஞர்களது தொடர்பும் ஒரு காரணமாக அமைந்திருக்கின்றது எனக் கூறலாம்.

இதனடிப்படையில் பார்க்கும் போது நமது சகோதர மொழியான சிங்களத்தில் குமாரி ஜெயவர்த்தனா பெண்கள் தொடர்பான நவீன சிந்தனையுடையவராக விளங்கியவர். அவரை அடுத்து சித்திரலேகா தமிழ்மொழியில் பெண்நிலைவாத நோக்குடையவராக விளங்குகின்றார். இலக்கியத்துறையில் இவருக்கு ஆர்வம் இருந்த பொழுதும் பெண்நிலைவாதத்திலேயே அதிகமான ஈடுபாடுடையவராகக் காணப்படுகின்றார். இவரது எழுத்துகள் மட்டுமன்றி நடையுடை பாவனைகள் கூட தனித்துவமான பெண்ணியச் சிந்தனையின் அடையாளமாக விளங்குகின்றது.

சித்திரலேகா இவ்வாறு பெண்ணியச் சிந்தனையுடையவராகத் திகழ்வதற்கு பாடசாலைக் காலத்திலிருந்தே அவரது தந்தை மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டல்களும், பல்கலைக்கழக காலத்தில் கைலாசபதி, குமாரி ஜெயவர்த்தனா போன்றோருடன் ஏற்பட்ட தொடர்பும், கணவர் மௌனகுருவின் வழிகாட்டல்களும், பெண்கள் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்ட காலத்தில் வெளிநாடுகளில் அறிமுகமான ஆசிரியைகள், நண்பிகள் குறிப்பாக அமரிதா சாச்சி, தண்டம் றங், நிக்கி அலெக்சாண்டர், றோசலின் பச்சஸ்கி, நண்பிகள் சார்லட் பரூக், றொக்சானோ கரியோ போன்றோரது

இவரது கட்டுரைகள் நுணுக்கமானதாகவும், ஆய்வு நோக்குடையதாகவும் காணப்படுவதோடு சான்றாதாரங்கள் நிறைந்ததாகவும், ஆழமான பார்வையுடைய வகையில் மற்றவர்களை எழுதத்தூண்டும் வண்ணமும் அமைந்துள்ளன. குறிப்பாக இவரது கட்டுரைகளில் பெரும்பாலானவற்றில் இறுதியில் 'இது தொடர்பான விவாதங்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது', 'இது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட

வேண்டும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதனைக் காணலாம்.

இவரது இலக்கியப் பணிகள் தொடர்பாக நோக்கும் போது, இவர் ஒரு பெண்ணியக் கவிஞராக விளங்கியுள்ளார். காலங்காலமாகப் பெண்கள் மீது சுமத்தப்பட்டு வந்த பல்வேறு அடக்குமுறைகளைச் சுட்டிக்காட்டுதல், அவற்றை விமர்சனத்திற்குட்படுத்தல், இதுவரை காலமும் மறுக்கப்பட்ட உரிமைகளை மீண்டும் நிலைநாட்டிக் கொள்ள விரும்புதல், பரிதாபத்துக் குரியவர்களாகப் பெண்களைப் பார்க்கும் சமூகப் பார்வையில் மாற்றம் வேண்டும் என வாதிடுவதாக இவரது கவிதைகள் அமைந்துள்ளன.

இலக்கியத் தொகுப்பு முயற்சியாக கவிதைத் தொகுப்புகள், சிறுகதைத் தொகுப்பு களை, வெளியிட்டதோடு, இலக்கிய மற்றும் சஞ்சிகைப் பதிப்புகளையும், மொழிபெயர்ப்பு களையும் மேற்கொண்டுள்ளார். இவரது கவிதைத் தொகுப்புகள், சிறுகதைத் தொகுப்பு என்பன பெண்ணிய நோக்கில் தொகுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். பெண்கள் உணர்வுகள், பிரச்சினை கள், அனுபவங்கள், வெளிப்பாடுகள் என்பன பெண்களின் ஆக்க முயற்சிகளான கவிதை, சிறுகதையூடாக வெளிப்படுவதனை ஒன்று சேர்த்து அவர் தொகுத்து வெளியிட்டுள்ளார். 'பெண்களுக்கான கலை இலக்கிய நெறியை உருவாக்க வேண்டும்' என்ற முனைப்பு இவரது தொகுப்புகளில் பிரதிபலிப்பதனைக் காணலாம்.

சித்திரலேகாவால் வெளியிடப்பட்டுள்ள தொகுப்புகளும், பதிப்புகளும், ஆய்வுநூல்களும், அதிகளவான ஆய்வுக் கட்டுரைகளும், அவரின் ஆழ்ந்த அறிவையும், ஆய்வுத் திறனையும், பல்துறை சார்ந்த புலமையையும், அவரது பெண்ணியச் சிந்தனையையும், சமூக நோக்கி லான பார்வையையும் வெளிப்படுத்துகின்றன. இவர் இடதுசாரிச் சிந்தனையாளர் என்பதனால் இவரது முற்போக்குக் கருத்துகள் பல கட்டுரைகளில் பிரதிபலிப்பதனைக் காணலாம்.

மேலும் இவரது ஆய்வு முயற்சியை நோக்கும் போது அவை எளிமையாகவும், தெளிவாக விளங்கக்கூடியவகையிலும், கருத்துத் தொடர்ச்சியுடையதாக ஒழுங்கமைத்து எழுதியு ள்ளதுடன் மேற்கோள்கள் காட்டியும் விளக்கியு ள்ளார். ஆரம்பகாலத் தமிழிலக்கியங்களிலிருந்து தற்காலம் வரையான இலக்கியங்கள் வரை பெண்ணியச் சிந்தனையின் அடிப்படையில் இலக்கியங்களை அணுகியிருப்பதும், வரலாற்றை மீள்பார்வைக்குட்படுத்த முயற்சிப்பதனையும், பெண்ணியம் தொடர்பாக புதிய சொல்லுருவாக்கம் பற்றிக் குறிப்பிடுவதும், கோட்பாடு ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் ஆதாரங்காட்டி கூறவந்த விடயங்களை தனது ஆய்வுகளில் செம்மையாக வெளிப்படுத்தியுள்ளார்.

இதன்படி ஈழத்து தமிழிலக்கிய வளர்ச்சியினடிப் படையில் நோக்கும் போது சித்திரலேகாவின் பணிகள் தவிர்க்கமுடியாததாகும்.

தொகுப்புகள், பதிப்புகள், மொழிபெயர்ப்புகள், பெண்நிலைவாதம், இலக்கியவரலாறு, பண்பாடு, திறனாய்வு, விமர்சனம் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க இடம் சித்திரலேகாவுக்கு உண்டு என்பதனை மறுக்கமுடியாது.

**உசாத்துணை நூல்கள்**


1.பத்மா சோமகாந்தன், 2003, **ஈழத்து மாண்புறு மகளிர்,** குமரன் புத்தக இல்லம், கொழும்பு.


2.மங்கை.அ, 2007, **பெயல்மணக்கும் பொழுது- ஈழப்பெண் கவிஞர்கள் கவிதைகள்,** மாற்று, இந்தியன் வங்கி காலனி, வள்ளலார் தெரு, பத்மநாபா நகர், சூளை மேடு, சென்னை-94.

3. **திசைபுதிது இதழ்-01,** ஜனவரி-மார்ச் 2003, கொழும்பு.

4. **கலைமுகம்,** 2010, கலை இலக்கிய சமூக இதழ் (50வது சிறப்பிதழ்), நாடகப் பயிலகம், திருமறைக்கலாமன்றம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

5. **நிவேதினி, பால்நிலைக் கற்கை நெறிச்சஞ்சிகை, இதழ்-08, மலர்-01,** ஆனி-2011, பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், கொழும்பு.






பெண்களுக்கு கல்வி அளியுங்கள்;
அவர்கள் தங்கள் தேவைகளைத் தாமே
தீர்மானித்துக் கொள்வார்கள்

– சுவாமி விவேகானந்தர்

**மா**னிட இனத்தின் கதை பெண்ணுடன் தொடங்குவதாகக் கூறப்படுகிறது. பெண்களின் உரிமைகள் குறித்துக் காலங்காலமாக கருத்துக்கள் முன்வைக்கப்படுவதோடு இது தொடர்பான ஆய்வுகளும் பல பெண்ணிய அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. அந்தவகையில் இந்துசமயத்தில் பெண்கள் பெற்றுக் கொண்ட உரிமைகள் தொடர்பான ஒரு சில கருத்துக்களைப் பற்றி ஆராய்ந்தால்;

முதலில் உரிமை என்பதன் பொருள் விளக்கம் பற்றி நோக்குவது பொருத்தமானதாக அமையும். 'உரிமை' என்பதை ஆங்கிலத்தில் (Right) என்பார்கள். 'Right' என்ற சொல்லுக்கு 'நியாயம்', 'நேர்மை', 'வலம்' எனப் பல பொருள்கள் உண்டு. சட்ட நூலில் வரும் பொழுது மட்டுமே 'Right' என்ற ஆங்கிலச்சொல் 'உரிமை' என்ற பொருளை உணர்த்துகிறது. இவ்வுரிமைக் கோட்பாடுகளின் தோற்றத்திற்கு சமயநம்பிக்கைகள், வாழ்வியல் முறைகளில் ஏற்பட்ட அகப்புற நெருக்குதல் காரணமாக அதிலிருந்து எழுந்த சுதந்திரமான எண்ணக்கருத்துக்களே காரணமாக அமைந்தன.

இன்றைய உலகில் சமூக முன்னேற்றத்திற்கு பெண்களின் சமவுரிமை அவசியம் என்பது உணரப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் ஆண்களுக்கு மட்டுமே காணப்பட்ட கல்வி, அரசியல், தொழில் சார்ந்த பங்குகொள்ளல் பின்னர், பெண்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகளைப் பேணுவதில் ஏற்பட்ட முன்னேற்றத்துடன் இணைந்து, 1980களில் பெண்கள் இயக்கம், சிறுவர்கள் இயக்கங்கள் மற்றும் சிவில் சமூகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் காரணமாக பெண்கள் உரிமைகள் தொடர்பாக சர்வதேச ஈடுபாடுகள் செயற்பாடுகளில் ஒரு புத்துயிர் பிறந்தது. பெண்களுக்கான சகல விதமான பாரபட்சங்களையும் ஒழிக்கும் மகாநாட்டு உடன்படிக்கை 1979இல் தோற்று விக்கப்பட்டது. (CECAW – Convention on the Elimination of all forms of Discrimination Against Women) அதே போன்று சகலவிதமான இனரீதியான பாரபட்சங்களை இல்லாதொழிக்கும் சர்வதேச மாநாட்டு உடன்படிக்கைகளையும் (ICERD) நூற்றுக்கு மேற்பட்ட உலகநாடுகள் ஏற்றுக்கொண்டு விட்டது.

ஐக்கியநாடுகள் சபையின் 27வது மாநாட்டின் பிரகடனத்தில் 1975ஆம் ஆண்டு பெண்களின் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, அப்பிரகடனத்தில் பின்வரும் 3 நோக்கங்களையும் அது குறித்துக் காட்டியது.

1. ஆணுக்கும் பெண்ணுக்கும் சமத்துவத்தைப் பேணுதல்.

2. விசேடமாக, தேசிய பிராந்திய சர்வதேச மட்டங்களிலான சமூகப் பொருளாதார கலாசார அபிவிருத்திகளில் பெண்களின் பொறுப்பினையும், முக்கிய பங்கினையும் வலியுறுத்துவதன் மூலம் மொத்த அபிவிருத்தி முயற்சிகளில் பெண்களில் பூரண ஒருமைப்பாட்டினை உறுதி செய்தல்.

3. உலக சமாதானத்தைப் பலப்படுத்துவதற்கு பெண்களது பங்களிப்பின் முக்கியத்துவத்தை அங்கீகரித்தல்.

சர்வதேச ரீதியாக பெண்களின் உரிமைகள், நலன்கள், சமத்துவம், பாரபட்சங்களை ஒழித்தல் தொடர்பாக அதிக கவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையில் உலகில் காணப்படும் சமயங்கள் அனைத்திற்கும் காலத்தால் முந்தியதும் சிறப்புக்குரியதுமான சமயமாக இந்துசமயம் விளங்குகிறது. 1948இல் ஐக்கிய நாடுகள் சபையினால் மனித உரிமைகள் பிரகடனம் வெளியிடப்படுவதற்கு முன்னரே, இந்துசமயத்தில் மனிதவுரிமைச் சிந்தனைகள் காணப்பட்டன. இந்துசமயமானது பெண் உரிமை, கருத்துச் சுதந்திரம், சமயச் சுதந்திரம், நீதிக்கான உரிமை, வேலைக்கான உரிமை, சிறுவர் உரிமை, அடிப்படை உரிமை எனப் பல விதமான உரிமைகள் பற்றிப் பேசுகிறது. பெண்களின் உரிமைகள் குறித்த சிந்தனைகள் எவ்வாறு அமைந்துள்ளது என்பது பற்றி நோக்குகையில்,

### சமவுரிமை

இந்துசமயத்தில் மிகச்சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள சக்தி வழிபாடு மிகப்புராதனமானது. இந்து வழிபாட்டு முறையானது தாய்வழிச்சமூக அமைப்பு முறையாகவே நிலைபெற்று வந்துள்ளமையினை அறியலாம். சிந்துவெளிக்கால சமய நிலையிலிருந்தே தாய்க்கடவுள் வழிபாடு இருந்துள்ளதாக சேர்.ஜோன் மார்ஷல் கூறுகிறார். இந்துக்கள் நிலம், நீர் போன்ற இயற்கை அம்சங்களையும் பெண்களாக வழிபட்டமை பெண்களுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. தற்போது ஆண்கள் போலப் பெண்களும் சரிநிகராக ஆன்மீகத் தொண்டாற்ற முடிகின்றது.

இந்துசமயத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கு சமவுரிமை வழங்கப்பட்டமைக்கு அர்த்தநாரீஸ்வர வடிவமே சிறந்த எடுத்துக் காட்டாக அமைகின்றது. தனிப்பெரும் கடவுளான சிவபெருமானே தனது உடலில் சரிபாதியை தனது மனைவியாகிய சகதிக்குக் கொடுத்து 'அர்த்தநாரியாக'க் காட்சி தருவது ஆண்களுக்கு பெண்களும் சரிசமன் என்பதை வலியுறுத்துவதாகவே அமைகின்றது. ஒவ்வொரு மனிதனிலும் ஆணியல்பு, பெண்ணியல்பு என இரண்டு தன்மைகளும் உள்ளன. எந்த இயல்பு ஒருவரில் மேலோங்குகின்றதோ அதனியல்பு அவர்களில் வெளிப்படும் என இன்றைய விஞ்ஞான உலகம் கூறும் உண்மையை பெண்சமத்துவ நிலையில் இந்துசமயம் வலியுறுத்தியுள்ளது.

### கல்வி உரிமை

CEDAW இன் 10ஆவது பிரிவின் படி ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே சமத்துவம் காணப்படல் வேண்டும் என்ற அடிப்படையில் கல்வித்துறையில் ஆண்களைப் போலவே பெண்களும் சமவுரிமை பெற வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இக் கொள்கை வேதகாலத்திலேயே பின்பற்றப்பட்டு பெண்களுக்கு கல்வி கற்கும் உரிமைகளும் வழங்கப்பட்டிருந்தது. கோஷை, கோதை, விசுவவரஸ், அபாலை, உபநிஷதை, நிஷதை, பிரமாஜயை, அதிதி, இந்திராணி. சராமை, ரோமஸை, ஊர்வசி, லோபமுத்திரை, நதிகள், யமி, ஸ்ரீ, லக்ஷை, ரஜனி, வாக்கு, சிரத்தை, மேதை, தட்சிணை, ராத்திரி, சூரியசவிதா போன்றவர்கள் வேதங்களைப் பயின்று பண்டிதைகளாக இருந்துள்ளனர். இளா என்ற தேவதை வேள்வி இயற்றுவதற்கான விதிமுறைகளை முதன் முதலாக மாந்தருக்குப் போதிக்கும் ஆசான் என்று போற்றப்படுகிறாள். இருக்கு வேதத்தில் சூர்யா என்ற பெண்ணே (10-7-1) பாடல்களை யாத்ததாக கூறப்பட்டுள்ளது. லோபமுத்ரா, அகத்தியரின் மனைவி. இருக்கு

வேதத்தின் முதல் மண்டலத்தில் இவர் யாத்ததாக ஒரு பாடல் வருகிறது.
(ரிக் -1-23-15).

'பல்லாண்டுகள் உளமாறத்
தொண்டாற்றினேன்
காலை, நண்பகல், இரவு பாராமல்
உடலுழைத்தேன்
அழகு வாடி, அங்கம் தளர, முதுமை
அணுகிவரும்
கணவன்மாரே, தங்கள் மனைவியரை
அணுகுவீர்!

என்று பாடியுள்ளார். இந்திராணியும் ஒரு பாடலின் ஆசிரியையாக இடம்பெறுகிறாள். (ரிக் - 10-11-17). கோசா என்ற பெண்மணி பிரும்ம வாதினியாகப் புகழ்பெற்றவர். வெகுநாட்கள் தனக்கிருந்த நோயினால் திருமணமாகாமல் முதிர்கன்னியாக முதுமையடையும் நிலையில் அசுவினி தேவர்களை வேண்டிப்பாடிய 28 பாடல்கள் (ரிக் -10-3-10,10-3-11) என்ற இரு பிரிவுகளில் இடம்பெற்றிருக்கின்றன.

'ஒரு பெண்ணுக்கு எந்த குறையும் இன்றி கல்வி வழங்கப்பட வேண்டும்' 'A girl a should be brought up and educated with great effort and care' (Mahanirvana Tantra) என்று கூறப் படுகிறது. கல்வியில் சிறந்து விளங்கிய பெண்களை பிரம்மவாதினிகள் என அழைத்தனர். ஆண், பெண் இருபாலாரும் ஒன்றாகவே கல்வி கற்றனர். இவ்வாறாக இந்துசமயத்தில் பெண் களின் கல்வி உரிமை வழங்கப்பட்டிருந்ததை அறியமுடிகின்றது.

### திருமணம்

CEDAWஇன் 16ஆவது பிரிவின் படி திருமணம் மற்றும் குடும்பத் தொடர்புகள் விடயத்தில் ஆண்கள் அனுபவிக்கும் அதே உரிமைகளைப் பெண்களும் அனுபவிக்கலாம் எனக் கூறுகின்றது. அதர்வண வேதத்தில் 17ஆவது மந்திரத்தில் திருமணம் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் பெண்கள் சுத்தமானவர்கள், புனிதமானவர்கள், பூஜிக்கத் தகுந்தவர்கள், பெண்களை நிந்திக்கவே கூடாது. அவர்கள் எந்த வீட்டில் பூஜிக்கப்படுகிறார்களோ, அங்கு புனிதம் நிலவுகிறது என்று குறிப்பிடுவ தானது அக்கால சமூகத்தில் பெண்களுக்கிருந்த உயரிய நிலையினைக் காட்டுகிறது. வேதகாலப் பெண்களுக்குத் திருமணம் செய்துகொள்வதில் சுதந்திரம் இருந்தது. தனக்கு வேண்டிய மித்தி ரனைச் சமூகத்திலிருந்து தேடிக் கொள்ளலாம். கணவன் இறந்தால் மறுவிவாகம் செய்ய வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.

'உதீர்ஷ்வ நார்யபி ஜீவலோகம் கதா
சுமேத முபசேஷ ஏஹி,
ஹஸ்ததிரா பஸ்யதி திஷோ ஸ்த வேதம்
பத்யு ஜனித்தவம் பி ஸம்பூத'

என்ற பாடலில், பெண்ணே! இனி ஜீவனுள்ள உலகத்திற்குச் செல்லவும். இறந்த வனிடம் நீ ஏன் உட்கார்ந்துள்ளாய், இங்கு வா, உன்னை விரும்புபவனை நீ விவாகம் செய்து கொள்ளலாம் எனக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் கல்வி கற்ற பெண் இன்னொரு கல்வியறிவு உடைய ஆணை மணக்க வேண்டும் என்று கூறுவ தோடு, சிறுவயதில் பெண்களுக்குத் திருமணம் செய்து வைத்தல் குற்றம் எனவும் இருக்கு வேதத்தில் கூறப்படுகிறது.

'An unmarried young learned daughter should be married to a bridegroom who like her is learned. Never think of giving in marriage a daughter of very young age' (RV 3.55.16)

### சொத்துரிமை

தொடர்ந்தும் 16ஆவது பிரிவிலே பெண்களின் சொத்துரிமை பற்றிய விடயங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் (மணமான பெண்களின் சொத்துக்கள் கட்டளைச் சட்டம், 1923) பெண் களும் ஆண்களும் சமவுரிமைகள் கொண் டுள்ளனர். மரண சாசனம் எழுதாமல் இறக்கிற பெற்றோர் விடயத்தில் (தந்தை அல்லது தாய்) அவர்களின் ஆண், பெண் குழந்தைகள் யாவரும் அவர்களின் சொத்துக்களை சமமாக உரிமை வழியாய் அனுபவிக்க முடியும். திருமணமொன் றின் மூலம் பிள்ளைகள் இல்லாத போது இறந்து விடும் கணவன் விடயத்தில் அவனது சொத்தில் பாதியை மட்டுமே அவனது விதவை மனைவி உரிமை வழியாய் அனுபவிக்க முடியும். அத்தகைய சந்தர்ப்பங்களில் மீதிச் சொத்துக்களை கணவன்

வழிக்குடும்பத்தில் அனுபவிக்கப்படும். சுதேச கண்டிச்சட்டமும், தேசவழமைச்சட்டமும் பெண்களின் சுதந்திரமான சொத்துரிமைகளை அங்கீகரிக்கின்றன.

இந்நிலையில் இந்து சமுதாயத்தில் 'சீதனம்' என்பதைக் குறிக்கும் சொல் எதுவும் காணப்படவில்லை. சில மணமுறைகளில் மணமகன் சில உபகாரங்களைக் கொடுத்து மணப் பெண்ணை பெற்றுக் கொண்டான். இத்தகைய முறை சில தர்மசாஸ்திரங்களில் கண்டிக்கப் பட்டுள்ளது. சில சந்தர்ப்பத்தில் பெண்களின் பெற்றோர் தம் பொருளாதார வசதிக்கேற்ப தன் மகளுக்கு நன்கொடைகளை வழங்கினார்கள். அதர்வவேதத்தில் 100 பசுக்களை உடமையாகப் பெற்றுச் சென்ற அரசகுமாரி பற்றிய குறிப்பு வருகிறது. திரௌபதை, சுபத்திரை, உத்திரை இவர்கள் திருமணம் முடித்து சென்றபொழுது தனது பிறந்த வீட்டிலிருந்து குதிரைகள், யானைகள், ஆபரணங்கள் போன்றவற்றை உபகாரமாகக் கொண்டு சென்றனர். ஆயினும் இம்முறையை சீதனத்திற்கு ஒப்பான முறையாகக் கொள்ள முடியாது. பெண்கள் சொத்துக்களை வைத்திருப்பது உரிமை பெற்ற விடயமாகக் காணப்படவில்லை. அதேவேளை தாம் விரும்பியவற்றைப் பெற்றுக் கொள்வதற்கும் அனுபவிப் பதற்குமான உரிமை வழங்கப்பட்டிருந்தது.

பிரதான இந்து சமூகத்தில் பெண்கள் அசையாச்சொத்துக்களில் உரிமை பெற்றிருக்கவில்லை. ஆனால் அசையக்கூடிய பொருட்களைப் பொறுத்தவரையில் அவருடைய உரிமை பூரணமானது. பெரும்பாலும் இவ்வகையும் சொத்துக்கள் 'ஸ்திரிதனம்' ஆக வழங்கப்பட்டவையாகும். பெண்களைப் பொறுத்தவரை அசைவற்ற பொருட்களை நன்கொடையாக பெற்றபோதிலும் அவற்றை விற்கவோ, வழங்கவோ முடியாது. அசையும் சொத்துக்களிலே முழு உரிமை இருந்தது. அதாவது, ஸ்தரித்தனத்தின் மீது உரிமையிருந்தது. விஷ்ணு, ஞாக்கியவல்லியர் போன்றோர் விதவைப் பெண்களுக்கு கணவரின் சொத்துக்களின் மீது உரிமை இருந்தது எனக் குறிப்பிடுகின்றனர். ஏனையோரின் கருத்துக்கள் வேறுபடுகின்றன. மனுதர்மசாஸ்திரம் ஸ்திரிதனமாக பெண்ணுக்குக் கிடைக்கும் சொத்துக்களைப் பற்றி குறிப்பிடுகின்றார். இவற்றை 06 வகை நன்கொடைகளாக வகைப்படுத்தியுள்ளார்.

1. தந்தை வழங்கிய நன்கொடைகள்
2. தாய் மூலம் பெறுகின்ற உபகாரங்கள்
3. சகோதரர்கள் கொடுக்கின்ற நன்கொடைகள்
4. திருமணத்தின் பின்பு அன்பின் அடையாளமாக கணவன் வழங்கும் உபகாரம்
5. திருமண வேளையில் உறவினர் வழங்கும் உபகாரம்
6. கணவன் வீட்டிற்கு அழைத்துச் செல்லும் போது அவர்களுக்குக் கொடுக்கும் நன்கொடைகள்.

இவற்றுக்கு மேலதிகமாக விஷ்ணு 03 விடயங்களைக் குறிப்பிடுகின்றார்

1. மக்கள் உபகாரமாக வழங்கிய பொருட்கள்
2. இனபந்துக்கள் நன்கொடையாக வழங்கியவை
3. கணவன் 2ஆவது மனைவியை திருமணம் செய்யும்போது முதல் மனைவிக்கு சன்மானமாக ஜீவாதாரமாக கொடுத்தப் பொருட்கள்

இந்த ஸ்திரிதனங்கள் பற்றி மிக விரிவான விளக்கங்களை விஞ்ஞானேஸ்வரர், நிதாச்சரிதம் என்ற நூலில் குறிப்பிடுகின்றார். அதாவது சந்தானவழியாக, உரிமையாக, கொள்விலையாக, தாய்பாகத்தின் மூலமாக மற்றும் எதிர்பாராத விதமாக நன்கொடையாக கிடைக்கும் பொருட்கள் அனைத்துமே ஸ்திரிதனத்தில் அடங்கும் என்கிறார்.

ஸ்திரிதனத்தின் மேல் பெண்களுக்குரிய அதிகாரம் பற்றி நோக்குகையில் 02 வகையாக அதாவது, உரிமை பற்றி கூறப்பட்டுள்ளது.

- **சௌதாயிக**
- **அசௌதாயிக**

அன்பின் நிமிர்த்தமாக தந்தை தாய் மற்றும் கணவன் உறவினர் வழங்கிய நன்கொடைகள் 1ஆவது பிரிவினுள் அடங்கும். இதில் பெண் எல்லா உரிமையும் பெற்றிருந்தாள். 2ஆவது வகையானதாக அசௌதாயிக எனும் பிரிவினுள் அடங்கும் சொத்துக்களின் மேல் ஓரளவு உரிமை பெற்றிருந்தாள். தனது இஷ்டப்படி விற்கவோ, நன்கொடை வழங்கவோ இச்சொத்துக்கள் பெண்களின் பெயர்களில் இருந்து வந்தாலும் அவற்றினை விற்கும் உரிமையில்லை. அவற்றின் பலாபலன்களை அனுபவிக்கும் உரிமை மட்டுமே வழங்கப்பட்டிருந்தது.

தர்மசாஸ்திர ஆசிரியர்களுள் கார்த்திகாயனர் பெண் உரிமையை வழங்கியிருந்தார். அதாவது ஸ்திரிதனத்தை அதிலும் அவற்றிலுள்ள அசைவற்ற சொத்துக்களை விற்பதற்கும் ஈடுவைப்பதற்கும் முழு உரிமை உண்டென்று வாதிடுகின்றார். வங்காளத்து மரபைச் சேர்ந்த ஜிம்முதவாகனார் என்பவர் பெண் தனது எண்ணப்படி விற்கவும் வழங்கவும் கூடிய சொத்துக்கள் மட்டுமே ஸ்திரிதனம் என்று மட்டுப்படுத்துகிறார். ஸ்திரிதனமாக உடைமைகள் பெண்வழி உரிமைக்காரருக்கே சொந்தமானது. பெண்ணுக்கு குழந்தைகள் இல்லாதவிடத்து அவருடைய பெற்றோருக்கும் அவர்கள் இல்லாதவிடத்து பெண்ணின் ஆண் சகோதரர்களுக்கும் ஸ்திரிதனம் சொந்தமாகும். இங்கு கணவனுடைய சந்தானவழியினருக்கு ஸ்திரிதனம் வழங்கப்படவில்லை. புராதன இந்து சமூகத்தில் அசைவுள்ள பொருட்கள் மீது முழு உரிமையையும் சட்ட நெறியாளர்கள் வழங்கியிருந்தனர். ஸ்திரிதனத்தை கணவன் தனது தேவைகளுக்குப் பயன்படுத்தினால் அவற்றை வட்டியோடு திருப்பிக் கொடுப்பதற்கு கடமைப்பட்டிருக்கின்றான்.

பிற சமுதாயங்களிலுள்ள பெண்ணுரிமைச் சட்டங்களோடு ஒப்பிடுகின்ற போது இந்து சமுதாயத்தில் பெண்களுக்கு அளிக்கப்பட்டிருந்த சொத்துரிமை தொடர்பான விதிமுறைகள், ஏனைய உரிமைகளும் மிகவும் முன்னேற்றகரமானது. காலப்போக்கில் அந்த உரிமைகள் படிப்படியாக விரிவடைந்து ஆண்களது அதிகாரங்களை கட்டுப்படுத்துமளவிற்கு வளர்ச்சியடைந்தன. எனினும் தற்காலத்தில் பெண்கள் உரிமைகள், பாதுகாப்பு, சுதந்திரம் போன்ற விடயங்களில் பல சவால்களை எதிர் கொள்கின்றனர். இது தொடர்பாக பெண்கள் அமைப்புக்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். எவ்வாறாயினும் இந்து சமயத்தினைப் பொறுத்தவரையில் பெண்களுக்கு உயரிய இடமே வழங்கப்பட்டிருந் தது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

**உசாத்துணைகள்**


1. நாராயணன்.வடுவூர்., (2005), **'ருக், யஜீர், ஸாம, அதர்வண வேதங்களும் பத்து உபநிஷதங்களும்'**, நர்மதா பதிப்பகம்.

2. பிரேமா. இரா., (2001) **'பெண்கள் மரபிலும் இலக்கியத்திலும்'**, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

3. ரெங்கம்மாள், இரா.வாசுகி.சி., (2005) **'பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும்'**, அறிவுப் பதிப்பகம், சென்னை.

4. அமீர்தீன்.வி., (2003), **'மனித உரிமைகள் ஓர் அறிமுகம்'**, தகவல் நலன்புரி அமைப்பு, பேராதனை.

5. இராமசுப்பிரமணியம்.வ.த., (2002), **'பெரியபுராணம் மூலமும் தெளிவுரையும்'**, தொகுதி -1, திருமகள் நிலையம், சென்னை.

6. http://en.wikipedia.org



# எம் தாயே

இவ்வுலகில் தெய்வங்கள்
பல நூறு உண்டு
நான் கண்ட தெய்வம் நீ மட்டுமே!
உன் கருவறையில் மீண்டும் ஒரு
இடம் கொடு உன் மடியினில்
மீண்டும் மழலையாய் பிறந்திட....!
உறவுகள் பல உலகினிலே நான்
கண்டேன் - உன் உண்மையான
உறவுக்கு ஈடு இணையில்லையே
உதிரத்தை பாலாக்கி உணவாக
எனக்களித்து உத்தமியாக
வழிநடத்திய உத்தமியே!
பத்துமாதம் சுமந்து பக்குவமாய்
என்னை ஈன்றெடுத்தவளே
நீ இன்றி நான் ஏது?
முகம் காணும் முன்பே என்னுள்
நேசம் வைத்தவளே!
முத்திரை பதித்து விட்டேன் என்
நெஞ்சில் உன் முகம் மட்டும் என்று
உன் கனவுகளையும் ஆசைகளையும்
தூக்கத்தையும் எனக்காகத் தூக்கி
எறிந்தவளே – பொறுமையின் சிகரம்
நீ – உன் பெருமைகளை கவிதைகளால்
புகழ்பாட முடியாது.


**ஷப்னா பகிரம்கான்**
உயர்தரம், முஸ்லிம் மகளிர் கல்லூரி

# மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேச பாரம்பரிய வைத்தியத் துறையில் மருத்துவிச்சிகளின் வகிபங்கு

-த.மேகராசா-



**முகவுரை:-**

மட்டக்களப்பு மாவட்டத்தில் புவியியல் அமைப்பின் அடிப்படையில் முன்னோரால் வழங்கப் பட்டுவரும் பெயரே படுவான்கரைப் பிரதேசம் ஆகும். இப்பிரதேசம் மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. சடங்கு மரபுகள், கலை மரபுகள், குடி மரபுகள், பண்பாட்டு விழுமியங்கள், வழக்காறுகள், நம்பிக்கைகள், பாரம்பரிய வைத்திய முறைகள் முதலானவை இப் பிரதேசத்தின் தனித்துவத்தினைப் பறை சாற்றுவனவாக அமைந்துள்ளன.

பாரம்பரிய வைத்தியம் என்பது கீழைத் தேய பண்பாட்டோடு இணைந்த, முன்னோர் களால் கைக்கொள்ளப்பட்ட விசவைத்தியம், சித்த வைத்தியம், மகப்பேற்று வைத்தியம் (மருத்துவிச்சி வைத்தியம்) என்பவற்றையே குறிக்கும். இவற்றில் மகப்பேற்று வைத்தியம் முக்கியமானதாகும். இது பிரசவ வைத்தியம், பிள்ளைப் பெறு வைத்தியம் என்றவாறும் அழைக்கப்படுகிறது.

உலகமயமாக்கலும் அதன் காரணமாக மரபுகள், பண்பாட்டுவேர்கள், பாரம்பரிய சமூக நடத்தைகள் என்பவற்றை மறுதலிக்கின்ற போக்கும் மேலோங்கியிருக்கும் இன்றைய காலத்தில் மிக நீண்டகாலமாக சமூகத்தில் மேலோங்கிக்காணப்பட்டதும் இன்று

பேசாப்பொரு ளாக ஆக்கப்பட்டிருப்பதுமாகிய பாரம்பரிய மகப் பேற்று வைத்தியத் துறையில் மருத்துவிச்சிகளின் வகிபங்கு பற்றிச் சிந்திப்பது முக்கியமானதாகும்.

### மருத்துவிச்சி:

பாரம்பரிய மகப்பேற்று வைத்தியத்தில் பிரசவ வைத்தியராகச் செயற்படுபவர்களை மக்கள் மருத்துவிச்சிகள் என்று அழைப்பர். இம் மருத்துவிச்சிகள் பிரசவ வைத்தியம் தொடர்பான அரச, அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக நடைமுறைப் படுத்தப்படும் எவ்வித முன் பயிற்சிகளையும் பெறாதவர்கள். பாரம்பரியமாக மகப்பேற்று வைத்திய சேவை செய்கின்றவர்களுடன் உதவியாகச் சென்றதன் மூலமும் அதுபற்றி அறிந்ததனூடாகவும் பெற்ற அனுபவமும் துணிச்சலும் தந்திரோபாயமுமே இவர்களது வழிகாட்டிகள். எளிமையும் எல்லோரிடமும் அன்பாகப்பேசும் தன்மையும் உடைய இவர்கள், மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டவர்களாக இருப்பர். இவாகள் தமது வைத்திய நடவடிக்கைகள் ஒவ்வொன்றின் போதும் காளித் தெய்வத்தையே வழிபாடு செய்வர். தாய்க்கும் பிள்ளைக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாவண்ணம் இருவரையும் பாதுகாத்துக் கொடுக்கின்ற பொறுப்புடையவர்களாக மருத்துவிச்சிகள் இருந்துள்ளனர். மருத்துவிச்சியாக ஒருவர் பணியாற்றுவதற்கு பரம்பரைத்தன்மையோ அல்லது சமூக வகுப்புத்தன்மையோ இருப்பதில்லை.

மேல் நாட்டு வைத்திய வசதிகள் விருத்தி யடையாமை காரணமாகவும் போக்குவரத்துப் பாதைகள் சீர் செய்யப்படாமை, போக்குவரத்து வாகனப் பயன்பாடின்மையாலும் மருத்துவிச்சி வைத்தியமுறையே முதன்மை பெற்று வந்துள்ளது.

### மருத்துவிச்சியின் மனப்பாங்கு:

மருத்துவிச்சிகள் பணத்தை எதிர்பாராது பொதுச் சேவையே மேலானது என்னும் மனப்பாங்குடையவர்களாகஇருந்துள்ளனர். வாய்மொழிப் பாடல்களில் மருத்துவிச்சிப்பாடல் என்றொரு வகையுண்டு. குழந்தை பிறப்பது தாய் - தந்தையர்க்கு மாத்திரம் அன்றி முழுச்சமூகத்திற்கே பயன்விளைவிப்பதாகும். தன் வைத்தியத்தால் குழந்தை பிறந்தபோது மருத்துவிச்சி ஒருத்தி சந்தோசத்தில்

அயலும் புடையும் வாழ வேண்டும்
அன்னமும் சுற்றமும் வாழ வேண்டும்
ஆச்சியும் அப்புவும் வாழவேண்டும்
அம்மானும் மாமியும் வாழவேண்டும்.

என்று பாடுகின்றாள். இவ்வாறான உயரிய குணம் படைத்த ஒருவராகவே மருத்துவிச்சியை அடையாளப்படுத்தமுடியும்.

### படுவான்கரைப் பிரதேச மருத்துவிச்சிகள்:

படுவான்கரைப் பிரதேசத்தின் வசதி வாய்ப்புக்கள் அற்ற சூழ்நிலை மருத்துவிச்சிகள் பலர் உருவாகுவதற்கு ஏதுவாக அமைந்ததில் ஆச்சரியமில்லை. வைத்திய சாலை வசதிகளோ அல்லது போக்குவரத்து வசதிகளோ அற்ற இப்பிரதேசத்தில் நீண்ட காலமாக இடம்பெற்று வந்த யுத்த சூழலும் பெரும் பாதிப்பினை ஏற் படுத்துவதாகவே அமைந்திருந்தது. இந்நிலையில் மனதில் திடமும் மனித நேயமும் மிக்க இப்பிரதேச பெண்கள் பலர் மருத்துவிச்சிகளாகச் சமூக சேவை புரிந்துள்ளனர். இவர்களில் அனேகமானவர்கள் இன்று உயிருடன் இல்லை. அவர்களின் தகவல்களை அறியக் கூடிய ஆவணங்களோ ஆய்வுப் பதிவுகளோ இன்று மிக மிக அரிதாகவே உள்ளன. ஆய்வுத் தேடலில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் படுவான்கரைப் பிரதேசத்தில் சேவையாற்றிய மருத்துவிச்சிகளாகப் பின்வருவோரை குறிப்பிட முடியும்.

**கொக்கட்டிச்சோலை**

1. வேலாச்சி பொன்னம்மா (இறந்துவிட்டார்)
2. மாணிக்கம் அழகிப்போடி
3. செம்பாப்போடி இராசம்மா

**முனைக்காடு**

1. இளையதம்பி நேசம்மா

**மகிழடித்தீவு**

1. கதிர்காமப்போடி நாச்சிப்பிள்ளை (இறந்துவிட்டார்)

2. கதிர்காமப்போடி சின்னப்பிள்ளை (இறந்துவிட்டார்)
3. கதிர்காமப்போடி குஞ்சாத்தை(இறந்துவிட்டார்)

**பண்டாரியாவெளி**

1. சின்னத்தம்பி வள்ளியம்மை(இறந்துவிட்டார்)
2. தம்பிமுத்து தங்கம்மா (இறந்துவிட்டார்)

**படையாண்டவெளி**

1. பூபதிப்பிள்ளை (இறந்துவிட்டார்)

**அம்பிளாந்துறை**

1. கந்தப்போடி நாகம்மா (இறந்துவிட்டார்)

**பட்டிப்பளை**

கதிரமலை பொன்னம்மா(இறந்துவிட்டார்)

**முதலைக்குடா**

1. ஆறுமுகம் பொன்னம்மா (இறந்துவிட்டார்)
2. ஆறுமுகம் நேசம்மா(முதலைக்குடா)

**அரசடித்தீவு**

1. வேலாப்போடி மனோன்மணி

**ஆயித்தியமலை**

1. வீ. சின்னக்குட்டி.

**பழுகாமம்**

1. நேசம்மா

இவர்களைத்தவிர இன்னும் சிலரை இனங்கண்டுகொள்ளமுடியும்.

**மருத்துவிச்சியின் வகிபங்கு:**

பாரம்பரிய மகப்பேற்று வைத்தியத்தில் மருத்துவிச்சியே பிரதானமானவர். வைத்திய சாலை வசதிகளோ வைத்தியர்களின் தொடர்போ அற்றுக் காணப்பட்ட படுவான்கரைப் பிரதேசத்தில் மருத்துவிச்சிமாரின் வகிபங்கு போற்றுதற்குரியதாகும். இவர்களிடம் காணப்பட்ட சமூக அக்கறையினாலும் புத்திசாதுரியத்தினாலும் இன்று வளர்ந்துள்ள மேலைத்தேய வைத்திய முறையினால் செய்யப்படும் பணியினை அன்று அவர்கள் சிறப்பாகச் செய்துள்ளனர். எந்நேரத்தில் எம்முடிவினையும் செயலினையும் ஆற்ற வேண்டும் என்ற முனைப்பான செயற்திறம் பெற்றவர்களாக மருத்துவிச்சிமார் விளங்கியுள்ளனர். மருத்துவிச்சிமாரின் வகிபங்கினை குழந்தை பிறப்பதற்கு வைத்தியம் செய்தல், குழந்தை பிறந்த பின்னர் வைத்தியம் செய்தல் என்று இருவகையாகப் பிரித்து நோக்க முடியும்.

**(அ). குழந்தை பிறப்பதற்கு வைத்தியம் செய்தல்**

குழந்தையைப் பிரசவிக்க இருக்கும் காலத்துக்கு முன்பே தமது கிராமத்தில் அல்லது பக்கத்துக் கிராமத்தில் வசிக்கின்ற மருத்துவிச்சியிடம் தெரியப்படுத்திக் கொள்வது வழக்கமாக இருந்து வந்துள்ளது. அவ்வகையில், நிறை மாதம் (குழந்தை பிறக்கும் மாதம்) ஆகியதும் குறிப்பிட்ட தாய்க்கு வயிறு நோவு ஏற்படும். அப்போது வீட்டார் மருத்துவிச்சியின் வீட்டுக்குச் சென்று அவரை ஏற்றிவருவர். அவர் கை நாடி பிடித்துப்பார்த்து கருமாரி ஆகிவிட்ட(குழந்தை பிறக்கத் தயாராகி விட்ட) நிலைமையை அறிந்து கொள்வார். மருத்துவிச்சிக்குத் துணையாக குறைந்தது மூன்று பேர் இருப்பர். தலையைப் பிடித்துக் கொள்வதற்கு, காலைப்பிடித்துக் கொள்வதற்கு, வேலைகளுக்கு உதவியாக என இவர்கள் துணைபுரிவர்.

குழந்தையைப் பெற இருக்கும் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட தாயின் உடல் குளிர்ந்து இருக்கும். வயிறு கீழ் இறங்கி இருக்கும். வயிற்றை மெதுவாகக் குலுக்கி விடுவதன் மூலம், குழந்தை பிறந்து விடும். குழந்தை பிறந்தவுடன் மாக்கொடியை (இதனை நஞ்சு என அழைப்பர்) மீண்டும் வயிற்றைக் குலுக்கி எடுப்பர்.

எல்லாப்பிரசவத் தாய்க்கும் இவ்வாறு இலகுவாகக் குழந்தை பிறப்பதில்லை. நோவு (இதனை நோக்காடு என்பர்) ஏற்படவில்லையாயின் கோடைக்கிழங்கு அரைத்து தொப்புளில் பூசுதல், முருங்கைப்பூவை தேங்காய்ப்பாலில் காசிச்சதம் (பழைய சத நாணயம்) போட்டு அரைத்து குடிக்கக் கொடுத்தல் என்பவற்றைச் செய்வர். இச்சந்தர்ப்பத்தில் ஆயுர்வேத சித்த வைத்தியர், தமது மந்திர சக்தியைப் பயன்படுத்தி மருத்து விச்சிக்கு உதவிபுரிவார். குழந்தை பிறக்கத் தாமதிக்கும்போது அவர்,

அஞ்ஞான யோகி
ஆங்கார வைரவி
அட்டமா காளி
இகட தட வீரபத்திர காளி

ஐயனாணை நெகிழ்
அருமேஸ்வரனாணை நெகிழ்
அடைத்த கதவு திறக்க
சங்கு திறக்க
சக்கரம் திறக்க
அடியாளுக்கு இந்திர லோகம் தெரிய வேணும்
திரிபுரம் எரித்த கோபிய
அவ்வனத்தே தாயும் பிள்ளையும் வேறு வேறாக
மாவும் பிள்ளையும் வழிகி விழவே சிவாய''
"புவன பஞ்ச பஞ்சாச்சரி
இயம தக்கன பஞ்சாச்சரி
ஆதி அலங்கார மோகினி
வாடி தாயே பத்திர காளி
இருட்டறையில் இருக்கும்
இந்திரமோகினி வயிற்றில் தரித்த கர்ப்பம்
தாயும் பிள்ளையும் வேறுவேறாக
மாவும் கொடியும் வழுகி விழவே சிவாய''
என்று பல மந்திரங்களை உச்சாடனம் செய்து குறிப்பிட்ட வீட்டின் வாசல் கூரையில் தண்ணீர் ஓதிச் சொரிய வயிறு நொந்து குழந்தை பிறக்குமென குறிப்பிடுகின்றனர்.

பிள்ளை பிறந்து மாக்கொடி விழவில்லையாயின் குறிப்பிட்ட தாய் இறப்பதற்கு சாத்தியப்பாடுகள் அதிகமாக உண்டு. அதனால் எப்படியாவது, மாக்கொடி நசிந்து உடலில் கலக்கா வண்ணம் கவனமாக வெளியே எடுக்க முற்படுவர். சில மருத்துவிச்சிமார், மாக்கொடி விழுவதற்குத் தாமதமாகிக்கொண்டு செல்லும் சந்தர்ப்பத்தில் துணிச்சலுடன் தமது கைகளை உள்ளே விட்டு அதனை வெளியே எடுத்து உயிரைக் காத்தும் உள்ளனர். மாக்கொடி விழுவதற்கு சித்த வைத்தியர், ஈர்க்கிலில் மூன்று திரி செய்து அதனை தேங்காயில் வைத்து காளியை நினைத்து மந்திரத்தைச் சொல்லி அதனை வெட்டுவதும் உண்டு.

'வர்ணனை நோக்கி
வலது கையில் எடுத்தேன் தேங்காய்
மகாவிஸ்ணு தன்னாணை
கருக்கலம் கதவு திறக்க
மாயாலோகத்தில்
தவமிருந்த தவமுனி தவங்குலைந்து
இவ்வுலகத்திருளிகளாணை
இங்கு வரவே சிவாய.
பஞ்சலோகி பாதாளலோகி
பரமசிவனைப் பாரடி காளி
திரும்படி அம்மே
திரும்பி வந்து
மாவும் கொடியும்
வழுகி விழவே சிவாய''
என்று மந்திரத்தைச் சொல்லி பின்னர்,
தில்லி தில்லி மயக்குமாறணி
நவலோக சக்தி
உறுமு உறுமு உறுந்து பார்
என்னை நினையாதே
இவ்விடத்தில்
எச்சிப்பசாசியை அணுக விடாதே
வஞ்சித்துக் கேட்டாலும்
வஞ்சித்துச் சொல்லாதே
அகோர வீரபத்திர காளி அம்மா
இந்தா வா முக்கண் பலி இந்தா
என்று தேங்காய் வெட்டி விட மாவும் கொடியும் விழும் எனக் குறிப்பிடுகின்றனர்.

### (ஆ). குழந்தை பிறந்த பின்னரான வைத்தியம்

குழந்தை பிறந்ததும் குழந்தையைத் தூக்கி அதனைக் கழுவி, துப்பரவு செய்த பின்னர், முதலில் தாய்க்கு மருத்துவிச்சி, மிளகு, வெள்ள வெங்காயம்,வெற்றிலை என்பவற்றைச் சுருட்டி வாய்க்குள் வைத்து விடுவார். இதனைத் தல முளகு என்று அழைப்பர். பின்னர் ஆயுர்வேத வைத்தியரினால் பத்து நாட்களுக்கு சூலவாயுக குளிசை கொடுக்கப்படும். உடம்பில் குளிர்த் தன்மை இருந்தால் ஆடாதோடாக் குளிசை'' கொடுக்கப்படும்.

குழந்தை பிறப்பதற்கு வைத்தியம் பார்க்கும் மருத்துவிச்சி, குழந்தை பிறந்து பன்னிரண்டாம் நாள் மீண்டும் குறித்த வீட்டுக்குச் சென்று மண்வீடாயின் அவ்வீட்டிற்கு மாட்டுச் சாணம் போட்டு மெழுகியும் கல் வீடாயின் நீரால் கழுவியும் துப்பரவு செய்து விடுவர். அன்றைய தினமே அவர்களுக்கு விரும்பிய அன்பளிப்புப் பணத்தைக் கொடுப்பர்.

**மருத்துவிச்சிகளின் அன்றைய நிலையும் இன்றைய நிலையும் :**

இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்பு படுவான்கரைப்பிரதேசக் கிராமங்களில் வைத்திய சாலைகளோ போக்குவரத்து வசதிகளோ வளர்ச்சி யடையவில்லை. கூடாரக்கரத்தையில் பயணித்து வைத்தியர் ஒரு இடத்துக்கு ஒரு கிழமைக்கு ஒரு தடவை சென்றுவரும் முறை 1940,50 களில் இருந்துள்ளது. பிள்ளைப்பேறு என்பது 'வாழ்வு அல்லது சாவு' என்னும் நிலையிலேயே காணப்பட்ட காலம் அது. அன்று மருத்துவிச்சி மார் உயிர்காக்கும் கடவுளர்களாக மதிக்கப்பட்டு ள்ளனர்.

குன்றும் குழியுமான காடுகள் சூழ்ந்த பாதையை நம்பி, அப்பாதையினூடாக வைத்திய சாலைக்குச் செல்லும்போது ஏற்படும் உயிராபத் திற்குப் பயந்து பிரசவத்தாயை வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லவிரும்பவில்லை. அதனால் மருத்துவிச்சிமாரின் பணி மிக மிக அவசியமானதாகக் காணப்பட்டது. இன்றுள்ள மருத்துவிச்சிமார்களின் தகவல்களின் படி அவர்களில் சிலர் ஐந்நூறுக்கு மேற்பட்ட தாய் மாருக்குப் பிரசவம் பார்த்துள்ளமையை அறியக் கூடியதாக உள்ளது.

இன்று வைத்தியசாலை வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சில வைத்திய சாலைக ளில் மகப்பேற்று வைத்திய வசதிகள் இல்லா விட்டாலும் போக்குவரத்து வசதிகளும் அம்புல ன்ஸ் சேவையும் காணப்படுகின்றன. அத்துடன் இன்று தாதிய உத்தியோகத்தர்களின் சேவையும் விரிவாக்கப்பட்டுள்ளது. தாதி முறை அறிமுகப் படுத்தப்பட்டமை மருத்துவிச்சி வைத்தியத்தின் வீழ்ச்சிக்கு மிக முக்கியமான காரணமாகும்.

இன்று மருத்துவிச்சி வைத்தியமுறையை வளர்ப்பதற்கான முறைசார் திட்டம் எதுவும் இல்லாமை பெரும் சவாலாகும். பலரும் மேலைத்தேய வைத்திய முறையை வளர்க்கவேண்டுமென்று நினைக்கிறார்களே தவிர பக்கவிளைவுகள் அற்ற பாரம்பரிய வைத்தியமுறைகளை ஊக்குவிப் பதற்கும் வளர்ப்பதற்கும் முயல்வதில்லை. எந்தவிதமான பயிற்சிகளுமற்ற மருத்துவிச்சிகள் நீண்டகாலமாக பிரசவம் பார்த்து வியக்கத்தக்க பணி செய்து வந்துள்ளனர். எனவே சுதேச பாரம்பரிய மகப்பேற்று வைத்தியமுறையில் உள்ள நன்மைகளைப் புரிந்துகொண்டு அதனை ஊக்குவிப்பதற்கு முயலாமையும் அதற்கான முறைசார் திட்டங்களை வடிவமைக்காமையும் பெரும் சவாலாகும். சில ஆண்டுகளுக்கு முன்பு மருத்துவிச்சிமார்களில் சிலர் அழைக்கப்பட்டு தாதி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். எனினும் அவர்களை முறையாக வழிநடத்தவில்லை.

கர்ப்பிணித் தாய்மாரை வைத்தியசாலை களில் அனுமதிக்குமாறே கிராம மட்டத்தில் பணியாற்றும் தாதிய உத்தியோகத்தர்களும் வைத்தியர்களும் வலியுறுத்தப்படுகின்றனர். வீடுகளில் பிறக்கும் குழந்தைகளேபெரும்பாலும் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாதவர்களாகவும் தடுப்பூசி மருந்துகளை முறையாகப் பெறாதவர் களாகவும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வைத்தியசாலைகளில் எத்தனை அறுவைச் சிகிச்சைகள் நடைபெற்றாலும் குழந்தைகள் இறக்க நேரிடினும் வீடுகளில் வைத்து பிரசவ வைத்தியம் பார்க்கும்போது தாய்க்கோ அல்லது குழந்தைக்கோ ஏதேனும் விபரீதம் நடந்தால் அதுவே பெரும் தவறாகக் கருதப்படும் நிலை இன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

படுவான்கரைப் பிரதேசத்தின் பாரம்பரிய மருத்துவத் துறைக்குப் பணியாற்றிய மருத்து விச்சிமார் பலர் இன்று இறந்து விட்டனர். அவர்க ளுக்கான எவ்வித அரச சலுகைகளோ வசதி வாய்ப்புக்களோ வழங்கப்படவில்லை. இன்றுள்ள மருத்துவிச்சிமாரின் நிலையும் இத்தன்மையான தேயாகும். பிரதேச செயலகங்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதுடன் தமது கடமையை மட்டுப்படுத்திவிடுகின்றன. அதுவும் எல்லா மருத்துவிச்சிமாரும் இவ்வாறு மதிப்பளிக்கப் படவில்லை. இதுவே மருத்துவிச்சிமாரின் இன்றைய நிலையாகும்.


ஆக, இன்றுள்ள வைத்திய வசதிகள், சட்டச் சிக்கல்கள் காரணமாக மருத்துவிச்சிமார் முன்புபோல் தமது பணியை மேற்கொள்வதில்லை. வைத்தியசாலையினால் கொடுக்கப்படும் பிரசவ திகதிக்கு முன்பு திடீரென பிரசவம் ஏற்படும் நிலை ஏற்படினும் கூட போக்குவரத்து வசதி காரணமாக வைத்தியசாலைக்கே கொண்டு செல்லும் நிலை காணப்படுகின்றது. இச் சூழ்நிலையிலும் கூட பிரசவத் தாயின் வீட்டார் மருத்துவிச்சிமாரின் உதவியை நாடுவது மிக மிக அரிதாகவே உள்ளது.

### முடிவுரை

மேலைத்தேய நவீனத்துவத்தின் மோகமும் தாக்கமும் அதிகமாக உள்ள இன்றைய காலத்தில் மகப்பேற்று வைத்தியம் முதலான பாரம்பரியவைத்தியமுறைகளை அறிந்து கொள்வதும் அத்தகைய துறைசார் கலைஞர்களை கௌரவிப்பதும் அவசியமானதாகும். இன்று ஆயுர் வேத வைத்திய சாலைகள் என்று இயங்குகின்ற வைத்திய சாலைகள் கூட ஆங்கில மருத்துவ நடைமுறைகளையே அதிகம் பின்பற்றுவனவாக மாறி வருகின்றன. ஆங்கில மருத்துவ சாலைகளில் கொடுக்கப்படும் மாத்திரைகளை இடித்து மாவாக்கி தேனில் கலந்து உண்ணக்கொடுப்பதுபோலவே இத்தகைய வைத்திய முறைகள் மாறிவருகின்றன. இந் நிலை கவலைக்குரியதாகும். மருத்துவிச்சிமாரின் பணி போற்றுதற்குரியது என்பதுடன் அவர்கள் பற்றிய விபரங்களும் சேகரிக்கப்பட்டு ஆவணப் படுத்தப்படுவதும் இன்றியமையாததாகும்.

### தகவல்கள் தந்தோர்

1. திரு பெத்திப்போடி சின்னத்தம்பி,
ஆயுர் வேத சித்த வைத்தியர், பண்டாரியாவெளி
2. திருமதி செம்பாப்போடி இராசம்மா, மருத்துவிச்சி,
கொக்கட்டிச்சோலை.
4. திருமதி அழகிப்போடிமாணிக்கம்,
கொக்கட்டிச்சோலை.
5. திருமதி வீரக்குட்டி சின்னப்பிள்ளை,
ஆயித்தியமலை தெற்கு, ஆயித்தியமலை




பாடம் படிக்க வேண்டிய
காலத்தில் -
லாடம் கட்டிய மாடாக
உழைக்கலாமா?

விறகுக் கட்டை சுமக்கும்
சுமை தாங்கிகளாக
இன்னும் எத்தனை காலம் தான்
சிறுவர்கள் தொழில் செய்வது?

உண்ண உணவும் - உடுத்த உடையும்
கிட்டாத வறுமைக்கு
சிறுவர்கள் சிறைபடுவது
எப்படி நியாயமாகும்?

பள்ளி சென்று படித்தாலன்றோ
நாளைய தலைவர்கள் தோன்றுவர்?
சிறுவரது துஷ்பிரயோகம் தொடர்ந்தால்
சிதைந்த எதிர்காலமே மிஞ்சும்!

"பருவத்தே பயிர் செய்" என்ற
பைந்தமிழ் பழமொழி
சிறுவர் சிறப்புடன் வாழ
சிரிக்கும் பச்சை விளக்கன்றோ?

**பா. ஹஹதானி நவ்பர்**
**தரம் -08**
**முஸ்லிம் மகளிர் கல்லூரி.**



# ஈழத்து பெண் எழுத்தாளர் தாமரைச்செல்வியுடனான நேர்காணல்

தாமரைச்செல்வி எனும் புனைபெயரைக் கொண்ட திருமதி ரதிதேவி கந்தசாமி அவர்கள் ஈழத்தின் நவீன இலக்கிய வரலாற்றில் முக்கியத்துவம் உடையவராகக் கொள்ளப்படுகின்றார். இவர் கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன் பிரதேசத்தில் குமரபுரம் எனும் கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் 1973இல் எழுத்துத்துறையில் பிரவேசித்தார். ஆரம்பத்தில் இலங்கை வானொலியின் பல நிகழ்ச்சி களுக்கு சிறுகதைகளை எழுதினார். 1974இல் பத்தி ரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதத்தொடங்கி னார். தொடர்ந்தும் ஈழத்தின் பல பத்திரிகை, சஞ்சிகைகளில் எழுதி வந்தார். ஈழத்துப் பெண் எழுத்தாளர்கள் வரிசையில் முக்கிய இடம்பிடித்த இவர் 200க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் நாவல்களையும் குறுநாவல்களையும் கவிதை களையும் எழுதியுள்ளார். இவரது சுமைகள்(1977), விண்ணில் அல்ல விடிவெள்ளி(1992), தாகம்(1993), வீதியெல்லாம் தோரணங்கள்(2003), பச்சைவயல் கனவு(2004), வேள்வித்தீ(1994), ஒரு மழைக்கால இரவு(1998), அழுவதற்கு நேரமில்லை(2002), வன்னியாச்சி(2005) ஆகிய புனைகதைகள் நூலுருப் பெற்றவையாகும். மேலும் 'பசி' எனும் சிறுகதை தமிழ்நாடு ஜே.டி.இயமவர்மன் என்பவரால் குறும் படமாக எடுக்கப்பட்டு 'விம்பம்' தமிழ்க்குறுந்திரைப் பட விழாவில் சிறந்த திரைப்படத்துக்கான விருதைப் பெற்றது. தாமரைச்செல்வி இவர்கள் தற்போது புலம் பெயர்ந்து அவுஸ்ரேலியாவில் வாழ்ந்து வருகின்றார். இவருடனான நேர்காணலின் போது:

**இ.விக்கினேஸ்வரி**

• **கேள்வி :-** நீங்கள் எழுத்துத் துறையில் பிரவேசித்தமைக்கான நோக்கம் என்ன?

**பதில் :-** வாசிப்பது எனக்கு ரொம்ப பிடித்த விடயம் என்னை எழுதத் தூண்டியதும் அந்த ஆர்வமே. நான் பார்த்து வளர்ந்த பிரதேசத்தை எழுத்தில் கொண்டு வர வேண்டும் என்பது எனது ஆசையாகும். சமூகத்தை கவனிக்க வைக்கும் விடயங்களை எழுதுவது சிறப்பானது என்பதை உணர்ந்து கொண்டேன். நான் வாழ்ந்த விவசாய சூழலை, அந்த ஏழை மக்கள் வாழ்வை எழுத்தில் கொண்டு வர வேண்டும் என்பதே எனது நோக்கமாக இருந்தது.

• **கேள்வி :-** நீங்கள் எழுத்துக்களில் அதிகமாக உள்வாங்கும் விடயம் என்ன?

**பதில் :-** நான் வாழ்ந்த சமூகச்சூழலில் நான் காண நேர்ந்த... என்னால் உணர முடிந்த எம் நாட்டின் ஏழை மக்களின் பிரச்சினைகளே எனது படைப்புக்களில் கருக்களாகின்றன. கடந்த போர்க்காலச் சூழலுக்கு முகம் கொடுத்து வாழ்ந்த மக்களின் பல்வேறு உணர்வுகளையும் அவலங் களையும் எனது எழுத்துக்கள் சித்திரிக்கின்றன. எமது மண்ணில் நடந்த உண்மை நிகழ்வுகளின் தொகுப்பாகவும் கருதலாம்.

எமது மண்ணின் நிகழ்வுகளை ஆவணப்படுத்துவது காலத்தின் தேவையாகும் அப்போது தான் மக்களின் உண்மையான பிரச்சினைகளையும் பல வருடங்கள் பல நெருக்கடி களுக்கு முகங்கொடுத்து வாழந்த மக்களின் உணர்வுகளையும் மற்றைய மக்களும் நாளைய சந்ததியினரும் அறிந்து கொள்ள முடியும். சொந்த மண்ணிலேயே இருப்பிடம் இழந்து அகதியாகி குண்டுகளின் அதிர்வும் கந்தக நெடியும் ஒருபுறம் துரத்த உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில் பதுங்குகுழியின் பக்கத்துணையுடன் வாழ்ந்த மக்களின் நடுவில் ஒருத்தியாக வாழ்ந்து கொண்டே தான் இப்படைப்புக்களை எழுதி தொகுப்பாக்க முனைந்தேன்.

• **கேள்வி** :- உங்கள் புனைகதைகளில் அதிகமானவை இடப்பெயர்வை மையப்படுத்தி இருக்கின்றது. இது பற்றி கூறமுடியுமா?

**பதில்** :- அதிகமான புனைகதைகள் இடப் பெயர்வின் பின்வந்த நாட்களில் எழுதியவை. அதனால் எல்லாக் கதைகளுக்கும் பொதுவான அடித்தளமாக இடப்பெயர்வு இருக்கின்றது. அதனால்தான் ஒரே பின்னணி எல்லாக் கதை களிலும் பரவும் போது ஒரே சாயலைத் தரும் தன்மை ஏற்பட்டிருக்கின்றது. இது வாசிப்பவர் மத்தியில் சிறிது சலிப்பையும் தரக்கூடும். ஆனாலும் ஒரே மண்ணில் ஒரே கால கட்டத்தில் வாழும் இந்த மனிதர்களின் உணர்வுகளின் வெளிப் பாடுகள் இந்த விதமாய் அமைவதை தவிர்க்க முடியாமலே இருக்கின்றது. எத்தனையோ அவலங்களுக்கு மத்தியிலும் நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்களைப் பற்றி எழுதுவது காலத்தின் தேவையாகின்றது. இதுவே மனநிறைவையும் தருகின்றது.

• **கேள்வி** :- நீங்கள் ஒரு மூத்த எழுத்தாளர் என்றவகையில் ஒரு சிறந்த படைப்பு என்பது எப்படிப்பட்டது? அது பற்றிய உங்கள் கருத்து என்ன?

**பதில்** :- தனக்காக மட்டும் சிந்திக்காமல் பிறருக்காகவும் சிந்திப்பவன் தான் உண்மையான எழுத்தாளனாகின்றான். அவனது சிந்தனை மிகவும் பரந்தது. சமுதாயத்தின் இன்பமும் துன்பமும் அவனைத் தாக்கிக் கொண்டேயிருக்கின்றது. உலகின் ஏதோ ஒரு மூலையில் எழும் சோகக் குரல் அவன் இதயத்தை தீயாகச் சுடுகின்றது. யாரோ சிந்தும் சிரிப்பொலி இன்ப சுகத்தை அள்ளிக் கொடுக்கின்றது. இத்தாகத்தால் தோன்றும் கருவை தனது அனுபவத்தின் சாரத்தை ஊட்டி வளர்த்து உரிய நேரத்தில் பிரசவிக்கும் போது தான் அது அமரத்துவமான படைப்பாகின்றது. திடீர்த் திருப்பங்களையும் அதிகமான கற்பனை களையும் கலந்து மக்களை மயக்க முயல்வது போலித்தனமான நடிப்பாகும். மக்களின் பார்வைக்கு சுலபமாக எட்டக் கூடிய நியாயமான பாதையைக் காட்டுவது தான் பயன் தரும் படைப்பாகும். சோகமும் சோதனைகளும் நிறைந்த வாழ்வில் பலத்தையும் நம்பிக்கை யையும் ஊட்டி ஒருவிதத்தெம்பை ஏற்படுத்துவது எழுத்தாளனின் கடமையாகும்.

• **கேள்வி** :- புனைகதைகளில் பெண்ணியற் சிந்தனைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளீர்கள். அந்த வகையில் சமூகத்தில் பெண்களின் நிலை பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்** :- சமூகத்தில் பெண்ணடிமைத்தனம், சீதனப்பிரச்சினை என்பன புரையோடிருந்த போது அவற்றை படைப்புக்களில் வெளிப்படுத்துவது காலத்தின் கட்டாயமாக இருந்தது. தமிழ்ச் சமூகத்தில் பெண்ணின் நிலை, பெண்கள் மீது திணிக்கப்படும் கட்டுப்பாடுகள் மற்றும் அவர்களது அனுபவங்கள், பெண்கள் எதிர் கொள்ளும் சவால்கள் போன்ற விடயங்களை கவனத்தில் கொண்டு தான் படைப்பில் பெண்களை சித்திரிக்க முடியும்.

சீதனப்பிரச்சினை பெண்களின் வாழ்வை அதிகமாக சீர்குலைத்து விடுகின்றது. இதனால் மனமுடைந்து கூனிக்குறுகிப் போய் விடுகின்றார்கள். பொதுவாக தமிழ் மக்களிடையே தான் இந்த சீதனப் பிரச்சினை அதிகமாக இருக்கின்றது. இதைச் சாடுவதும், அதற்கு ஒரு தீர்வை ஏற்படுத்துவதும் தமிழ் எழுத்தாளர்

களுடைய கடமை. ஆண் எழுத்தாளர்கள் இதன் மீது ஒரு மேலோட்டமான சிந்தனையைத்தான் செலுத்துவார்கள். ஆனால் யதார்த்த பூர்வமான – ஆணித்தரமான கண்ணோட்டத்தில் நோக்குகின்ற திறமை பெண் எழுத்தாளர்களுக்குத் தான் இருக்கும். குடும்பத்தில் அதிகமான வலிகளை ஆண்களை விட பெண்களே சுமக்கின்றார்கள். பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழ வேண்டிய நிலையில் பெண்கள் உள்ளனர். இது இன்றுவரை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இந்நிலை மாற வேண்டும்.

பெண்கள் கல்வியறிவு உடையவர்களாகவும் சுயதேவையை தாமே பூர்த்தி செய்பவர்களாகவும் இருக்க வேண்டும். உத்தயோகம் பார்க்கும் ஆணுக்கு இருக்கின்ற உரிமை உத்தியோகம் பார்க்கும் பெண்ணுக்கு இல்லாமல் போவது வேதனையான விடயம் இல்லையா? இத்தகைய பாகுபாடுகள் நம் சமூகங்களிடையே இழையோடி உள்ளன. அதனை படைப்பில் வெளிக்கொணர எழுத்தாளர்கள் முன்வர வேண்டும். அத்தோடு இந்நிலைமை முற்றுமுழுதான மாறுதலை கொண்டமையவேண்டும்.

**பெண்கள் கல்வியறிவு உடையவர்களாகவும் சுயதேவையை தாமே பூர்த்தி செய்பவர்களாகவும் இருக்க வேண்டும். உத்தயோகம் பார்க்கும் ஆணுக்கு இருக்கின்ற உரிமை உத்தியோகம் பார்க்கும் பெண்ணுக்கு இல்லாமல் போவது வேதனையான விடயம் இல்லையா? இத்தகைய பாகுபாடுகள் நம் சமூகங்களிடையே இழையோடி உள்ளன. அதனை படைப்பில் வெளிக்கொணர எழுத்தாளர்கள் முன்வர வேண்டும்.**

• **கேள்வி** :- உங்கள் படைப்புக்களின் செல்நிலை பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**பதில்** :- பத்திரிகை, சஞ்சிகைகளில் 200க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளேன். 06 நாவல்களை இதுவரை எழுதியுள்ளேன். அதில் உயிர் இருக்கும் வரை (2000) நாவல் தினக்குரலில் தொடராக வெளிவந்தது. எனினும் அதனை நூலுருவாக்க முடியவில்லை மற்றும் இரு குறுநாவல்களை எழுதியுள்ளேன். வேள்வித்தீ – 1994 இல் வெளிவந்தது. "அவர்கள் தேவர்களின் வாரிசுகள்" சஞ்சிகையில் மட்டுமே வெளிவந்தது. இதனைவிட சிறுகதைகளில் 3 தொகுதிகளை வெளியிட்டிருக்கின்றேன். கவிதைகளும் எழுதியுள்ள போதிலும் தொகுதிகளாக்க முனையவில்லை.

1974 ஆம் ஆண்டு எழுத ஆரம்பித்ததிலிருந்து எனது படைப்புகள் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்தும் 1987 ஆம் ஆண்டு எமது வீடு இராணுவத்தினரால் எரியூட்டப்பட்ட போது முற்றாக எரிந்து விட்டது. என்னால் எழுதி பிரசுரிக்கப்பட்ட அத்தனை படைப்புக்களும் சான்றிதழ்களும் அழிந்து விட்டன. இவை அழிந்ததனால் ஒரு எழுத்தாளனுக்கு ஏற்படக்கூடிய மனவேதனையை ஒரு படைப்பாளியினால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும். அழிந்து போய் விட்ட நிலையில் இருக்கின்றவற்றையும் சிரமப்பட்டு தேடி எடுத்தவைகளையும் நூல் வடிவில் ஆவணப படுத்தி வைக்க வேண்டும் என்ற சிந்தனை எழுந்து பல சிரமங்களை எதிர் கொண்டு பொருளாதார சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வெளிவந்த இந்த எழுத்துக்கள் மக்களால் வாசிக்கப்பட வேண்டும். ஆரோக்கியமான சூழல் ஏற்பட்டால் தான் நிறைய நூல்கள் வெளிவர வாய்ப்பு ஏற்படும்.

நேர்மை, வறுமை, உழைப்பு ஆகியவற்றை எழுதிவந்தேன். இவற்றைத் தாண்டி போரின்போதான மக்களின் வாழ்க்கை நிலை தொடர்ந்து போரில் இருந்து மக்கள் எப்படி மீண்டு

வந்தனர் போன்ற விடயங்களை பிரதிபலிக்கும் வகையில் எனது எழுத்துக்கள் அமைந்தன. சமூக மாற்றத்துக்கேற்ப எழுத்துக்களில் மாற்றங்கள் அமைய வேண்டும். அந்தவகையில் எனது எழுத்துக்கள் சென்றன.

• **கேள்வி** :- எழுத்தார்வம் தவிர்ந்து ஏனைய துறைகளில் ஆர்வம் உள்ளதா?

**பதில்** :- ஆம், எனக்கு ஓவியம் வரைவது பிடிக்கும். முறைப்படி படிக்கவில்லை பல ஓவியர்களது ஓவியங்களைப் பார்த்து வரைந்து பழகியது தான். சுடர், ஈழநாடு, சித்ரா போன்ற பத்திரிகைகளில் தான் என் ஓவியங்கள் வந்துள்ளன. ஏன் மற்ற பத்திரிகைகள் என்னுடைய ஆக்கத்திற்கு தந்த இடத்தை அவை தரவில்லை, அது ஏனென்று தெரியவில்லை.

• **கேள்வி** :- ஒரு குடும்பத் தலைவியாக இருந்து கொண்டு இப்படி ஓவியம், எழுத்து என்று கலைத்துறையில் தொடர்ந்தும் ஈடுபடுகின்றீர்களே இது எப்படி சாத்தியமாகின்றது?

**பதில்** :- சிரமம் தான் என்றாலும் எனது விடாமுயற்சி மற்றும் கணவர் தரும் ஊக்கம், பெற்றோர் தரும் தன்னம்பிக்கை என்பன என்னை விடாமல் எழுத வைத்தது. பெண்ணுக்கு குடும்ப ஆதரவு கட்டாயம் தேவை.

**கேள்வி** :- வளர்ந்துவரும் இளம் எழுத்தாளர்களுக்கு ஏதாவது சொல்ல விரும்புகின்றீர்களா?

**பதில்** :- வாசிக்க வேண்டும். வாசிப்பு முக்கியமானது. வாசிப்பில் ஆர்வம் உள்ளவர்களால் மட்டுமே எழுத முடியும். அத்தோடு படைப்புக்கள் பற்றிய அறிவும் முக்கியமானது. தாம் வாழும் சமூகத்தை கூர்ந்து கவனிக்க வேண்டும். அவற்றை மனதில் உள்வாங்கி எழுத்துக்கள் மூலம் வெளிப்படுத்த வேண்டும். எமது காலத்தைப் போன்ற சூழல் தற்போது இல்லை. மாற்றங்கள் நிறைந்த வசதி வாய்ப்புக்களுடன் கூடிய சூழல் காணப்படுகின்றது. ஆகையால் சந்தர்ப்பத்தைப் பயனள்ளதாக் குங்கள்.




அரசியல்வாதியன்
சிறைப்படுகையில்.....
எழுதப்படுவது
சரிதம்.....
பிறந்தது
படித்தது
கைப்பிடித்தது...

அடிக்கல்
வாங்கியகதிரை
கௌரவமாகும்.
சிறைக் கதவுகளும்
பேசும்
அவன் சுயசரிதம்.

அரசியல்வாதியாள்
ஒருத்தி
அடைபடுகையில்
நீட்டப்படும்
நாக்குகள்
எண்ணப்படும்,
அவள்
கழட்டியசிலிப்பர்
உள்ளாடைகள்
சிக்கியதலையின் கிளிப்புகள்
சேலையின்
தலைப்புகள்

*அரசியல் மேடையில்*
கல்குலேட்டர்கள்
விற்பனையாகும்.

(ஜெயலலிதாவின் சிறையின் பின்
எழுதியது.

**விஜயலட்சுமி**

மனிதவரலாற்றினையும், மனிதச் சமூகத்தினையும்,நோக்கும் போது அங்கு பெண்களது நிலையானது இயல்பிலேயே இரண்டாந்தரத்திலேயே இன்றளவிலும் காணப்படுவதை அறியமுடிகின்றது. பொதுவாக பெண் என்பவள், ஆண்களுக்குக் கீழானவளாகவும், அடக்கு முறைகளுக்கு உள்ளாகின்றவளாகவும், ஆண்களது தேவைகளை நிறைவு செய்து அவர்களுக்கு சேவை செய்பவளாகவுமே காணப்படுகின்றாள்.

பெண்களது இந்நிலையானது, அரசியல், சமூக, பொருளாதார, கலாசார கோணங்களில் நோக்கப்படுவதனைப் போன்று இலக்கியங்களின் ஊடாகவும் நோக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வழி,மக்கள் உள்ளங்களிலும், நினைவிலும், நாவிலும், இயல்பாகவே பிறந்து, எழுத்துவடிவம் காணாது வாய்மொழியாகவே பயின்றுவருகின்ற நாட்டார் இலக்கியவகையினுள் ஒன்றான பழமொழிகளில் பெண்கள் பற்றிய கருத்துருவாக்கங்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதனைப் பார்க்கவேண்டியது கடப்பாடாகிறது.

காலங்காலமாகக் குடும்பங்களில் ஆணாதிக்கமே ஓங்கிவருகின்றது. பெண் என்பவள் இரண்டாம் இடத்திலேயே வைக்கப்படுகின்றாள். பெண்களுக்கு மதிப்புத் தரப்பட்டாலும் உரிமைகள் வழங்கப்படவில்லை என்பதனையும் அவர்களுக்குப் பலவிடயங்களில் மட்டுப்பாடுகள் வழங்கப்பட்டதையும், அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டதையும், பழமொழிகள் உணர்த்தி நிற்கின்றன. இத்தகைய அடக்கு முறைகள் கல்வி, கற்புநிலை, தொழில்நிலை, அடக்கம், அழகு, உறவுமுறை, ஆளுமை போன்ற இன்னோரன்னவழிகளில் பெண்களுக்கு உருவாக்கப்படுகின்றன.

ஆரம்பகாலத்தில் எமது சமுதாயத்தில் ஆண் மாத்திரமே கல்வியைக் கற்றுக்கொண்டு பலவழிகளிலும் முன்னேற வாய்ப்புகள் குவிந்தன. இதற்குப் பெண்ணும் அனுசரணையாகி இணைந்தாள். ஆனால், பெண்கல்வி மறுக்கப்பட்டது. ஆண் கையில் கல்வி அடைக்கலமானதால், பெண் இருளுள் விடப்பட்டாள், ஆண் அறிவுக்குரியவனென்றும்,பெண் இருள் சூழ வாழ்வதால், எதற்கும் அச்சமும்,கருணையும், இரக்கமுமே பூண்டவளென்றும் பிரமை ஏற்படுத்தப்பட்டு அவளை வீட்டுக்குள்ளே பூட்டிவைத்து குழந்தைபெறவும், வீட்டுவேலைசெய்யவும் பொருத்தமானவள் என அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டதன்மையினைப் பின்வரும் பழமொழிகள் உணர்த்திநிற்கின்றன.

“அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?”

**இரா. லோகிதா**



"பெண் புத்தி பின் புத்தி"
"அடுப்படியே திருப்பதி, அகமுடையானே குலதெய்வம்"

இவை ஆண்களை உயர்த்தியும், பெண்களைத் தாழ்த்தியும், கூறும் பழமொழிகளாகும். இங்கு பெண்கள் இழித்துரைக்கப்படுகின்றனர். ஆண்களே உயர் பிறப்புக்குரியவர்கள், பெண்களைப் பெற்றெடுத்தவர் வறுமையடைவர் என்பது போன்ற கருத்துடைய பழமொழிகளும் நிலவுகின்றன.

"ஐந்துபெட்டை பெற்றால் அரசனும் ஆண்டியாவான்"

என்ற பழமொழி பெண்பிள்ளை மீதான வெறுப்பு நிலையைக் காட்டுகிறது. பெண்ணே குடும்பத்தின் பொருளாதாரத்தைச் சீரழிக்கின்ற பிறவியாகக் கணிக்கப்படுகின்றாள். அதிகளவு செல்வம் படைத்தவனும், பெண்பிள்ளைகளைக் கூடுதலாகப் பெற்றெடுத்தால் வறுமை நிலையாளனாகப் போவான் எனப் பெண் கருதப்படுகின்றாள். இங்கு அவள் பிறவி எடுப்பதே அடக்கப்படுகின்றது.

மேலும், பெண்களது இயற்கையான அழகும், இயல்பான உணர்ச்சிகளும் கூட அடக்கப்படுகின்றன. பின்வரும் பழமொழி இதனை உணர்த்துகின்றது.

"கொண்டை பெருத்தவள் குலவழிக்கு ஆகாது
கூந்தல் பெருத்தவள் குடிவழிக்கும் ஆகாது"

இப்பழமொழியிலே ஒரு பெண்ணின், இயற்கை அழகே அவளது அடக்குமுறைக்குக் காரணமாக அமைகின்றது. அத்துடன், இத்தகைய இயற்கை அழகுடன் பெண்கள் இருப்பது சமூகத்தவரால் இழித்துரைக்கப்படும் நிலைமைக்கு அடிப்படையாகிறது. இவை பெண்கள் மீதான சமூகரீதியான கட்டுப்பாட்டையே காட்டுகின்றது.

"கையாலாகாத சிறுக்கி வண்ணப் புடவைக்கு ஆசைப்படலாமா?"

என்ற பழமொழியில் பெண்கள் இயல்பாகக் கொள்ளும் விருப்புகள், ஆசைகள் கூட அவர்களுக்கு மட்டந்தட்டி நிராகரிக்கப்படுகின்றன. இங்கு பெண்கள் எல்லைப் படுத்தப்பட்ட விடயங்களில் மாத்திரமே தமது விருப்பத்தைத் தெரியப்படுத்தலாம் என அவளது ஆசைகள் அடக்கப்படுகின்றன.

பெண்களைஅடிமைப்படுத்தியும், அவர்களைப் பால்நிலையால் வேறுபடுத்திக் காட்டியும் சமூக நிலைபேற்றை உருவாக்கினர். அக்கால மக்கள் ஆண்,பெண் வேறுபாட்டைப் பெரிதாகக் கருதி அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய பண்புகளைப் பெற்றவளே பெண் என்று பெண்மைக்கு இலக்கணம் வகுத்து பல விடயங்களிலும் பெண் அடக்குமுறையைக் கையாண்டனர்.

"பொம்பள சிரிச்சாப் போச்சு, போயிலை விரிச்சாப் போச்சு"

எனும் பழமொழியில் புகையிலையை விரித்தபின் அதனைப் பழைய நிலைமைக்கு கொண்டு செல்வது முடியாத காரியம் என்பதற்கு நிகராக பெண்கள் சிரித்தால், அவர்கள் அடக்கம் அற்றவர்களாக மதிக்கப்பட்டனர். இதேபோன்ற கருத்தைத் தரும் பழமொழி பின்வருமாறு:

"சிரிக்கும் பெண்ணை நம்பாதே"

இவற்றைவிட பெண்களது பேச்சுச் சுதந்திரமும், கருத்தைத் தெரிவிக்கும் உரிமையும், மறுக்கப்பட்டநிலையும் காணப்படுகிறது. இவை பெண்களுக்குத் தடைசெய்யப்பட்ட விடயங்களாகவே கருதப்பட்டன. எதிர்த்துப் பேசுபவள் அடக்கம் தவறியபெண் என்று தூற்றப்பட்டும், எதிர்பேசாதவள் தெய்வம் என்று போற்றப்பட்டும் பேதமைப்படுத்தப்படுகிறாள். இதனையே பின்வரும் பழமொழி விளக்கி நிற்கின்றது.

"பேசாமடந்தை பேசும் தெய்வம்"
"பிடிவாதமும் எதிர்வாதமும் பெண்களுக்காகாது"

மேலும், கல்வியைக் கையிலெடுத்துக் கொண்ட ஆண்கள் சமுதாயத்தைநோக்கிப் பல புதுவிடயங்களை உருவாக்கினர். ஆனால் பெண்கள் படிப்பறிவில் குறைந்தவர்கள் என்றும் அவர்கள் கூறுவது ஏற்கமுடியாதது என்றும்,கருதி பெண்களால் ஒருகாரியமும் ஆற்றவியலாது என்று அவர்களுடைய ஆளுமையை மட்டுப்படுத்தினர்.

இதனாலேயே,

"பெட்டைக் கோழி கூவிபொழுது விடியுமா?"

என்ற பழமொழி வழங்கலாயிற்று.

பெண்கள் கருணைமிக்க அழகிய சித்திரமாகவும், கவர்ச்சியின் மையமாகவும், என்றுமே இளமை ததும்பும் எழிலுடையவளா கவும் வரையறுக்கப்பட்டாள். ஆணின் காதலுக் காக ஏங்கும் பேதையாக, இல்லமும், கணவ னும், குழந்தையும், சுற்றமும் தவிர வேறெந்த சிந்தனைகளுமற்றவளாக இவற்றை இறுக்கமான மீறாத் தடையிடப்பட்டு தடைதாண்டாப் பத்தினி யாகப் பார்க்கப்பட்டாள். ஏனைய உணர்வுகள் யாவுமேஅடக்கப்பட்டு, அவளிடமிருந்து பறிக்கப் பட்டன. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, கற்பு என்பன அவளுக்கே உரியதானது. இதனைக் கீழ்வரும் பழமொழிகள் உணர்த்தும்.

"கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்"
"கணவனே கண்கண்ட தெய்வம்"
"கற்பெழில் மகளிர் கணவனை அகலார்"

பொதுவாகப் பெண்ணினம் ஒருவட்ட த்துக்குள்ளே அடக்கப்பட்டு, அவர்களுடைய செயற்பாடுகள், காதல் செய்தல், குடும்பப் பராம ரிப்பு, விருந்தோம்பல், சமையல், அலங்காரம், குழந்தைப்பேறு, தாய்மைஉறவு என்பன சிறப்புற் றனவாக அவர்களின் பெருமை இதற்குள்ளா லேயே நிகரற்றதாகப் பார்க்கப்பட்டு சமூகத்தில் பதியப்பட்டுவிட்டது. முாறாக அவர்களுக்கான முழுமைச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டது.

மேலும் பெண்கள் வீட்டிலிருந்து வெளியில் செல்வதற்கும், வெளியே நடமாடுவதற்கும் பல்வேறு குடும்ப சமூகக் கட்டுப்பாடுகளும், வரன்முறை களும் விதிக்கப்பட்டன. ஆரம்பகாலங்களில் பெண்கள் பருவமடைந்தால் வெளியில் செல்வது கூடாததாகக் கருதப்பட்டது. வீட்டோடு இருப்பதே அவளுக்கான இலட்சண மாகக் கருதப்பட்டது.

"தாயைச் சந்தையில் கண்டால்
மகளைவீட்டில் பார்க்கத் தேவையில்லை"

இப்பழமொழி, இவ்வாறான பெண் இலட்சணத்திலிருந்து தவறும் பட்சத்தில் இழிவாக நோக்கப்படுவதனைக் காட்டுகிறது.

"பாலைப் பார்த்துப் பசுவைக் கொள், தாயைப் பார்த்துப் பெண்ணைக் கொள்"
"நூலைப் போல சேலை, தாயைப் போலபிள்ளை"
"தாய் எட்டடி பாஞ்சா, மகள் பதினாறடி பாய்வாள்"

போன்ற பழமொழிகள், பெண் பற்றிய சமூகக்கருத்திலிருந்து அவள் விலகும் போது அவளுக்குக் கிடைக்கும் அவப்பெயர், அவளது பெண் பிள்ளைகள் மீதும் செல்வதைக் கூறுகின்றன.

மேலும், பெண்கள் சாகும் வரை மிகுந்த கற்புடன் இருக்கவேண்டும் எனவும் கற்புநெறியா லேயே அவளை கணவன் நாடுவான் எனவும் பழமொழிகள் குறித்துநிற்கின்றன.

"கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு தானே வரும்"

இங்கு 'கரும்பு' எனப் பெண்ணைக் குறிப்பிட்டு அவள் கற்புநெறியில் ஒழுகுபவளாக இருந்தால், ஆண் அவளை நாடுவான் எனப்படுகின்றது.

"பெண்சாதி இறந்தால் புதுமாப்பிள்ளை"

என்ற பழமொழி பெண்களது விதவைத் திருமணத்தை மறைமுகமாக அடக்கி, ஆண் களது புதுவாழ்வை ஆதரிக்கின்றது. கணவன் இறந்தால் மனைவி மீள்திருமணம் செய்யாது, விதவை நோன்பு நோற்றிருக்க வேண்டும். ஆனால், ஆண்கள் மனைவியை இழந்தால், அவர்கள் புதுமாப்பிள்ளையாவர் என்பதை சமூகம் ஏற்றுக்கொண்டதன்மை யினைக் குறித்து நிற்கின்றது.

எனவே ஒட்டுமொத்தமாக நோக்கும் போது, இன்றைய நூற்றாண்டளவிலான வரலாற் றினை நோக்கும் போது, பெண்களது சாதனை கள், செயற்பாடுகள் என அனைத்துமே இருட்ட டிப்புச் செய்யப்பட்டோ அல்லது பெண்ணினத்தின் பலவீனம், குறைபாடுகளையோ மாத்திரம் குறிப்பிடுவது இயல்பாகிவிட்டது. காலப்போக்கில் இந்நிலையே அவள் மீது பெரும் அழுத்தத்தைக் கொடுத்து, பெண் மனைக்கானவள், இல்லக் கிழத்தியென்றும், அடுப்படியும், வீடுமே அவளின் உறைவிடமாகவும், உலாவிடமாகவும், கணவ னையும், பிள்ளைகளையும் கவனிப்பதே இவளது கடமையும் என்றாகிவிட்டது.

இன்றைய நவயுகத்தில் இத்தகைய புரிதல்களை உடைத்துக் 'கொண்டு சில சிந்தனாவாதிகள், சீர்திருத்தவாதிகள், முற்போக்கான செயற்பாட்டாளர்கள், தீவிரப் போக்குமிக்க ஆளுமை பெற்றபெண்கள், தமது புதிய எண்ணங்களை முன்னெடுக்கும் வகையில் சமூகத்தில் பெண்களுக்கெதிராக இவ்வாறு கையாளப்பட்டு வருகின்ற கருத்தாடல்களைப் புறந்தள்ளி சமூகத்தில் பெண்களை சீர்தூக்கிப் பார்த்து அவர்களுக்கெதிரான அடக்குமுறைகளைக் களைய ஆரம்பித்துள்ளனர். இவற்றுடன் இன்றைய பெண்கள், வைத்தியத்துறையில் சத்திரசிகிச்சை செய்தல், மற்றும் வானூர்தி ஓட்டுதல், விண்ணியல் ஆய்வுகள் ஆகிய துறைகளிலும் கூட தடம்பதிக்க ஆரம்பித்துவிட்டனர். இத்தகைய பிரயத்தனங்கள் நீண்ட இருளில் புதைந்து கிடந்த பெண்ணினத்திற்கு பிரகாசம் மிக்க ஒரு விடியலாகவே அமைகிறது.

ஆகவே நம் முன்னோர்கள், கூறிவைத்த கருத்துக்கள் புதைந்த பழமொழிகளில் பெண்கள் பற்றிய மேற்போந்தகருத்துருவாக்கங்கள் தற்காலச் சூழலுக்கு எத்தகையவிதத்தில் பொருந்துகின்றது என்பதையறிந்து மென்மேலும் அவற்றிலிருந்து விடுபட்டு ஆண்-பெண் சமத்துவத்துடன் கூடிய புதிய உலகை உருவாக்க முனையவேண்டியது காலத்தின் தேவையாகும்.

**உசாத்துணைநூல்கள்**


1. அம்மன்கிளி. மு, (2007), இலங்கைத் தமிழரிடையேவாய்மொழி இலக்கியம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
2. பாண்டியன். எஸ், (1998), தமிழில் பழமொழி இலக்கியம், ஸ்டார் பிரசுரம், சென்னை.
3. ஞானசேகரன். தி, செப்டெம்பர் (2008), ஞானம்- கலை இலக்கியச் சஞ்சிகை, யுனிஆர்ட்ஸ் லிமிட்ட், கொழும்பு.
4. முத்துமீரான். எஸ், (2005), இலங்கைகிராமத்து முஸ்லிம்களின் பழமொழிகள், நேஷனல் பப்ளிஷர்ஸ், தியாகராஜ நகர், சென்னை.


என்னில் எதுவுமே இல்லை
அனேகதடவைகளில் -நான்
நிர்வாணமாய் நின்றுகொண்டிருக்கிறேன்
எனக்குப் பயமாய் உள்ளது.

காலங்கள் செல்கிறது
காலங்கள் செல்கிறது
இன்னும் என்னைப் பற்றி
நான் சொல்லவேயில்லை

எனக்கானஅளவுகளை
எதைப்பார்த்துஎடுக்கிறீர்களோ
"இதுதான் உன் சட்டை
என்று தருகிறீர்கள் ,
நான் போடுகிறேன்

கையில் இறுக்கும்
இல்லாவிட்டால 'நெஞ்சில்...
இல்லாவிட்டால் வயிற்றில்
எல்லாம் சரிவந்தால் மனதில்..
அளவுபோல் சிரித்தபடி நான்..

உங்களுக்குத் தெரியாது
தனிமையில் அதையெல்லாம்
களைந்தெறிந்துவிட்டு
நான் நிர்வாணமாய் நிற்பது
நிர்வாணம் அது சுகமானது.

உங்களுக்கு
தெரியாது



- விஜயலட்சுமி

# வாசிப்பும் பெண்களும்



-பத்மா சோமகாந்தன்

யாவரும் அநேகமாக ஏதோ ஒரு வகையான நிலையில் தொழில் பார்ப்பதோடு ஓரளவு வருவாயைப் பெற்று வாழ்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. எனினும் தொழில் பார்க்கும் பெண்கள் இரட்டைக்சுமையால் பாரம் தாங்காது உரத்துப் பேசுவதையும் நாமறிவோம். ஆனாலும் வீட்டுவேலை, தொழில் என இருவேலைகளையும் பொறுப்பாக ஏற்றுக் கொண்டும் வாசிப்பதா எனக் கேட்டு நெற்றியைச் சுருக்கி முறைப்பதையும் என்னால் உணர முடிகிறது. அதேவேளை சேரனைப் படித்தாயா அனாதைப்படித்தாயா, எஸ். ராமகிருஷ்ணன் தமிழ்நதி, ராஜம்கிருஷ்ணன், சுந்தரராமசாமி, ஜெயமோகனை வாசித்தாயா என ஆர்ப்பாட்டம் போடும் கூட்டம் ஒருபக்கம் புத்தகங்களா அவற்றைப் புரட்ட எங்கை நேரம்? இல்லை இவற் றைப் படித்துத்தான் என்னத்தைப் புரட்டப்போறம் என அங்கலாய்ப்போரும் ஒருபுறம். காலைமாலை சதா புத்தகத்தோடேயே காலத்தைப்போக்கு வோரையும் நாம் தவறவிட்டதில்லை. இப்படியாக நூல்களைப் பயன்படுத்துவோர் இருந்தாலும் அவர்களின் தொகை கணிசமான அளவு குறைவென்பதே கண்கூடு.

சிலர் நாம் கல்வியில் உச்சநிலையை எட்டிவிட்டோம். இன்னுமின்னும் படிக்கவேண்டிய தேவையில்லையேயென்ற தப்பபிப்பிராயத்தோடும் உள்ளனர். இதுவெறும் தவறாகும். கல்வியில் உயர்ந்தோராயினும் அவர்கள் சித்தியெய்திய நிலை அந்தத்துறையில் அவர்களுக்கு ஆற்றலுண்டு என்பதும், அதற்குமிகுந்த தகுதியானவர்கள் இவர்கள் என்பதையும் முத்திரையிட்டுக் காட்டுவதே பரீட்சைப் பெறுபேறுகளின் அத்தாட்சிப்

புத்தகங்கள் அறிவின் திறவுகோல்கள் ; வாழ்க்கையில ஒளியேற்றிவைப்பன நூல்களே. புத்தகங்கள் மக்களைனைவரதும் பிரச்சினைகளைத் துரிதகதியில் தீர்ப்பதற்கு உதவுவன. அறிவார்ந்த நூல்களில் அறிஞர்களதும் ஆழ்ந்த சிந்தனையாளர்களினதும் அனுபூதிமான்களும் ஆத்மாக்களே சொல்லாகவும் வசனங்களாகவும் நம்முடன் பேசுகின்றன. எனவேதான் இத்தகைய அரிய கருவூலங்களைக் கொண்ட நூல்களைச் சஞ்சிகைகளைப் பத்திரிகைகளை வார, மாத, காலாண்டு அரையாண்டு இதழ்களைப் பெண்களாகிய நாம் எவ்வாறு நேர்கொள்கிறோம் ; பயன்படுத்துகிறோம் என்பதைப் பற்றிச் சிறிது சிந்தித்து அலசிப் பார்ப்பது சவையான அனுபவமெனக் கருதுகிறேன்.

இலங்கையிலே கல்விகற்ற பெண்கள் 90% என அறிக்கைகள் பேசுகின்றன. கற்றவர்கள்

பத்திரங்கள். வைத்தியமோ பொறியியலோ, சட்டமோ எத்துறையானாலும் அவர்கள் அதிலே காலடி வைக்கத் தகுதியைப் பெற்றுவிட்டன ராயினும் அனுபவம், செயற்பாடு என்பன மேற்கொண்டும் சில நுட்பமாக ஆற்றலைப் பெற்றுத்தரும். இவற்றையெல்லாம் கூட நாம் பல நூல்களை அலசி ஆராய்ந்து கற்பதனால் அவ்வத் துறையில் பொதிந்து கிடக்கும் நெளிவுசுளிவுகளை அல்லது நாம் முன்பு கற்கத்தவறியவற்றை வாசிப்புகள் மூலம் விருத்தியடையலாம். அல்லாம லும் அடிப்படைச் சிந்தனையிலிருந்து புதிய புதிய எண்ணங்கள் கிளர்ந்தெழுவதுபோல அனுபவமும் ஆற்றலும் மிக்கோர் படைத்த நூல்களை நாம் வாசிப்பதனால் நமக்கும் புதிய சிந்தனைகள் கிளர்ந்தெழ வாய்ப்புக்கள் ஏற்படும். காரணம், "புத்கமென்பது வெறும் அச்சடிக்கப்பட்ட காகித மல்ல. அது மனிதவாழ்வின் அழியாத நினைவுத் திரட்டு. எல்லையற்ற அனுபவங்களை நினைவு களைத் தொகுத்து ஆவணப்படுத்தி வைத்தி ருப்தே புத்தகங்களின் இருப்பிற்கான முதற் காரணம். அது என்றும் மாறாதது". என்ற கூற்றை ஒரு ஆங்கிலேய அறிஞர் விளக்கமாக எடுத்து உரைத்துள்ளான்.

பெண்களைப் பொறுத்தளவில் அவர்கள் மனம் வைத்தால் நன்றாக நிர்வாகத்திறமை மிக்க பெண்களாகவும் இனம் காட்டிக் கொள்ளமுடியம்; அதேவேளை மனம் அடங்கி ஓரிடத்தில் அமர்ந்திருந்து நீண்டநேரம் புத்தகம் படிக்கவும் முடியும். இளம்பெண்கள் பொதுவாகக் கல்லூரி, பல்கலைக்கழக மாணவிகள் பாடங்களில் ஆண் களை ணவிட அதிகமாச் சித்தியடைவதன் இரகசியம் இதுதான். ஆனால் பாடநூல்களை மாத்திரம் உருப்போடல் மேலதிகமான வாசிப்பு என்று கருதிவிடமுடியாது.

இலங்கையில் கல்வியியலாளர்கள் பொதுவாகப் பள்ளிமாணவர்கள் அனைவருமே வாசிப்புப்பழக்கத்தைத் தொடர்ந்து மேற்கொள் வேண்டுமென்ற நிலைப்பாட்டில் அரசு பாடசாலை களில் கீழ்வகுப்புகள் தொடக்கம் 13ம் ஆண்டு வரையுள்ள மாணவரின் வாசிப்பை ஊக்கவிக்கப் பாடசாலைகளில் நூல்நிலையங்களை அமைத்து ள்ளதோடு, வருடாவருடம் வெளிவரும் நல்ல நூல்களைக் கொள்வனவு செய்வதற்காகப் பெருந் தொகையான பணத்தையும் கொடுத்துவருகின் றது. எனவே தற்போது சகல பாடசாலைகளிலும் மாணவர் நலம்கருதி நூல் நிலையங்களும், அதற்கான பாடநேரத்தை ஒதுக்கியும், அவர்க ளுக்கேற்ற நூல்களையும் வருவித்தும் வாசிப்பினை ஊக்குவிக்கின்றது.

இத்தகைய பழக்கத்தை தொடர்ந்து பெண்கள் வாசிப்பதற்கான தூண்டுதல்களை மேற்கொள்ளப் பல நடைமுறைச் சிக்கல்கள் தடையாக அமைந்துள்ளன என்பதையும் இத் தருணத்தில் நாம் மனங்கொள்ளவேண்டும். ஒன்று குடும்பம் என்ற அமைப்பின் முக்கிய பங்காளியாகப் பரம்பரை பரம்பரையாகப் பெண்ணே பொறுப்பேற்றுள்ளமையால் குழந்தை கள், கணவன், உறவினர், கொண்டாட்டங்கள், கலாசார சம்பிரதாயங்கள் என ஏராளமான அவளது நேரம் கொள்ளையடிக்கப்படுகின்றது. இது தவிர அவள் மனமொருமித்து வாசிக்கக் கூடிய சூழ்நிலை, அவள் விருப்பிற்கேற்ற வகையிலான நூல்கள், அவற்றைப் பெற்றக்கொள்ள நூல்நிலை யங்கள், போக்குவரத்து போன்ற வசதிகளென்பன அருகியே உள்ளன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

எனினும் எத்தகைய நெருக்கடியினு ள்ளும் மனம் கொண்டால் இடமுண்டு என்பதற் கிணையச் சில பெண்கள் ஆர்வம் மிக்கோராய் வெகுதுணிச்சலுடன் தமது வாசிப்புப் பயணத்தை வெகு சிறப்பாக மேற்கொள்வதையும் நாம் இனம் காணமுடியும். சிலர் நூல்களைத் தாம் வாசிப்பதன் மூலம் தாம் பெறும் மேலதிக அறிவைவிட, தமது அறியாமையின் ஆழத்தை தெளிவுறத் தேர்ந்து கொள்ள முடியும் என்றும் குறிப்பிடுவர்.

பெண்ணுக்கு சமத்துவம் வேண்டுமென என்னதான் நாம் சத்தம்போட்டாலும், பழைய நிலையிலிருந்து கல்வியால் நாம் ஓரளவு உயர்ந்து விட்டோம் எனக் கருதினாலும் பொதுவாக சமூகத் தில் இடம்பெறும் அறிவார்ந்த விடயங்களிலெல்லம் கூடச் சமத்துவமான நிலையில் பெண்கள் பங்கேற்கிறார்களோவென்றால், இலைமறை காயாக அங்கேயும் இங்கேயுமென ஒரு சில பெண்கள் முகம் காட்டுகிறார்களே தவிர

ஆண்களுக்குச் சமமான அளவில் பெண்களும் பங்குகொள்ளுகின்றார்களோ? என்றால் அது கேள்வியடையாளம் தான். ஒரு சில தமிழ் இலக்கிய விழாக்கள், விவாதங்கள். கருத்தரங்கங் கள், நூல்வெளியீடுகள், விமர்சன அரங்குகள் இவற்றிலெல்லாம் கூடப் பார்வையாளராகப் பெண்களின் தொகை சமமாக இருப்பதும், ஒரு சிலவற்றில் அறவே இல்லாமலிருப்பதும் பங்கா ளராகப் பெண்கள் இல்லாமலிருப்பதுமே விந்தையாகப்படுகிறது. கல்வியோடு மிக நெருக்க மான ஆசிரியத் தொழிலிலே 52 பெண்களும், 48 ஆண்களும் கடமையாற்று வதாக அறிக்கைகள் கூறுகின்றன. அப்படியிருந் தும் கல்வியோடு தொடர்பான பாடநூல்களோடு சம்பந்தமான இத்தகைய அரங்குகளில் பெண்கள் தம்முத்திரையைப் பதிக்காதிருப்பது பாரதூரானது தவறென்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டாமா?

பரீட்சைகளில் நன்கு சித்தியெய்தித் தமது தொழிலைக் கண்ணியத்தோடு காப்பாற்றிக் கொள்ளும் இவர்கள் அன்றோடு தாம் படித்த நூல்களை வைத்துவிட்டு மேற்கொண்டு தேடலி ன்ற ணியிருக்கிறார்களோ என எண்ணத் தோன்றுகிறது.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் சமீபத்தில் "தமிழால் ஒன்றிணைவோம்" என்ற தொனிப் பொருளில் இடம்பெற்ற இலக்கிய விழாவில் பேசிய தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு. ம.ராசேந்திரன் "ஒரு புத்தகத்தை நீங்கள் படிக்கிறபோது அந்தப்புத்தகத்தோடு நீங்கள் உரையாடுகிறீர்கள். அந்தப் புத்தகத்தின் ஆசிரியரோடு உரையாடு கிறீர்கள். ஆங்காங்கே உங்களுக்குக் கேள்விகள் எழுகின்றன. அதற்குப்பதிலைத் தேடுகிறீர்கள். வாசிப்பது சமூகத்தில் நிகழ்கிற நிகழ்வுகளுக்கு எதிர்வினையாற்ற, அதில் உங்களைப் பங்கேற்க வைக்கும். அந்தப் பழக்கத்தை நாம் கைகொள்ள வேண்டும்". எனக் குறிப்பிட்டதுபோல உங்கள் குழந்தைகளுக்கும் உங்கள் மாணவருக்கும் கூட நீங்கள் புத்தி கூறுவீர்கள். அவர்களுக்குக் கூறும் இதே விக்ஷயத்தை நீங்கள் ஏன் கடைப்பிடிப்பதில்லை என்பதுதான் கட்டுரை யாளர் பெண்களிடம் கேட்கும் கேள்வி.

"ஆ பெண்களா? அவர்கள் நன்கு படித்திருந்தாலும் நூலியல், உலகியல் அறிவு போதியதாக அவர்களுக்கில்லையே!" எனும் கூற்றை மாற்றியமைக்கும் வகையில் வாசிப்பு மூலம் பெண்கள் தம் அறிவைப் பெருக்க வேண்டும். தாம் பெற்றுள்ள அறிவை விரிவடையச் செய்யவேண்டும். காலதாமதமாகியே பெண்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டமையால் இத்தகைய பின்னடைவு அதிகமான பெண்களுக்கு அனுபவமற்ற பாதிப்பை ஏற்படுத்தினாலும் கணிசமானளவு பெண்கள் தத்தம் துறைகளில் தமது முத்திரையைப் பதித்துள்ளனர் என்ற பாராட்டுகளையும் நாம் தெரிவிக்கும் இவ்வேளையிலே, மேன்மேலும் பெண்கள் தமது அறிவையும் ஆற்றலையும் தமது சுயமுயற்சி யினால் வளர்த்திட அறிவார்ந்த சிறந்த நூல்க ளைத் தமது கரங்களில் இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும். வாசிப்பே சுவாசமாக நூல்களையே தோழமையாகக் கொள்ளும் அனைவர் வாழ்க் கையுமே ஒளிவீசி மிளிரும் என்பதில் இருகருத்துக்களுக்கு இடமேயில்லை.

பெண்கள் ஆண்களைப்போல் பொது நூலகத்திற்குச் சென்று பாலியல் தொல்லைகளை யெல்லாம் ஒருபக்கம் ஒதுக்கிவைத்துவிட்டு இரவு நீண்டநேரம் வரை வாசிப்பில் மூழ்கிவிட முடியாது தான். என்பதற்காக ஓய்வுநேரத்திலே குசினியில் அம்மாவுக்கு உதவியாகவோ அல்லது தொலைக் காட்சி, வானொலி போன்ற ஊடகங்களோடு மாத்திரம் நேரத்தைச் செலவழிக்காது அறிவை மேம்படுத்த அறிவார்ந்த நல் நூல்களோடு தம்மை இறுக்கமாகப் பிணைத்துக்கொள்ளவேண்டும்.

# பூங்காவில் குழந்தை

அழகிய காலை பொழுது!

பூங்காவில் ஒரு வயதான பெண்மணியும் அவருடைய மகனும் அமர்ந்திருந்தனர். அப்போது அங்கு ஒரு காகம் அவர்கள் அமர்ந்திருந்த இருக்கையின் முன்னுள்ள மரத்தின் மேல் அமர்ந்திருந்தது. அதைப் பார்த்த அந்த தாய் தன் மகனை அழைத்து "அந்த மரத்தின் மேல் அமர்ந்துள்ள பறவையின் பெயர் என்ன?" என்று கேட்டாள். அதற்கு அந்த மகன் "அந்தப் பறவை யின் பெயர் காகம் அம்மா..." என்று பதிலளித் தான். சற்று நேரம் கழித்து மீண்டும் சற்று ஆச்சரியத் தோடு தன் மகனை அழைத்து அந்த மரத்தில் அமர்ந்துள்ள பறவையின் பெயர் என்ன? என்று கேட்டாள்.

இம்முறை அந்த மகன் சற்று கடுப்பாகி, "காகம் தாயே..." என்றான்.



"சரி ... சரி;" என்று அமைதியானாள்.

மீண்டும் சற்று நேரம் கழித்து தன் மகனை அழைத்து, "அந்தப் பறவையின் பெயர் என்ன?" என்று கேட்டாள். இம்முறை தன் தாயிடம், "இது காகம் என்று கூடவா தங்களுக்கு தெரியாது, ஏன் இத்தனை முறை கேட்கின்றீர்கள்? என்றான்.

அதற்கு அந்த தாய்,

"மகனே நீ குழந்தையாய் இருக்கும் பொழுது உன்னை இதே பூங்காவிற்கு அழைத்து வருவேன். அப்போது இதேபோல் நீயும் இப்பறவையைப் பார்த்து இதன் பெயர் என்ன? என்று கேட்பாய். முதல் முறை கேட்கும் பொழுது உன் கன்னத்தில் முத்தம் பதித்து இதன் பெயர் காகம் என்பேன்".

சற்றுநேரம் கழித்து இதையே கேட்பாய். நானும் உன்னை முத்தமிட்டு காகம் என்பேன்.

மீண்டும் சற்றுநேரம் கழித்து இதையே கேட்பாய். நானும் மீண்டும் உன்னை முத்தமிட்டு காகம் என்பேன். இது தினமும் தொடரும் வேடிக்கை என்று அங்கிருந்து எழுந்து நடக்கலானாள்...

முதுமையும் ஒரு குழந்தைப் பருவமே என்று அப்போது தான் தன் தவறை உணர்ந்தான்.

"தாய்மை என்றும் நிகரில்லாதது".

-மஸீனா மசூர்

# காட்டு வளம் நாட்டின் சிறந்த வளம்

**அக்கீலா முனீர்** - தரம் 9, முஸ்லீம் மகளிர் கல்லூரி.



இயற்கையன்னை வஞ்சனையற்று பல இயற்கை வளங்களை எமக்கு வாரி வழங்கியுள்ளார். மழைவளம், மண்வளம், மலைவளம், நீர்வளம், கனியவளம், காட்டுவளம், வளிவளம் என அடுக்கிக் கொண்டே போகலாம். இம் மூலகங்களில் முக்கியத்துவம் நிறைந்த வளமாக காட்டு வளத்தினை எடுத்து நோக்கலாம். ஏனெனில் இவ்வளமானது மழைவளம், நீர்வளம், வளிவளம், கனியவளம், பிராணிகளின் வாழ்விடம், சூழற் சமனிலை போன்ற பல விடயங்களின் ஆணி வேராய்த் திகழ்கின்றது. ஆணிவேர் இல்லையேல் மரம் இல்லை. மரம் இல்லையேல் வளி இல்லை. "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்" என்பது முதுமொழி. இக் கூற்றுக்களின் மூலம் மரங்களின் முக்கியத்துவத்தை வெளிப்படையாகவே அறிந்து கொள்ளலாம். மனிதனின் எல்லாவித தேவைகளுக்கும் சூழலில் உள்ள இயற்கை வளங்களே இருப்பிடமாகும். "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்" என்றார் திருமூலர்.

எனவே காற்றுச் செல்வங்களைப் போற்றிக் காக்கப்பட்டு பயன்கொள்ளப்படுவது இன்றியமையாததாகும். ஆதிகாலத்திலே எமது நாடெங்கும் காடுகள் செறிந்து காணப்பட அவற்றுள் சில வானுற ஓங்கி வளர்ந்து பகக்குடை பிடித்து விளங்கின. சில கானகங்கள் மனிதனின் அடிச்சுவடு கூட தொடாத கன்னிக் காடுகளாய் விளங்கின. கருங்காலி, முதிரை, தேக்கு, பாலை, சமண்டலை, வேம்பு, மலைவேம்பு போன்ற விலை மதிக்க முடியாத உயர் சாதித்தருக்கல் நிறைந்திருந்தன. மேலும் குடியிருப்புப் பிரதேசங்களும் பயன்தரு மரங்கள் நிறைந்த காடுகளை அண்டிய தோற்றம் பெற்றன. இயற்கையோடு ஒட்டி உறவாடிய வாழ்க்கை முறையை கொண்டிருந்த அக்கால மக்கள் மரங்களை அரும் செல்வமாய் கருதினர். அன்றாடப் பயன்தரும் தென்னை, பனை, கமுகு, மா, பலா, ஈரப்பலா, இலுப்பை, வேம்பு, விளா போன்ற மரங்களை நட்டு தாமும் தம் சந்ததியினரும் பயன்களை நுகர்ந்து


அனுபவிக்குமாறும் வழி செய்தனர். வீதிகளின் இருபுறமும் வாகை, மாகோக்கனி, வேம்பு முதலிய நிழல் மரங்களை வளர்ப்பதை தர்மமாய் கருதினார்கள்.

ஈரவலயக் காடுகளின் செல்வாக்கினாலேயே எமது நாட்டிற்கு மழை வளம் தொடர்ச்சியாய் கிடைக்கப் பெற்றுக் கொண்டிருக்கின்றன. தொன்று தொட்டே உணவு, தளபாடம், மூலிகை போன்ற பல பெறுமதிமிக்க வளங்களை காட்டு வளம் நமக்கு ஈத்தளித்துக் கொண்டிருக்கின்றது. சூழற் சமனிலையைப் பேண அரும் பங்காற்றுகின்றது. மழைவளம் பெருகவும், வளி வளம் சிறக்கவும், மண் வளம் பேணப்படவும், அதுமட்டுமல்லாது இவ்வளங்களினூடாக பயிர் வளம் செழிக்கவும் துணை புரிகின்றது. உணவுற்பத்திக்கும் அரும் பங்காற்றும் இவ் வனவளம் இன்று துரிதமான முறையில் அருகி வருகின்றது.

தீர்க்கதரிசனமின்றி நாட்டின் உயிர் நாடியாக விளங்கும் இக்காடுகள் அழிவுறுவதனால் உண்டாகும் விளைவுகளே பயங்கரமானவை. விவசாயச் செய்கைக்காகவும் பெருகும் சனத்தொகைக்கேற்ப மாடிகளைக் கட்டவும், தளபாடம் செய்யவும் ஈவிரக்கமின்றி பதிலீடின்றி மரக்கொலை புரிகின்றோம். இச்செய்கைகளினால் ஏற்படும் விளைவுகளுக்கு நாமே தீனி போடுகின்றோம். பருவமழை இன்று எம்மைப் பரிதவிக்க வைத்து விட்டது. குளங்களும் வறண்டதோடு விளைநிலங்களும் பாரிய வெடிப்புகளுக்கு உண்டாவதற்கு முதற்காரணம், மழைக்கு முதற்காரணமாய்த் திகழும் காடுகளை அழிப்பதாகும். மின்னுற்பத்தி பாதிப்புற்று கைத்தொழில் உற்பத்தித் துறைகளையும் பாதிப்புறச் செய்கின்றன. மேலும் பரந்த மரங்களை வெட்டி வீழ்த்துவதனால் மண்ணரிப்பு, நிலச்சரிவு போன்ற அபாயங்களும் ஏற்படுகின்றன. இவற்றிற்கு அடிமை ஆகும் இயற்கைச் சமநிலையை பெரிதும் சேதப்படுத்தும் விடயமாக இது திகழ்கின்றது. இதனால் உணவுச் சங்கிலி அறுந்து விடும். மரங்கள் சூழலை மாசுறாது காக்கும் அருந்தொண்டு புரிவனவாகும். மரங்கள் இல்லையேல் ஒளித்தொகுப்பின் போது அவையுட் கொள்ளும் காபனீரொட்சைட்டின் அளவு வளிமண்டலத்தில் மிகுதியாகும். அதனால் சூழல் மாசடைந்த ஏனைய உயிரினங்களும் உயிராபத்துக்களை எதிர்நோக்க வேண்டியநிலை ஏற்படும். உயிரினங்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத பிரதான வாயுவின் செறிவு வளிமண்டலத்தில் குறைந்து விடும்.

எனவே, ஒவ்வொருவரும் காட்டுவளத்தை காப்பது எமது தலையாய கடமையாகும். தவிர்க்க முடியாத நிலையில் ஒரு மரம் வெட்ட வேண்டிய நிலை ஏற்பட்டால் பதிலாக குறைந்தது இரு மரங்களையாவது உண்டாக்கிய பின்பு வெட்டுவோம் என ஒவ்வொரு தனிமனிதனும் தனக்குள் திடசங்கற்பம் பூண வேண்டும். காடுகளை வளர்க்க முயற்சி செய்வது தேசிய பணியாகும். "நீர் இன்றி அமையாது உலகு" என்பார்கள். மரம் இன்றி நீர் அமையாது. மழைவளம் பெருக மரம் நட வேண்டும். எதிர்கால சந்ததியினர் சுபீட்சமாக வாழ நாம் தேடிவைக்கும் மூலதனமும், மூலவளமுமாக காடுகளை உருவாக்குவோம்.

காடுகளை உருவாக்கி எமது நாட்டை சுடர்விட்டு ஒளிரச் செய்வோம்.!



# கிறிஸ்மஸ் பரிசு



பாத்திமா சாரா ஹுசைன்

மாதா கோயிலின் முதல் மணியோசை அந்தப் பனிப் பொழிவை கிழித்துக் கொண்டு அந்தப் பகுதி முழுவதும் கணீர் என எதிரொலிக்க, கிறிஸ்மஸ் சிறப்பு திருப்பலியில் கலந்து கொள்ள மக்கள் குடும்பம் குடும்பமாக புறப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

"ஜெஸி, இன்றைக்கு குளிர் ரொம்ப அதிகமாக இருக்கிறது. இந்த ஸ்வெட்டரைப் போட்டுக் கொள்" என தன் மகளிடம் கெத்தரீன் கொடுக்க, "வேண்டாம் மம்மி, ஸ்வெட்டரைப் போட்டுக்கிட்டா கிறிஸ்மஸ் புது டிரஸ்ஸை மறச்சிடும்" என்றாள் ஜெஸி. "சரி, உன் விருப்பம்"என்ற கெத்தரீன் தன் கணவரோடு மகளையும் அழைத்துக் கொண்டு ஆலயத்திற்கு புறப்பட்டாள்.

மாதா கோயில் கோபுரம் பல வர்ண பல்புகளால் மின்னிக் கொண்டிருந்தது. சிலுவையில் கிறிஸ்மஸ் ஸ்டார் பொன்னிறத்தில் மின்னியது. பாடல் குழுவினர் கிறிஸ்தவப் பாடல்களை இசையோடு பாடிக் கொண்டிருந்தனர். "ரொம்பக் குளிர் வாட்டுது. மம்மியின் அட்வைஸ் படி ஸ்வெட்டர் அணிந்து வந்திருக்கலாமோ" என ஜெஸிக்குத் தோன்றியது. ஆலய வளாகத்தின் இருபுறமும் கையேந்துபவர்களின் கூட்டம் நிரம்பி வழிந்தது. அந்தக் கூட்டத்திலிருந்து ஒரு பெரியவரின் அபயக்குரல் கேட்டது. "அம்மா; தாயே, இந்தக் கண் தெரியாதவனை ஆலயத்தின் வளாகத்திற்குள் கொண்டு விட்டிடுங்க. குளிர் ரொம்ப வாட்டுதம்மா; இரக்கம் காட்டுங்கம்மா;" எனக் குரல் கொடுக்க, பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு பிச்சைக்காரர். "ஏய் பெரிசு; வாய மூடிட்டு இரு. இரண்டு கண்ணும் குருடு. கைகள் ரெண்டும் பழுதாப் போய்க் கெடக்கு. உன்ன யாரு கூட்டிட்டுப் போவாங்க;? பேசாம கெட.." என அதட்டினார். இவற்றைக் கவனித்த ஜெஸி, "டேடி அந்தப் பெரியவரைப் பார்த்தால் பாவமா இருக்கு. உதவி செய்வோமா? எனக் கேட்டாள். உடனே அப்பா லோரன்ஸ் "ஜெஸி சும்மா வா. அவர் கைகளைப் பார்த்தாயா? ஒரே தொழுநோய்" என்றார். அம்மா கெத்தரீனோ 'ஜெஸி உனக்கு வேற வேலையே இல்லையா? அவரைப் பார்த்தாலே அறுவெறுப்பா இருக்கு" என கடிந்து கொண்டார். பாவம் அந்தப் பெரியவருக்கு உதவ முடியவில்லையே என்ற கவலையோடு ஆலயத்துள் நுழைந்தாள் ஜெஸி. சிறுவர்களுக்கான இடத்தில் ஜெஸி அமர, பெற்றோருக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் ஜெஸியின் பெற்றோர் அமர்ந்தனர்.

இரண்டாம் மணி அடித்து முடிந்ததும் வருகைப் பாடலோடு, கிறிஸ்மஸ் திருப்பலி தொடங்கியது. ஆலயத்தின் அருட்தந்தை பிரான்ஸிஸ், திருப்பலி வழிபாட்டை நடத்திக் கொண்டிருந்தார். ஜெஸிக்கு ஆலயத்திற்குள் இருக்கவே பிடிக்கவில்லை. அந்தப் பெரியவரின் குரல் திரும்பத் திரும்ப அவள் செவியில் ஒலித்துக் கொண்டே இருந்தது. பெரியவருக்கு உதவ முடியாமல் போய்விட்டதே என மிகவும் வருந்திய அவள், இப்பொழுதும் ஒன்றும் கெட்டுப் போக வில்லை. நான் உதவி செய்திட பெற்றோர்கள் தற்போது தடுக்க முடியாது. நான் கண்டிப்பாக அந்தப் பெரியவருக்கு உதவ வேண்டும் என்ற முடிவோடு ஆலயத்திலிருந்து கிளம்பி வேகமாக வெளியே ஓடினாள். "தாத்தா, நான் உங்களுக்கு உதவி செய்யட்டுமா? வாங்கள்" என்றாள். பெரியவர் தட்டுத் தடுமாறியபடி எழுந்தார். அவரின் கைகளைப் பிடித்துக் கொண்டு ஆலயத்துக்குள் அழைத்துச் சென்றாள். "உன் பெயர் என்னம்மா?" எனப் பெரியவர் கேட்க "ஜெஸி லோரன்ஸ்" என்றாள். "நல்ல பேரு. நீ நல்லா இருப்பா" என வாழ்த்தினார். பெரியவரை வளாகத் துக்குள் விட்டுவிட்டு ஆலயத்திற்குள் சென்றாள் ஜெஸி. அவள் செய்தது அவளுக்கு மன நிறை வையும், மகிழ்ச்சியையும் தந்தது.

இரண்டாம் வாசகம் படித்து முடிந்ததும் அருட்தந்தை பிரான்ஸிஸ் தன் பிரசங்கத்தைத் தொடங்கினார். அப்போது, கோயில் உபதேசியார் ஒருவர் துண்டுச் சீட்டை அருட் தந்தையிடம் தந்துவிட்டுப் போக, அதைப் பிரித்துப் படித்த பின் தன் பிரசங்கத்தைத் தொடர்ந்தார். "அனைவ ருக்கும் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்! இறைவன் அனைவருக்கும் இதயத்தைப் படைத்துள்ளார். அதில் கருணையையும் வைத்துள்ளார். அந்தக் கருணையை உரியவருக்கு உரிய நேரத்தில் காட்டுகிறோமா? அனைவரும் யோசிக்க வேண்டும். அப்படிச் செய்பவர்கள் தான் உண் மையான இதயம் படைத்தவர்கள். அன்னை தெரேசா சேரி பிள்ளைகள் மீதும், பிணியாளிகள் மீதும், குக்ஷ்டரோகிகள் மீதும் கருணை காட்டினார். அதனால் தான் அவர் புகழ் உலகமெங்கும் பரவியது. கத்தோலிக்க இறைமக்களே! என்னுடன் திருப்பலியில் பங்கு பெறும் அருட்தந்தை பெலிக்ஸ் எங்கே? என்ன சம்பந்தம் இல்லாமல் பேசுகிறேன் என நினைக்கிறீர்களா? நிச்சயம் இல்லை. சம்பந்தம் இருக்கிறது. கிறிஸ்மஸ் தினத்தன்று சபை மக்களுக்கு ஒரு போட்டி நடத்தப்படுகிறது. அப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு மாதா உருவம் பொறித்த தங்க நாணயம் பரிசாக வழங்கப்படும். அருட்தந்தை பெலிக்ஸ் முற்போக்கு எண்ணம் கொண்ட இளம் துறவி. எதையும் வித்தியாசமாகச் செய்து நற்செய்தியை பரப்ப வேண்டும் என நினைப்பார். மக்கள் மனதில் இரக்கம், கருணை, தயவு போன்றவற்றை வளர்க்க முயற்சிப்பார். அதனால், இக்கிறிஸ்மஸ் தினத்தில் ஒரு புதுமையான போட்டியை அவரே முன்நின்று நடத்தினார். நீங்கள் அனைவரும் ஆலயத்திற்கு வரும் வழியில் ஒரு கண் பார்வையற்ற, குக்ஷ்டம் பிடித்த பெரியவரை கண்டீர்கள் அல்லவா? அவர் வேறு யாருமல்ல, அருட்தந்தை பெலிக்ஸ் தான். இப்போது பீடத்தில் உங்கள் முன் அவர் தோன்றுவார் என்று அருட்தந்தை பிரான்ஸிஸ் அறிவிக்க, பெலிக்ஸ் பீடத்தில் தோன்றி தன் ஒப்பனையைக் கலைந்தார். சபை மக்களின் கரகோஸம் ஆலயம் எங்கும் எதிரொலித்தது.

"நம் மகள் இந்த பெரியவருக்குத் தானே உதவ வேண்டும் என்றாள். நாம் அவளை தடுத்து விட்டோமே. நம் மகளின் எண்ணப்படி உதவி செய்திருந்தால் போப் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப் பட்ட மாதா உருவம் பொறித்த தங்க நாணயம் கிடைத்திருக்குமே!" என ஜெஸியின் பெற்றோர் நினைத்துக் கொண்டிருக்க, அருட் தந்தை பிரான்ஸிஸ், "போட்டியில் ஒரு சிறுமி மட்டுமே வெற்றி பெற்றிருக்கிறாள். அந்தச் சிறுமி லோரன்ஸ் கெத்தரீன் தம்பதியரின் ஒரே மகள் ஜெஸி" என அறிவிக்க, சபையினரின் பலத்த கரகோக்ஷத தோடு பீடம் ஏறினாள் ஜெஸி. அவளுக்கு மாதா உருவம் பொறித்த தங்க நாணயத்தை வழங்கி ஆசீர்வதித்தார்கள்.

ஜெஸிக்கு கிடைத்த கிறிஸ்மஸ் பரிசு, நாமும் கருணை உள்ளதோடு வாழ வேண்டும் என்று உறுதிமொழி எடுக்க அங்குள்ளவர்களுக்கு உதவியது.



# குடும்பசுகாதாரக்கல்வி அடிப்படையிலான பெண்களுக்கான வலுவூட்டல்

க. ஜீவரதி

**உ**லகின் எந்தப் பகுதியை எடுத்துக் கொண்டாலும் மனிதன் தனியாகப் பிறப்பது மில்லை, வளர்வதுமில்லை, வாழ்வதும் இல்லை, பிறப்பு தொடக்கம் மரணம் வரையி லான நிகழ்ச்சிகளி லும்; இவை இரண்டிற்கும் இடையிலுள்ள காலகட்டங்களிலும் இன்னொ ருவரது உதவியும், பல குழுக்களில் பங்கு பற்று தலும் பல தொடர்பும் உறவும் கொள்ளக்கூடிய முதலாவது குழுவாகவும் முதன்மையான குழுவாக வும் குடும்பம் இருக்கக் காணலாம்.

இக்குடும்பக் கட்டமைப்பும் குடும்ப உறுப்பினர்கள் தங்கியிருக்கும் வீட்டுச் சூழலுமே ஒருவருடைய எண்ணம், சிந்தனை, இலக்கு, ஒழுக்கம், நடத்தை, சமூக உணர்வு, இயலுமை போன்ற விடயங்களைத் தீர்மானிப் பதாக இருக்கிறது. ஒரு குடும்பம் நல்வழியில் மேம் பாடடைய வேண்டுமாயின் இன்றைய சூழலில் பெண்ணின் பங்களிப்பு மிக மிக இன்றியமை யாததாகக் காணப்படுகின்றது.

யுவதியாகவும், சகோதரியாகவும், மனைவி யாகவும், தாயாகவும், பாட்டியாகவும் குடும்பத் தில் பல பாத்திரங்களை வகிக்கும் பெண்ணா னவள் அலுவலகம், வீடு, சமூகம் சார்ந்த பொறுப்புகள் என பல்முனைச் சுமைகளுக்கும் ஆளாகி இருக்கின்றாள் என்பதை மறுக்க முடியாது. இதன்காரணமாக பலவித அழுத்தங் களிற்கும் ஆளாகின்றாள். இதனடிப்படையில் நோக்குகின்ற போது, பெண்ணிற்கான குடும்ப சுகாதார கல்வி அடிப்படையிலான வலுவூட்டல் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட வேண்டி யது தற்காலத்தில் அவசியமான தேவையாக உள்ளது.

வலுவூட்டல் (Empowerment) செயற் பாடானது, அபிவிருத்திக்கு மிக அவசியமா னது. தொடர்ச்சியான கல்வி வழிகாட்டல், அதன் மூலம் பெறப்படும் அறிவை மூலாதார மாகக் கொண்டதே வலுவூட்டல் ஆகும்.

அமைதியற்ற போர் சூழலினாலும், இடப் பெயர்வு, முகாம் வாழ்க்கை இவற்றினாலும் பெரிதும் பாதிக்கப்படுவது பெண்களே. குடும்பங்களின் சமூக, பொருளாதார பண்பாட்டு, கலாசார, கட்டமைப்புகள் சீர்குலைக்கப் படுவதும், தங்கிவாழும் சூழ்நிலைக்கும், அமைதியற்ற ஆதரவற்ற அவல வாழ்க்கைக்

குள் தள்ளப்படுவதும் பெண்களே. இவ்வாறான சூழ்நிலைகளால் பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன.

பெண்கள் பாரம்பரியமாக வாழ்ந்து அனுபவித்த சுற்றாடல் சூழ்நிலைகள், போர்ச் சூழல்கள், இயற்கை அனர்த்தங்களினால் மாற்றப்படும் பொழுது பேணி வந்த குடும்ப கட்டமைப்புகள் சீர்குலைக்கப்படுவதும்; பிள்ளைகளின் கல்வி, போஷாக்கு சுகாதார பழக்கவழக்கங்கள் சீரழிந்து போவதும் குடும்பங்களுக்குள் அமைதி குலைவதும், பிரச்சினைகள் உருவாகுவதும் பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைக்கு அத்திவாரமாக அமைகின்றது.

இதனால் ஏற்படுகின்ற குடும்ப பிரச்சி னைகள்; குடும்ப பிரிவுகள், விவாகரத்து சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டே செல் கின்றன. இதற்கு மேலாக சிறுமிகள் எதிர்நோக்கும் பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரிப்பதுடன் பெண்கள் குடும்ப வன்முறை களிற்கும் பலியாக்கப்படுகின்றார்கள். இத்த னைக்கும் மேலாக கலாசாரம், சமூக பண்புகள் என்ற கவசங்களுக்குள் சமூக, பொருளாதார அரசியல் அடக்குமுறைகளுடன் சீதன கொடுமைகள் என்றும் பாதிக்கப்படுகின் றார்கள். பெண்கள் என்றால் இவையெல்லாம் வாழ்வியலின் விதிமுறைகள் எனக்கூறி வன்முறை சுரண்டல்களினால் அவர்களின் உரிமைகளும், உறவுகளும் மீறப்படுகின்றது.

கிராமப்புறங்களில் வாழும் குழந்தைக ளின் கல்வி மற்றும் பாதுகாப்பு கேள்விக் குறியாகவே உள்ளது. ஊடகங்களில் நாளாந்தம் பெண் குழந்தைகள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படும் செய்திகள் அதிகரித்த வண்ணம் உள்ளதனை நடைமுறையில் கண்டுகொள்ளமுடிகிறது.

இவற்றிற்கான வழிகாட்டலின் அடிப்படையில் குடும்ப சுகாதார கல்வியின் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது. இதன்படி நோக்கும் போது சுகாதாரத்துக்கான உரிமையும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அத்தியாவசியமான உரிமையொன்றாகும். பெண்கள் தொடர்பாக இவ்வுரிமையைத் தொடர்புபடுத்துகின்ற போது மகப்பேற்று நலன் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

இலங்கை அரசு தாய்-சேய் நலன் தொடர்பாக பல சட்டங்களையும் நிர்வாக ஏற்பாடுகளையும் அவற்றை அமுல்படுத்துவதற்கான நிறுவனங்களையும் ஸ்தாபித்துள்ளது. இக்கொள்கை செயற்பாட்டில் சுகாதார அமைச்சின் பங்கு முக்கிய இடம் பெறுகின்றது. தாய்-சேய் நலன் திட்டம், மகப்பேற்று காலத்தின் போதும், பிரசவத்தை அடுத்து தாய் தொடர்பிலும், பிறந்த பிள்ளை, குழந்தைகள், பாடசாலை செல்லும் சிறுவர்களையும் நோக்கி செயற்படுகிறது. மிக அண்மையில் கற்பிணித் தாய்மார்களிற்கு 20,000/- ரூபாய் பணமும், கருவுற்று 6 மாதங்கள் முதல் குழந்தை பிறந்து 4 மாதங்கள் வரை 2000/- ரூபாய் பெறுமதியான சத்துணவுப் பொருட்கள் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் தாய்-சேய் நலன் தொடர்பாக நாட்டில் நிலவுகின்ற சட்டங்களையும், கொள்கைகளையும் பெண்கள் அறிந்து கொள்வதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

பின்தங்கிய இடத்திலிருக்கின்ற பெண்கள் மற்றும் தரமான, சுகாதாரமான வசதிகளைப் பெற இயலாத பெண்கள் மகப்பேற்று காலத்தின் போது பல்வேறுவகையான நோய்களை எதிர்நோக்குகின்றனர். அனை வருக்கும் சம வாய்ப்புகளை உறுதிப்படுத்திப் போதுமானளவு பொதுவைத்தியசாலைகள், வைத்தியர்கள் மற்றும் தரமான மருந்துப் பொருட்களை பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கவேண்டும்.

மேலும் போஷாக்கான உணவுகளை உட்கொள்ள வாய்ப்பற்று அல்லது தவறுகின்ற பெண்களின் ஆரோக்கியமும் பெற்றெடுக்கின்ற பிள்ளைகளின் ஆரோக்கியமும் பாதிப்படைகின்றது. இதனால் சுகாதாரத்துக்கான உரிமை மறுக்கப்படுகின்றது. வெறுமனே சட்டம் மற்றும் நிறுவனங்கள் எழுத்து வடிவில் இருத்தல் போதுமானதல்ல. வினைத்திறனுடன் கூடிய சேவைகள் மக்களுக்கு சென்றடைய வேண்டும்.

தேசியமட்டத்தில் பல நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதுடன், மாகாண மட்டத்தில் மாகாண சுகாதார சேவைகள் பணியகம் இவ்விடயங்களைக் கண்காணித்து வருகின்றது. குடும்ப சுகாதார பணியகத்தின் கீழ் செயலாற்றும் மருத்துவ தாதிகள், கர்ப்பிணிப் பெண்களின் வீடுகளுக்கு சமூகமளித்து அவர்களின் சுகாதார நலன்களை கண்காணித்தல், தேவையான வழிகாட்டுதல்களை வழங்கும் சேவை என்பன முக்கிய இடம்பெறுகின்றன. பெண்கள் தமக்குரிய சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொள்ள தொலைத் தொடர்பு வசதிகளும் உள்ளன.

கர்ப்ப காலம் மற்றும் பிரசவத்தின் போது பெண்ணுக்குரிய பாதுகாப்புகளை உறுதி செய்தல், குழந்தை பிறந்து ஒரு மாத காலப்பகுதியில் விஷேட பாதுகாப்புகளைப் பேணி வருதல், கல்வி நிலையங்களில் சுகாதார கல்வியை அறிமுகம் செய்தல், இன விருத்தி சுகாதாரத்திற்குரிய வசதிகளை வழங்குதல், தாய்-சேய் சுகாதார நிகழ்ச்சிகளைத் திட்டமிடல் என்பவற்றை சுகாதாரக் கல்வி தொடர்பான முக்கிய பணிகளாகக் குறிப்பிடலாம்.

மேலும்; ஒரு குடும்பம் ஆண்-பெண் எனும் இருபாலாரையும் கொண்டே அமைந்துள்ளது. ஆகவே அது தொடர்பான பொறுப்பும் பங்கு பற்றுதலும் இருதரப்பினருக்கும் பொதுவானதாகும் என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். இனவிருத்தி சுகாதார செயற்பாட்டில் பெண்களது உடல்நிலை, அவர்களது மன உணர்வுகளைப் புரிந்துகொண்டு ஆண்களும் பெண்கள் சார்ந்த குடும்ப சுகாதார நிலைமைகளிற்கு பங்களிப்புச் செய்ய வேண்டியது அவசியமாகும். இல்லையெனில் குடும்ப சுகாதார வலுவூட்டல் செயற்பாடானது உரியமுறையில் வெற்றியளிக்கும் எனக் கூறமுடியாது.

மேலும் ஆரோக்கியமான குடும்பங்களில் ஆரோக்கியமான பெண்கள் வாழும் போது நவீன மருந்து வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு இனப்பெருக்க சுகாதார சேவைகள் மூலம் அவர்கள் அதிகாரம்பெற முடியும். இதன்மூலம் எத்தனை குழந்தைகளை எந்த இடைவெளியில் பெற்றுக்கொள்ளலாம் என்று அவர்களால் முடிவெடுக்க முடிகிறது. இதன் வழியாகத் தனது குடும்பத்தின் நிதி நிலைமையை மேம்படுத்துவதிலும் ஆரோக்கியமான குடும்பம் மற்றும் ஆரோக்கியமான சுற்றுச் சூழலைப் பராமரிப்பதிலும் அவர்கள் பங்காற்ற முடியும்.

1970ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து மகப்பேற்று சிறுவர் சுகாதாரச் சேவைகளை வழங்கும் நடவடிக்கையானது முழு மொத்த சுகாதார விநியோக முறைமையில் பாரிய அழுத்தத்தை அடைந்து வந்துள்ளது. இந்த நடவடிக்கை நாடு முழுவதிலும் சிறந்த வினைத்திறன் வாய்ந்த குடும்ப சுகாதார உட்கட்டமைப்பு வசதிகளை வலுவூட்டுவதற்கான மிகவும் ஒருமுகப்பட்ட வொரு முயற்சிக்கு வழிவகுத்தது.

இந்தக் குடும்ப சுகாதார சேவைகள் மாகாண மற்றும் மத்திய சுகாதார அதிகார சபைகளினது ஒருங்கிணைப்பில் வழங்கப்பட்டு வருகின்றன. தேசியமட்டத்தில் இந்த குடும்ப சுகாதார பணியகமானது நாட்டினுள் மகப்பேற்று சிறுவர் சுகாதாரம் மற்றும் குடும்பக்

கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றின் திட்டமிடல், ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றுக்குப் பொறுப்பான சுகாதார அமைச்சின் மத்திய நிலையமாக விளங்குகின்றது.

கடந்த 200 வருடங்களாகத் தொடரப்படும் பெண்களின் கல்வியால் இலங்கை பலவிதத்திலும் மற்றைய தென்னாசிய நாடுகளை விட முன்னேறியிருக்கிறது. உதாரணமாக குழந்தைகள் ஆரோக்கியமாக வளரப் பெண்களின் படிப்பும் அதனால் அவர்கள் பெறும் பலவிதமான அறிவு நிலையும் உயர, தாய்-சேய் நலமும் உயர்ந்திருக்கிறது என்று சுகாதார திணைக்கள அறிக்கைகள் கூறுகின்றன.

அடுத்ததாகப் பெண்கள் கல்வியினூடாகப் பெறும் சுகாதார அறிவு பற்றி நோக்கும் போது, பெண்கள் சமுதாயத்தின் கண்கள் என்று முன்னோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்தக் கண்கள் தங்களுக்கும் தங்கள் சமுதாய முன்னேற்றத்துக்கும் வளம் கொடுக்கும் நல்ல பல பாதைகளை அவர்கள் பெறும் கல்வி மூலம் கண்டு தெரிந்து கொள்கிறார்கள். பெண்கள் கல்வித் துறையில் முன்னேற்றம அடையவேண்டிய அவசியம் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்குரிய அங்கீகாரம் உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும்; வறுமை, வீடு, பாதுகாப்பான சூழல் இன்மை, பெற்றோரால் கைவிடப்படல், பாலியல் ரீதியான பாதிப்புகள், பெண் பிள்ளைகள் தமது கல்வியைத் தொடரமுடியாத வகையில் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. உதாரணமாக பிள்ளைகள் அதிகமாகவுள்ள வீடுகளில் ஆண்பிள்ளைகள் படித்தால் போதும் பெண்பிள்ளைகள் திருமணம் செய்யப் போகின்றார்கள். எனவே, படிப்பு அவசியமில்லை என பாடசாலையை விட்டு விலகி விடும் சந்தர்ப்பங்கள் உள்ளன. இதன்காரணமாக பெண்பிள்ளைகளிற்கு பாடசாலையிலிருந்து கிடைக்கும் சுகாதாரம் தொடர்பான அறிவூட்டல்களைப் பெறமுடியாமல் போகிறது.

தற்காலத்தைப் பொறுத்தளவில் கல்வியில் ஆண்களைவிட இன்று பெண்கள் அதிக அக்கறையுடையவர்களாய் இருக்கின்றார்கள்; என்றாலும் திருமணத்தின் பின்னர் அல்லது அதற்குச் சற்று முன்பு வேலைக்குப் போவோர் தவிர, நம்முடைய பெண்கள் பெரும்பாலும் பொதுச் சமூக ஊடாட்டத்தைப் படிப்படியாகக் குறைத்துக் கொள்கின்றனர். புத்தக வாசிப்பு, உலக விஷயங்களை அக்கறையோடு அறிந்துகொள்ளுதல் என்பன அவர்களிடம் அறவே இல்லாமலாகி விடுகின்றன. பெரும்பாலான பெண்கள் தொலைக் காட்சி- தொடர்நாடகங்களுடனேயே தம்முடைய வாழ்வின் அல்லது ஓய்வின் பெரும்பகுதியை செலவழிப்பதைக் காண்கின்றோம். கணவனும், பிள்ளைகளும் மனைவியின் பொறுப்பற்ற தன்மையினால் வேதனையடைகின்றனர். இதுவும் குடும்ப சுகாதார அமைப்பை சீர்குலைப்பதற்கு ஒரு காரணியாக அமைகின்றது.

உலகின் பல பாகங்களில் பெண்கள்தான் தங்களுடைய குழந்தைகள். குடும்பத்தினருக்கு தேவையான உணவு, தண்ணீர் உள்ளிட்ட மற்றும் பல ஆதாரங்களை வழங்குகிறார்கள். எனவே, அவர்கள் இதைச் சரியாகச் செய்ய வேண்டும் என்பதற்காக இயற்கை குறித்த உள்ளார்ந்த புரிதல்களைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் இயற்கை வளங்களை நிர்வகிப்பதிலும் பாதுகாப்பதிலும் அவர்களே முன்னணியில் இருக்கின்றார்கள். சுற்றுச் சூழல் வளங்களை பயன்படுத்தும், நிர்வகிக்கும் திறன்களை பெண்களுக்கு வழங்கப்படும் கல்வி அதிகரிக்கிறது. இதன்மூலம் தங்கள் குடும்பம் மற்றும் சமூகத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் முடிவுகளை தடுப்பதற்கான அதிகாரத்தை கல்வி அவர்களுக்கு வழங்குகிறது.

நமது கிராமப்புறங்களில் மட்டுமல்லா மல் உலகெங்கலும் பெண்களும் சிறுமிகளும் நடையாய் நடந்து வீட்டுக்குத் தேவையான குடிநீரைக் கொண்டுவருகிறார்கள். உலகெங் கும் தண்ணீரால் பரவும் தொற்றுநோய்களால் ஒரு நாளைக்கு சராசரியாக நான்காயிரம் குழந்தைகள் இறந்து போகிறார்கள். இது குறித்த வழிகாட்டல் மற்றும் உதவிகள் அவசியமாக உள்ளது.

கல்விக்கான உரிமையில் பாலியல் கல்வி தொடர்பாக பெண்பிள்ளைகளுக்கு அறி வூட்டுதல் அவசியமாகும். ஏனெனில் தவறாக பாலியல் உறவினுடைய பிரதிகூலங்களைப் பற்றி அறியாமலிருக்கின்ற பெண்கள் அதன் மூலம் தமது கல்விக்கான உரிமையை இழந்துவிடுகின்றனர். பாலியல்கல்வி என்பதை உடல்சார்ந்த விடயம் என்ற வட்டத்துக்குள் இருந்து விடுவித்து, மருத்துவ அறிவியலாகப் பாடம் புகட்டும் பாலியல் கல்வி இன்று அவசியமாக உள்ளது.

மேலும் பெண்கள்- கல்வி, சுகாதாரம், பொருளாதாரச் சுரண்டல் தொடர்பான விடயங்களை அணுகுவதற்கு பலத்த சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. இன மோதலின் காரணமாக பெண்கள்- ஆண் துணையை இழந்ததோடு 80 வீதமானவர்கள் இடம்பெயரவும் நேரிட்டது. யாழ்மாவட்டத்தில் மட்டும் ஆண்துணையை இழந்த ஏறத்தாழ 29,000 பெண்கள் இளம்வயதினர் உட்பட தாமே தனித்து குடும்பச் சுமையைத் தாங்க வேண்டியவர்களாகவும், சமூகத்தின் பாதுகாப்பை வேண்டிநிற்பவர்களாகவும் உள்ளனர். இவர்க ளைத் தவிர கணவர் காணாமற் போனவர்கள் கூட அரை விதவைகளாக வாழ்கி ன்றனர். இவர்களிற்கு குடும்ப சுகாதாரக்கல்வி யின் வலுவூட்டல் அவசியம்.

இறுதியாக நோக்கும் போது, பெண் கள் சமூகக் கட்டுமானத்திற்கு ஆற்ற வேண்டிய பணி குடும்ப வாழ்விலிருந்தே தொடங்குகி ன்றது என்ற உண்மையை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதை நாம் புறக்கணிக்க முடியாது. ஆண்-பெண் இருசாராரும் சமூகத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும். அதை யாரும் மறுக்க முடியாது. ஆனபோதிலும் பிள்ளைகளின் உள விருத்தி, உடல் விருத்தி, வாழ்க்கைப்பழக்க வழக்கங்கள், சமூக ஊடாட்டத்துக்கான கல்வி, கலாசாரம் பற்றிய அடிப்படை விளக்கங்கள், ஒழுக்கம், குடும்ப உறுப்பினர்களைப் பாது காக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள் ளல், சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு, தன் குடும்பத்தையும், தன்னைச் சூழவுள்ள சுற்றுப்புறச் சூழலையும் பாதுகாத்தல் தொடர்பில் குடும்பத்தில் பெண்களின் பணி அளப்பெரியது. அதிலும் பெண்களின் கல்வி ஒரு காத்திரமான அறிவுத்தளத்தில் சமுதாயம் வளர உதவுகின்றது. ஒரு குடும்பம் நல்ல மாதிரி அமைய அந்தக் குடும்பத்தைக் கொண்டு நடாத்தும் பெண்களின் அறிவு உதவிசெய்கிறது. இன்றைய காலகட்டத்தில் பெண்களின் படிப்பு பலவிதத்திலும் வளர்ச்சி யடைந்திருக்கிறது. குடும்பத்தின் பொருளா தாரம், சுகாதார நிலைமைகள் சிறப்பாக அமையவும், நிம்மதியான வாழ்க்கை வாழவும் பெண்களிற்கு சுகாதாரக் கல்வி தொடர்பான வலுவூட்டல் மிக முக்கியமாகக் காணப்படு கிறது.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால்; பெண்கள் கல்வியில், ஆரோக்கியத்தில், வேலைவாய்ப்பில் முன்னேறி இருக்கின்றார்கள். அதேசமயம் அதையொட்டி நிறையச் சவால் களும் உருவாகியிருக்கின்றன என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். அந்தச் சவால்களை எதிர்கொண்டு ஜெயிப்பதற்கு ஆண்களது பங்களிப்பும் அவசியம். அப்போதுதான் பெண் கள் மட்டுமன்றி பெண்களைச் சார்ந்துள்ள அனைவரது நலனும் சிறப்பாக அமையும்.

# வருடாந்த சந்தா – பெண்

ஐரோப்பா, வட அமெரிக்கா,
அவுஸ்திரேலியா
**US$ - 8**
இந்தியா
ரூபா 500.00
இலங்கை
ரூபா 200.00

**சந்தா விண்ணப்பம் 20.................**
**பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்.**

பெயர் : ..............................................................
விலாசம் : ..............................................................
திகதி : ..............................................................

இத்துடன் காசோலை / மணி ஓடர் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் பேரில் அனுப்பி வைக்கிறேன்.

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
இல. 55, லேடி மனிங் டிறைவ்,
மட்டக்களப்பு,
இலங்கை.

**Suriya Women's Development Centre,**
No:55, Lady Manning Drive,
Batticaloa,
Sri Lanka.



ISSN : 1391-6122